முதன் முதலான குடும்ப அர்சியல் கலாசாரத்தின் தோற்றம் பக். 13

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34°c - 27°c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 215 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 14, செவ்வாய்க்கிழமை 28.06.2016

## ஜெனிவாவில் மங்கள நாளை விளக்க உரை

ஜெனிவா, ஜுன் 28
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நாளை புதன் கிழமை 5 நிமிடங்கள் உரையாற்றவுள்ளார் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர. நேற்று அவர் ஜெனிவாவை வந்தடைந்தார்.



நோர்வேக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் மங்கள சமரவீர, அங்கிருந்து உக்ரேனுக்கு சென்றார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஜெனிவாவை வந்தடைந்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபை பக்.25

# இலங்கை குறித்து இன்று ஐ.நாவில் வாய்மூல அறிக்கை

## போர்க்குற்ற விசாரணை, நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் விமர்சிக்கப்படும் ஆபத்து

ஜெனிவா, ஜுன் 28
போர்க்குற்ற விசாரணை, நல்லிணக்கம், அரசியல் தீர்வு என்பவற்றில் இலங்கையின் நல்லாட்சி அரசு கடந்த ஒரு வருட காலத்தில் எட்டியுள்ள முன்னேற்றம் குறித்து வாய் மூல அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பொதுச்செயலாளர் சையிட் அல்ஹுசேன் இன்று முன்வைக்கின்றார். இந்த அறிக்கையில் இலங்கை சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்தாலும் செய்ய வேண்டியவைகள் ஏராளம் உள்ளன என்றும், மேற்கொள்ளப்பட்டவை போதுமானதல்ல என்றும் விமர்சிக்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை தொடர்பான அறிக்கையை எதிர்வரும் மார்ச் மாதம் முன்வைப்பதற்கிடையில் கணிசமான முன்னேற்றத்தைக் கொழும்பு காட்ட பக்.26

## தொடர் உணவு தவிர்ப்பு போராட்டம் ஒரே நாளில் முடிவுக்கு வந்தது

### மஸ்தான் எம்.பியின் வாக்குறுதியை அடுத்து

யாழ்ப்பாணம், ஜுன் 28
பொருளாதார மத்திய நிலையத்தைத் தாண்டிக் குளத்தில் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று ஆரம்பிக்கப்பட்ட தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று மாலையே கைவிடப்பட்டது. வவுனியாவுக்கு வருகை தரும் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் இது பற்றிப் பேச்சு நடத்துவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் உறுதிமொழி வழங்கியதை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டது.
பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி, வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் பக்.25

## தனியார் பஸ் சேவைகள் இன்று வழமைக்குத் திரும்பும்

### போராட்டம் ஒரு நாளுடன் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 28
தனியார் பஸ் சேவைகள் இன்று வழமைக்குத் திரும்பும் எனச் சங்கம் அறிவித்துள்ளது. "எமது கோரிக்கைகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் தீர்வு வழங்கப்படுமென வடக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்தார். இதையடுத்து சேவைப் புறக்கணிப்புப் போராட்டத்தை இரண்டு வாரங்களுக்கு நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது" என்று வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.
பணிப் புறக்கணிப்புக் காரணமாக வடக்கு மாகாணம் முழுவதிலும் தனியார் பஸ் சேவைகள் நேற்று பக்.23

# போராட்டங்களால் நேற்று அதிர்ந்தது வடக்கு

## 4 இடங்களில் 6 நடந்தன

யாழ்ப்பாணம், ஜுன் 28
வடக்கில் நேற்றுப் பல்வேறு இடங்களில் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆறு போராட்டங்கள் நடந்தன. மீள் குடியமர்வு, காணாமற் போனோர் விவகாரம், சிறுவர் மீதான துர்நடத்தைக்கு எதிர்ப்பு, வவுனியா பொருளாதார மத்திய நிலைய விவகாரம், மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு, தனியார் பஸ்களின் சேவைப் புறக் கணிப்பு என்று நடந்த ஆறு போராட்டங்களால் அதிர்ந்தது வடக்கு.
வடக்கு மாகாணம் முழுவதிலுமான தனியார் பஸ்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டன. இதனால் இயல்பான போக்குவரத்து பாதிக்கப்பட்டது என்றும் நேற்று மாலை ஆளுநருடன் நடத்திய பேச்சை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (விரிவான செய்தி 2 ஆம் பக்கம்)
பலாலி - மயிலிட்டி மக்கள் தங்களது மீள்குடியமர்வை வலியுறுத்தி நல்லூர் கந்த சுவாமி கோயில் முன்பாகக் பக்.25



காணி விடுவிப்பை வலியுறுத்தி நடந்த கவனவீர்ப்பு

## மீண்டும் கைதானார் சஜின் வாஸ்

கொழும்பு, ஜுன் 28
பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் கைது செய்யப்பட்டார் சஜின் வாஸ் குணவர்த்தன. அவரை ஜுலை மாதம் 5 ஆம் திகதி பக்.25

## பொருளாதார நெருக்கடியை அரசால் சமாளிக்க முடியாது

### ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 28
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனின் வெளியேற்றம் இலங்கையின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனைச் சரிசெய்ய ஏனைய நாடுகளுடன் இலங்கை அரசு பக்.25

## காணியையே வீதியாக்கிவிட்டு விடுவிப்புப் பத்திரம் தந்தது இராணுவம்

### ஏமாற்று வேலை என வேதனைப்படுகிறார் வலி. வடக்கு வாசி

யாழ்ப்பாணம், ஜுன் 28
காணியை வீதியாக்கிவிட்டு அந்தக் காணியை விடுவித்ததாகத் தெரிவித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி பத்திரம் வழங்கினார் எனக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.



"எனது காணியை நான் பயன்படுத்த முடியாதவாறு வீதி அமைத்துள்ளனர். இவ்வாறான நிலையில் எனது காணி விடுவிக்கப்பட்டதாக பத்திரத்தை மாத்திரம் வழங்கியுள்ளனர்" எனத் பக்.25

## 97 கிலோ கஞ்சா சிக்கியது

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட 90 கிலோ 519 கிராம் கஞ்சா யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையினரின் தேடுதலில் பிடிபட்டது. அதனை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
"இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கஞ்சா கடத்தப்படுவதாகத் தகவல் கிடைத்தது. நேற்று அதிகாலை 3 மணியளவில் வளலாய் வடக்குக் கடற்கரைக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தோம். இதன் போதே இரு மூடைகளைச் சுமந்தவாறு இருவர் சென்றனர். அவர்களைச் சோதனையிட்ட போது கஞ்சா பிடிபட்டது" - என்றார் சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர். (விரிவு 05 பக்கத்தில்)

## அடுத்த நாள் திருமணம் வைத்துவிட்டு முதல் நாள் காதல் ஜோடி மூழ்கிச் சாவு

### குளத்தில் படகோட்டியவேளை பரிதாபம்





கொழும்பு, ஜுன் 28
ஆயிரம் கனவுகளுடன் இன்று செவ்வாய்க்கிழமை திருமண பந்தத்தில் இணையவிருந்த காதல் ஜோடி குளத்தில் மூழ்கி பரிதாபகர பக்.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வட மாகாணம் முழுவதும் நேற்று தனியார் பஸ் சேவைகள் இல்லை

## சேவைப் புறக்கணிப்புப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
வடக்கு மாகாணம் முழுவதிலும் தனியார் பஸ் சேவைகள் நேற்று முழு நாளும் இடம்பெறவில்லை. பொதுமக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். உரிய நேரத்துக்கு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது திணறினர். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்களில் நெரிசல்களுடனேயே பயணம் மேற்கொண்டனர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் சேவைப் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.


வவுனியாவில் நடைபெற்ற போராட்டத்தின்போது


கிளிநொச்சியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மக்கள்

தனியார் பஸ்களுக்கு 60 சதவீதமும், இலங்கை அரச பஸ் சேவைக்கு 40 சதவீதமும் என்ற விகிதாசாரத்தில் கடந்த 3 வருட கால முயற்சியின் பின் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை. அத்துமீறிய சேவையை நடத்தி வருகின்றனர். இது தொடர்பில் மத்திய அரசுடனும் மாகாண அரசுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தியும் எந்தவித பயனும் எட்டப்படவில்லை. பயணிகளின் பாதுகாப்பானபயணத்தைகருத்திற்கொண்டு எமது கோரிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை நாம் பணிப் புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளோம்- என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

போராட்டம் காரணமாக மாவட்டங்களுக்கு இடையிலான தனியார் போக்குவரத்துச் சேவை, மாவட்டத்திற்குள்ளேயான போக்குவரத்துச் சேவை இடம் பெறவில்லை. அரச பஸ்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டன.

வைத்தியசாலைக்கு செல்பவர்கள், பாடசாலை மாணவர்கள், அரச - தனியார் அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் எனப் பலரும் பஸ் தரிப்பிடங்களில் பல மணிநேரம் கால்கடுக்க காத்திருந்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவை மாத்திரம் இடம்பெற்றதால் அந்த பஸ்களில் எல்லோரும் முண்டியடித்துச் சென்றனர். நெரிசலுடன் பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதிக பயணிகள் காரணமாக தரிப்பிடங்களில் இருந்த பயணிகளை


மன்னாரில் நடைபெற்ற போராட்டத்தின்போது

ஏற்றிச் செல்லாத சம்பவங்களும் பதிவாகின.

வைத்தியசாலைக்கு அவசர தேவையின் நிமித்தம் செல்ல வேண்டியவர்கள், முச்சக்கர வண்டிகளுக்கு அதிக பணம் கொடுத்துச் சென்றதைக் காண முடிந்தது.


யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போராட்டத்தின்போது

தனியார் பஸ் உரிமையாளர்கள், யாழ். நகரில் உள்ள அவர்களது தரிப்பிடத்தில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர். பஸ்களின் முன்பாக வாசகங்கள் அடங்கிய பதாகைகளைக் கட்டியிருந்தனர். யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும் போராட்டம் நடத்தினர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மீள் குடியமர்வு செய்யப்பட்ட கிராமங்களில் அதிகளவில் தனியார் போக்குவரத்து சேவை மாத்திரமே நடைபெற்றது. சேவைப் புறக்கணிப்பினால் அந்தப் பகுதி மக்கள் கடுமையான அசௌகரி யங்களை எதிர்கொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், மரவட்ட மேலதிகச் செயலாளரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

(ற-5-21-101-56-ரி3-ரி7)

# சொந்த மண்ணில் மீள்குடியமர்த்துமாறு பலாலி - மயிலிட்டி மக்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
தமது சொந்த மண்ணில் மீளக்குடியமர்த்துமாறு கோரி பலாலி - மயிலிட்டி மக்கள் நல்லூரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தின் முடிவில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மனுவை யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் கையளித்தனர்.

மயிலிட்டி மீள்குடியேற்றக் குழுவும், வலி. வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கமும் இணைந்து இந்த கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆறு மாதங்களில் நலன்புரி நிலையங்களில்தங்கியுள்ளமக்களை அவர்களது சொந்தக்காணிகளில் குடியமர்த்துவேன் என்று கடந்த டிசெம்பர் மாதம் உறுதிமொழி வழங்கினார். காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.





மீள்குடியமர்வை வலியுறுத்தி நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தேங்காய் உடைப்புடன் போராட்டம் ஆரம்பமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறீதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தும் பதாகைகளைத் தாங்கியவாறு பேரணி ஆரம்பமானது. "இராணுவமே வெளியேறு", "வலி.வடக்கு மக்களை மீள்குடியமர்த்து", "போர் முடிந்தும் எமக்கு விடிவில்லையா", "ஐ.நா.வுக்கு காட்டுவதற்காக ஓரிரு காணியை விடுவித்து நாடகமாடாதே" என்று பேரணில் கலந்து கொண்டோர் கோசம் எழுப்பினர்.

பேரணி பருத்தித்துறை வீதியின் ஊடாக, நல்லூர் கோயில் பின் வீதியை அடைந்தது. அங்குள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனுக்கான மனுக் கையளிக்கப்பட்டது.

பேரணி அங்கிருந்து நல்லூர் கோயில் பின் வீதியூடாகவே ஏ-9 பிரதான வீதியை நோக்கி நகர்ந்தது. ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்ற பின்னர் மாவட்டச் செயலாளர் அலுவலகத்துக்கு போராட்டக்காரர்கள் சென்றனர். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனிடம் மனுக் கையளிக்கப்பட்டது.

மகிந்த அரசின் ஆட்சிக்காலத்தில் அதன் பங்காளிகளாக இருந்த ஈ.பி.டி.பியினர் கடந்த காலங்களில் மீள்குடியமர்வுக்காக நடந்த எந்தப் போராட்டங்களிலும் கலந்து கொள்ளவில்லை. நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ற-ஐ-5-101-106)

# தாதி மீது நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பு

## யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் உறுதிமொழியை அடுத்து நேற்று மாலை கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் பிற்பகல் 4 மணியுடன் முடிவுக்கு வந்தது. இன்று வழமைபோன்று மருத்துவர்கள் பணியில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பணிப்புறக்கணிப்பால் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சைகள் எதுவும் இடம்பெறவில்லை. நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

சத்திர சிகிச்சைக் கூடத்தில் மருத்துவர் ஒருவருக்கும் தாதி ஒருவருக்கும் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இரண்டு தரப்பினரதும் தொழிற்சங்கங்கள் ஏட்டிக்குப் போட்டியாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன. முதலில் தாதிய சங்கமும் பின்னர் மருத்துவ சங்கம் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டன.

சம்பந்தப்பட்ட தாதியை சத்திர சிகிச்சைப் பிரிவிலிருந்து மாற்றித் தகுந்த பிரிவு வழங்கப்படும் என்று பணிப்பாளர் கடிதம் கொடுத்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். போதனா வைத்தியசாலைக் கிளை தெரிவித்தது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மருத்துவர்கள் வழமைபோன்று பணியில் ஈடுபடுவர் என்றும் சங்கம் தெரிவித்தது.

பணிப் புறக்கணிப்புக் கைவிடப்பட்டுள்ளது என்று மருத்துவ சங்கம் நேற்றுப்பிற்பகல் 4 மணிக்கு அறிவித்தது. குறித்த தாதிக்குத் தகுந்த வேறு பிரிவை வழங்குவது என்றும் அவர் பற்றிய விசாரணைக் கோவை ஒன்றை அமைச்சுக்கு அனுப்ப வேண்டும் என்றும் மருத்துவ சங்கம் கோரியிருந்தது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது - என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

(ற-4)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016

- யூஸ் (Juice), சிறுவர்களின் ஆரோக்கியத்துக்குக் கேடானது என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள் அதனை வாங்கிக் கொடுக்காதீர்கள். யூஸ் ஒரு ஆரோக்கியமற்ற உணவு.
- பற்சூத்தை, வயிற்றோட்டம், பசியின்மை, தலையிடி, வயிற்று நோ கல்வியில் கருத்துச் செலுத்த இயலாமை என்பவை அதன் உடனடி விளைவுகள்.
- நீரிழிவு, கான்சர், ஆரோக்கியமற்ற தலைமுறை அதன் நீண்டகால விளைவுகள்.
- "புத்திசாலியான பிள்ளையின் தெரிவாக யூஸ் ஒருபோதும் இராது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதெனிய மீண்டும் தலைவரானார்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவராக வைத்தியர் அனுருத்த பாதெனிய மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்தது.

அனுருத்த பாதெனிய 6ஆவது முறையாகவும் குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். (ற-ஐ-5)

## தேவை

01. கனரக வாகன சாரதி
02. கனரக இயந்திர இயக்குநர்
03. டீசல் மெக்கானிக்
(முன் அனுபவம் தேவை)

தொடர்பு:
45, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மொத்த விற்பனை

நெல்லியடி நகரின் பிரதான பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பிரபல மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் உள்ள வாகன உதிரிப்பாகங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. மொத்த விலையில் 25% கழிவு வழங்கப்படும். அதே இடத்தில் தொடர்ந்து வர்த்தகம் செய்வதாக இருந்தாலும் அதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: (வ/22120) (11,17)
021 226 3233, 077 228 5978

## பதவி வெற்றிடங்கள்

2015 O/L or A/L எழுதிய மாணவர்களே!
எமது கிளைகளுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசத்தில் இருந்து சர்வதேச கம்ப னியில் பணிபுரிய ஆள் தேவை.
**வயதெல்லை 18-30**
**தங்குமிடம் உணவு வசதிகள் உண்டு**
**அனுபவம் அவசியமற்றது (இலவச பயிற்சி)**
**Supervisor, Administration Ass. Manager Management Trainees.**

தொடர்புகளுக்கு: 077 1363797
077 6644442 , 077 7009820

## அரியவாய்ப்பை நழுவவிடாதீர்கள்....!

**Desktop Pc & Laptop** hp DELL lenovo
6th Gen
Celeron / i3 / i5 / i7
ஆரம்ப விலை 49,000/= இருந்து
ஆரம்ப விலை 76,000/= இருந்து

**Printers** hp brother SAMSUNG
→ Inkjet printer
HP 1112 Printer - 3,900/=
Canon pixma ip 2870S - 3,900/=
HP 2135 (Print/ Copy/ Scan) Printer - 8,900/=
Canon 2570S (Print/ Copy/ Scan) Printer - 8,500/=
→ Laser printer
Hp 1102 Printer - 16,500/=
HL 1210w Wireless Printer - 13,500/=
Hp 201dw Printer- 39,000/=
→ Laser 3 in 1printer
CP 1510 (Print/ Copy/ Scan) - 23,000/=
Samsung Xpress M2070 (Print/Copy/ Scan) - 22,500/=

**Projector & Projector Screen**
SONY
Tripod Screen
Wall mount Screen
Electronic Projector Screen
Sony VPL DX111 - 68,000/=
(all size are available)

**CCTV Security Camera** KKBRO TOUCH YOUR LIFE
Wireless IP Camera Kit - 58,000/=
4CH / 8CH/ 16CH / 32CH/ NVR'S Available
2 வருட உத்தரவாதம்
AHD DVR 10,000/= இருந்து
AHD Camera 3,800/= இருந்து
Wireless IP Camera 9,500/=

**HomeTheatre Speakers** MiPAQ
2.1 → 3,800/= இருந்து
4.1 → 6,000/= இருந்து
5.1 → 7,000/= இருந்து
karooke - 17,000/= இருந்து
USB FM Bluetooth micro SD
Condition apply

MICRO PC SYSTEMS
No - 218, Hospital Road , Jaffna.
Jaffna : 218, Hospital Road, Jaffna 021 222 5893
Kilinochchi : 85A, Old Kachcheri Opposite A9 Road , Kilinochchi 021 228 5393
Vavuniya : 78, 2nd Cross Street 021 222 1969
E-mail - jaffna@micropcsystems.com / Web : www.micropcsystems.com
071 035 6065 / 077 396 3280 / 021 222 5893

## உளமார்ந்த வாழ்த்துக்கள்




கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் "உயர்த்தும் கரங்கள்" செயற்திட்டத்தின் ஊடாக

26.06.2016 அன்று ஆசி மடஅரசடி விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெற்ற ராஜா பிளாசாவின் மாதிரிக் கிராமம் பதினைந்து வீட்டுத்திட்ட நன்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வின்போது நன்கொடையாளர்

**பொன்மனப் பேராளன், கல்விக் கொடையாளன், செங்கைப்புரவோன்**
**திரு. இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின்
தன்னலங்கருதா மகத்தான சேவையினைப் பாராட்டி
**"சிவ தர்மவள்ளல்"**
**"பொன் மனத்திறலோன்"**
**"பதி வரோதயன்"**
என்னும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமைக்கு நாமும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விஸ்ராவிஷன் கலர் லாப்
347, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(J2479)(10.17)

## கேள்விக்கான கோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் **கீரிமலையில் மீள். குடியேற்றத்திற்காக அமைக்கப்படவுள்ள 150 வீடுகளுக்கான (அண்ணளவாக 550 சதுர அடி) கட்டடப்பொருள் விநியோகத்திற்காக** தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. கேள்விதாரர்கள் பொது நிதிச் சுற்றறிக்கை, இல.04/2016 இற்கு அமைவாக இவ் விலை மனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறைகொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், கேள்வி ஆவணங்களைப் பரிசோதிப்பதற்கும் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி), அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாள்களில் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றினையும், பொருள் விநியோகம் தொடர்பான பதிவு செய்யப்பட்ட வியாபார பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பித்து 29.06.2016 முதல் 08.07.2016 திகதி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

6. கேள்விகள் 09.07.2016 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்குமுன்னர் தலைவர், மாவட்டச்செயலக பெறுகைக்குழு, மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு, இடதுபக்க மேல் மூலையில் கேள்வி அடையாள இலக்கமிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அரசாங்க அதிபர் 'அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கவேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரர் அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

07. கேள்வி தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்தில் 05.07.2016 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

**கேள்வி கோரலுக்கான மூலப்பொருள் தொகுதி**
1. கட்டடப்பொருள் (சீமெந்து, மணல், கம்பிகள், மரங்கள்)
2. கூரை வேலைக்கான பொருள்கள் (மரங்கள், ஓடு, ஆணி, கம்பி)
3. கதவு மற்றும் யன்னல்களுக்கான மூலப்பொருள்கள்
4. வர்ணம் பூசுவதற்கான மூலப்பொருள்கள்
5. மலசலகூடம் அமைப்பதற்கான மூலப்பொருள்கள்
6. மின் இணைப்புச் செய்வதற்கான மூலப்பொருள்கள்

**நா. வேதநாயகன்,**
அரசஅதிபர் /மாவட்டச் செயலாளர்.
யாழ் மாவட்டம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**எங்கள் பாடசாலையை வளம் செய்த அன்பிற்குரிய ஆசிரியர்கள் அதிபர் தரம் III நியமனம் பெற்றமையை எண்ணி பெரிதும் பாராட்டுகின்றோம். இவர்கள் மேலும் பல பதவிகள் பெற்றுயர நாம் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.**



திரு.தர்மலிங்கம் ஸ்ரீகமலநாதன்
(B.com,Dip.in Spl Edu, Spl.Trd in Eng)



திரு.சிவசுப்பிரமணியம் மதியாலன்
[B.A,PGDE,NDT (sci)]



திரு.ஜேசுதாசன் மகிந்தன்
(B.A,Dip.in P.E,Spl Trd in P.E)



திரு.கனகசிங்கம் முரளீதரன்
(B.A,PGDE,Spl Trd in Aquatic Bio resoures)



**வாழ்த்துவோர்:**
**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 200 முதியவர்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழ் – சிங்கள மக்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் முகமாக, வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த 200க்கு மேற்பட்ட வயோதிபர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர்.

கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த இந்த முதியோர்கள் கைதடி முதியோர் இல்லத்துக்கு நல்லெண்ண பயணமாகச் சென்று, அங்குள்ள முதியோர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

வடமேல் மாகாணத்தின் முதியோர் சங்கங்களைச் சேர்ந்த இந்த முதியோர்களுடன், சாவகச்சேரி மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட முதியோர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கைதடி முதியோர் இல்லத்தை வந்தடைந்த இந்த முதியோர்களை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் வரவேற்றனர். முதியோர் இல்லத்தின் கலை அரங்கில் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

தமிழ் சிங்கள மக்களின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் கலை மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ற-ஜ-17)

# வாடகை வீடுகளில் வதிவோரும் வாக்காளராகப் பதிவு செய்யலாம்

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

வாடகை வீடுகளில் அல்லது குத்தகைக்கு வீடுகளைப் பெற்றுக் கொண்டு வசித்து வருவோர், தமது பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள முடியும். பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கு, அனுமதியளிப்பதன் மூலம் வீட்டின் உரிமையாளர்களுக்கு சட்ட ரீதியான எந்தவொரு சிக்கலும் ஏற்படாது.

இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

கொழும்பில் வாடகை மற்றும் குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள வீடுகளில் 60 ஆயிரம் பேர் வரையில் வாழ்கின்றனர். கொழும்பு மாவட்டத்தில் இந்த எண்ணிக்கையானது 70 ஆயிரமாக கணக்கிடப்பட்டுள்ளது.

குறவர் சமூகத்தினரும், வீதிகளையே தமது வாழ்விடமாக கொண்டுள்ள மக்கள் கூட்டத்தினரும், தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தேர்தல்கள் திணைக்களத்தின் நோக்கம்.

வாக்காளர்களைக் கணக்கிடுவதற்கான பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஜூன் மாதம் 21ஆம் திகதி முடிந்துள்ளது. அத்தகைய ஆவணமொன்றைப் பூர்த்தி செய்யாதோர் தமது பிரிவின் கிராம அலுவலரிடம் இது தொடர்பில் கவனத்துக்குக் கொண்டு வர முடியும்– என்றார்.

(ற-ஜ-ரி2,22)

# துன்னாலையில் நேற்று கசிப்பு உற்பத்தி பிடிபட்டது



கரவெட்டி, ஜூன் 28

துன்னாலை தெற்குப்பகுதியிலுள்ள சிறிய காட்டுப்பகுதியில் 52 லீற்றர் கசிப்பு மற்றும் அதன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பரல்கள் என்பன மதுவரித்திணைக்களத்தினரால் நேற்று கைப்பற்றப்பட்டன.

துன்னாலை தெற்குப் பகுதியிலுள்ள சிறிய காட்டுப் பகுதியில் கசிப்பு காய்ச்சும் நடவடிக்கை இடம்பெறுவதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து மதுவரித்திணைக்கள அதிகாரிகள், அந்தப்பகுதிகிராம அலுவலரின் உதவியுடன் குறித்த இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். அந்த இடத்திலிருந்து 52 லீற்றர் கசிப்பு மற்றும் உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன

இதேவேளை தப்பிச்சென்றவர்களை நீதிமன்றத்தினூடாக கைது செய்வதற்கான நடவடிக்கையை மதுவரித்திணைக்களத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-108)

# முற்றாகத் துண்டாடப்பட்ட சிறுவனின் கை இணைப்பு

## யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர்கள் சாதனை

யாழ்ப்பாணம், ஜூன் 28

முற்றாகத் துண்டாடப்பட்ட சிறுவனின் கை 12 மணித்தியால சத்திரசிகிச்சை மூலமாகப் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது கை இயங்கும் நிலையிலுள்ளது.

இவ்வாறு மருத்துவ நிபுணர் ப.ஸ்ரீகிருஸ்ணா தெரிவித்தார்.

மன்னாரைச் சேர்ந்த 4 வயதுச் சிறுவனின் கை மீது சிமெந்துத் தூண் விழுந்ததால் துண்டாகிவிட்டது. கை பொலித்தீன் பையால் சுற்றப்பட்டு ஐஸ்கட்டியினுள் வைத்து மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக் கூடத்தில் 12 மணித்தியால சத்திர சிகிச்சையின் பின்னர் கை முழுதாகப் பொருத்தப்பட்டது. கையில் எலும்பு, நாடி, நாளம், தசைகள் அனைத்தும் பொருத்தப்பட்டன. என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் ப.ஸ்ரீருகிஸ்ணா, பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் விபுலபெரேரா ஆகியோரின் தலைமையிலான 2 குழு சத்திர சிகிச்சை மேற்கொண்டது. அதன் பின்னர் 6 வாரங்கள் வரை சிறுவன் வைத்தியசாலையில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டுக் கண்காணிக்கப்பட்டான். அதன் பின்னர் சத்திர சிகிச்சை வெற்றியளித்துள்ளது. தற்போது 90 வீதம் வெற்றியளித்துள்ளது. சிறு காயம் மட்டுமே மாறவேண்டும்.

இலங்கையில் கொழும்பில் இத்தகைய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் கொழும்புக்கு வெளியே யாழ். போதனா வைத்தியசாலையில் 6 மாதங்களுக்கு முன்னரும் இதுபோன்று ஒருவருக்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்னரும் ஒருவருக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவையிரண்டும் வெற்றியளிக்கவில்லை. மன்னார் சிறுவனின் கை பொருத்துதல் வெற்றியளித்துள்ளது.– என்று மருத்துவ நிபுணர் ஸ்ரீகிருஸ்ணா தெரிவித்தார்.

எங்காவது இதுபோன்ற சந்தர்ப்பங்களில் கை துண்டாடப்பட்டால் கையை சுத்தமாக்கி பொலித்தீன் பையில் வைத்து பின்னர் ஐஸ் கட்டியினுள் வைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். பொலித்தீன் பையினுள் வைக்காது ஐஸ் பெட்டியினுள் வைக்கக்கூடாது. சுத்தம் செய்யாமலும் ஐஸ் கட்டியினுள் வைக்கக்கூடாது. துண்டான கையை 6 மணித்தியாலங்களுக்குள் வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும் என்றாலும், துண்டான கையையும் கை துண்டாடப்பட்ட வரையும் இயன்றளவு வெகு விரைவில் வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும். அப்போது தான் கையைப் பொருத்த முடியுமான தன்மை காணப்படும்.– என்றும் அவர் அறிவுறுத்தினார்.

(ற-4)

# பொலிஸார் மறித்தும் நிற்காது ஓடியவர் சிக்கினார் விபத்தில்

தென்மராட்சி, ஜூன் 28

பொலிஸாரால் துரத்தப்பட்ட 17 வயதுடைய மோட்டார் சைக்கிளோட்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து சைக்கிளில் சென்று கொண்டிருந்த முன்பள்ளி ஆசிரியை மோதிக் காயப்படுத்தினார். விபத்தை ஏற்படுத்தியவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார்.

அந்தச்சமயம் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் ஒருவர் வந்தார். பொலிஸார் நிற்குமாறு அறிவுறுத்தியபோதும் பொலிஸாரின் அறிவுறுத்தலை உதாசீனம் செய்து ஓடினார். பொலிஸார் அந்த நபரைப் பின் தொடர்ந்த போது வேகமாக ஓடித் தப்ப முற்பட்டார்.

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளோட்டி கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சென்ற சைக்கிளை மோதினார். அதில் பயணித்த முன்பள்ளி ஆசிரியை காயமடைந்தார்.

பொலிஸார் மோட்டார் சைக்கிளோட்டியை கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். காயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மற்றோரு சம்பவத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வீதிப் பள்ளத்தில் இறங்கிக் குடை சாய்ந்ததில் அதன் சாரதி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று கெற்பேலியில் இடம்பெற்றது. காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(ற-ஜ-4,9)

SPOKEN ENGLISH
3மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில
By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
வகுப்புக்கள் - யாழ்ப்பாணம், சங்கானை.
077 675 1649

அறை வாடகைக்கு
இரண்டு பெண் பிள்ளைகள் தங்கியிருக்க கூடிய அறை ஒன்று வாடகைக்குண்டு.
021 221 9649

மணமக்கள்
எங்களிடம் அரச/தனியார் துறைகளில் வேலை செய்யும் ஆண்–பெண் இருபாலாருடைய உள்நாட்டு/வெளிநாட்டு குறிப்புக்கள் உண்டு.
சூரியன் திருமணசேவை,
561, K.K.S. வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

T.V கள் மலிவு விற்பனை
Sony Wega Flat TVகள் 29"-18,000/=
25" - 17,000/=, 21"-10,000/=,
14"-6000/=, LG 21"- 12,000/=
தொடர்பு- 077 044 0570 (J/2464) (11.17)
சோனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)

வீடு வளவு விற்பனைக்கு
வில்லூண்டி பிள்ளையார் கோயில் வீதியில் 1 ½ பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
077 160 4004

பெயர் மாற்றம்
இல. 175, இரத்தினபுரம், கிளிநொச்சி என்னும் முகவரி கொண்ட ந. ஜகதரன் ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் ந. ஜெகதரன் என்று மாற்றுகின்றேன். இனிமேல் சகல ஆவணங்களிலும் ந. ஜெகதரன் என்றே ஒப்பமிடுவேன் என்பதை அறிவிக்கின்றேன்.
(J 1972)(12.18)
ஜெகதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 97 கிலோ கஞ்சா சிக்கியது



யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட 90 கிலோ 519 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு யாழ்.விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

அச்சுவேலி அக்கரை எனும் இடத்தில் வைத்து இவர்கள் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கைது செய்யப்பட்டனர்.

கடல் மார்க்கமாகக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று எமக்குத் தகவல் கிடைத்தது. நேற்று அதிகாலை 3 மணியளவில் வளலாய் வடக்குக் கடற்கரைக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தோம். இருவர் பைகளினாலான இரு மூடைகளைச் சுமந்து சென்றனர். அவர்களைச் சந்தேகத்தில் விசாரணை செய்தோம். மூடையைப் சோதித்த போதே அதனுள் கஞ்சா இருப்பது தெரிய வந்தது. அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

படகு ஒன்றில் அந்தக் கஞ்சா அங்கு கொண்டு வரப்பட்டது. கரையிறக்கி விட்டு உடனேயே அது அங்கிருந்து சென்றுவிட்டது என்று கைதுசெய்யப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. அவர்கள் அலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டிருந்த இலக்கத்தையும் வைத்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. இந்தியாவிலிருக்கும் ஒருவர் அதனை அனுப்பியுள்ளார். அதனைக் கொண்டு சென்று மற்றொரு தரப்பிடம் ஒப்படைப்பது தமக்குக் கூறப்பட்டிருந்த பணி என்று கைது செய்யப்பட்டவர்கள் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் இளவாலை மற்றும் வளலாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். வின்சன்ராஜ், மதியராஜ் ஆகிய பெயர்களில் அவர்கள் அழைக் கப்படுகின்றனர். அவர்கள் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கஞ்சாவின் பெறுமதி 2 கோடி 26 இலட்சத்து 29 ஆயிரத்து 750 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது - என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.(ற-ஐ-4,26,107)

## திருமண வீட்டில் இரவு புகுந்து 35 பவுண் நகை, பணம் திருட்டு

### நாச்சிமார் கோயில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

திருமணம் நடந்த அன்றிரவு வீடு புகுந்த திருடர் ஜன்னல் பிரித்து சுமார் 6 இலட்சம் ரூபா பணத்தையும், 35 பவுண் நகைகளையும் திருடிச் சென்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் கே.கே.எஸ். வீதி நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடந்துள்ளது.

குறித்த வீட்டில் கடந்த சனிக்கிழமை திருமணம் இடம் பெற்றது. அந்த வீடு மணப் பெண்ணினுடையது. இரவு வீட்டில் இருந்தவர்கள் சம்பிரதாயங்களின்படி மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றனர். வீட்டில் ஒரு சிலரே தங்கியிருந்தனர். அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர், வீட்டில் நுழைந்து பணத்தையும், நகைகளையும் திருடியுள்ளனர். திருமண வீட்டுக்கு வந்தவர்கள் மணமக்களுக்கு வழங்கிய அன்பளிப்புப் பணமும் திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஜன்னல் பிரித்து திருடர்கள் வீடு நுழைந்து திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இது வரை எவரும் கைது செய்யப் படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4,101)

## ஆந்திரா மாநில முதலமைச்சருடன் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் பேச்சு

### சுற்றுலா ஊக்குவிப்புத் தொடர்பாக

கொழும்பு, ஜூன் 28

சுற்றுலா ஊக்குவிப்புத் தொடர்பாக இந்தியாவின் ஆந்திரா மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுடன், பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய கொள்கைகள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம சீனாவில் பேச்சு நடத்தினார்.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, நான்கு நாள் பயணமாக சீனா சென்றார். அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் சீனாவுக்குச்சென்றிருந்தார். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தியான்ஜின் நகரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஆந்திராவின் புதிய தலைநகரான அமராவதி கட்டுமானப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து விசாரித்த அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் சார்பில் வாழ்த்துக்களையும் பரிமாறினார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு சந்திரபாபு நாயுடுவுக்கும் மலிக் சமரவிக்கிரம அழைப்பு விடுத்தார். சந்திப்பில் இரு அரசுகளும், சுற்றுலாத் துறை ஊக்குவிப்பு தொடர்பாக இணைந்து பணியாற்றவும் இணக்கம் காணப்பட்டது. (ற-ஐ-5)

## உதய கம்மன்பில விவகாரத்தில் இன்டர்போல் உதவி நாடப்படும்

கொழும்பு, ஜூன் 28

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மீது சுமத்தப்பட்ட முறைகேடு குற்றச்சாட்டுத் தொடர்பில் இன்டர்போல் எனப் படும் பன்னாட்டு பொலிஸாரின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு விசாரணையாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஆஸ்திரேலியர் ஒருவரின் வங்கிப் பங்குப் பத்திரங்களைப் போலியான முறையில் கைமாற்றி, விற்பனை செய்த குற்றச்சாட்டில் உதய கம்மன்பில கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

உதய கம்மன்பில மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் போது சாட்சிகளாக கையொப்பமிட்ட இரண்டு ஆஸ்திரேலியப் பிரசைகளின் வாக்கு மூலங்களைப் பெறுவதற்கே பன்னாட்டு பொலிஸாரின் உதவி கோரப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-5)

## போதைப் பொருளுக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வுப் பேரணி




மன்னார், ஜூன் 28

புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக மன்னாரில் நேற்று விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது.

'மது போதைப்பொருள் அற்ற சமுதாயத்தைஉருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் மன்னார் திருப்புமுனை மையம் பேரணியை ஏற்பாடு செய்தது.

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மற்றும் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை ஆகியவற்றில் இருந்து ஆரம்பமான பேரணிகள் பிரதான வீதி ஊடாக மன்னார் நகர மத்தியை வந்தடைந்தன. அங்கு மாணவர்கள் ஒன்று திரண்டு விழிப் புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மது பாவனைக்கு எதிரான பதாகைகளை ஏந்திவாறு கோசங்களுடன் மாணவர்கள் பேரணியில் பங்குகொண்டனர்.

நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் செலின் சுகந்தி செபஸ்தியான், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜந்த றொற்றிகோ, மன்னார் திருப்புமுனை புது வாழ்வு மைய இயக்குநர் அருட்தந்தை கியுபட் அடிகளார் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஐ-56)

## திருட்டுகளுடன் தொடர்புடைய இருவர் மன்னாரில் சிக்கினர்



மன்னார், ஜூன் 28

மன்னார் நகரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக இடம் பெற்று வந்த பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்களால் திருடப்பட்டவை என்று கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும், மடிக்கணினி ஒன்றும், திருட்டுச் சம்பவங்களுக்கு பயன்படுத்தியதாகக் கூறப்படும் ஓட்டோ ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர்களிடம் மேற்கொள்ளப் பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர், இவர்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-56)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பாடசாலை ஆசிரியர்களான



திரு.சோமசுந்தரம் திருக்குமரன் - SLPS-III



திரு.கருணாமூர்த்தி சிவகுமாரன்- SLPS-III

Congratulations!

09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்குப் பதவியுயர்வு பெற்றுள்ளனர். இவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு இவர்கள் இச்சேவையில் பல படிகளைத் தாண்டி உயர்வுபெற வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் நலன்புரி கழகம் - யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் செல்வி.ஜி.டி.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சுபாதினி ரமேஷ் கலந்து கொள்வார். (ற-ஜ-ரி4)



### மரண அறிவித்தல்

**கந்தசாமி ஞானகுரு**
**(காந்தி கடை)**



**பிறப்பு** 03 . 10 . 1948

**இறப்பு** 27 . 06 . 2016

கல்லைவேம்படியைப் பிறப்பிடமாகவும் காளுவன், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஞானகுரு நேற்று (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி - பகவதியம்மா தம்பதிகளின் மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், ஞானகுமாரன், ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும், போஜினி (NSB சங்கானை), கோவர்த்தன் ( Soft Logic Finance Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தின் மாமனாரும், ஹரிஜித்தின் அன்புப் பேரனும், நடராஜா, இந்துமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**காளுவன்,சுழிபுரம்.** (c/2474) (11,17) **குடும்பத்தினர்.**


# சொந்தக் காணிகளைப் பார்க்கச் சென்ற பரவிப்பாஞ்சான் மக்களுக்கு ஏமாற்றம்

## அனுமதி மறுத்து திருப்பியனுப்பியது இராணுவம்



கிளிநொச்சி, ஜூன் 28

தமது சொந்தக் காணிகளைப் பார்வையிடச் சென்ற பரவிப்பாஞ்சான் மக்களை நேற்றுத் திருப்பியனுப்பியது இராணுவம்.

பரவிப்பாஞ்சானில் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களுடைய குடியிருப்புக் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

நண்பகல் பன்னிரண்டு மணியளவில் பரவிப்பாஞ்சானில் உள்ள தமது காணிகளை விடுவிக்கவேண்டும் என்று உரிமையாளர்கள் இராணுவத்தினரிடம் கடிதம் கொடுத்தனர். தமது காணிகளைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்றும் கோரினர்.

மக்களால் கொடுக்கப்பட்ட கடிதத்தை வாங்கிய இராணுவத்தினர் "எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் மேலதிகாரிகளின் கட்டளைக்கு அமையவே செயற்படலாம். கடிதத்தை மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கின்றோம். நீங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லுங்கள்" என்று மக்களைத் திருப்பி அனுப்பினர்.

இராணுவத்தினருடன் நீண்ட நேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட காணி உரிமையாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். "பரவிப்பாஞ்சானில் ஒரு தொகுதிக் காணிகள் கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்டன. இன்னமும் 54 குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப் படாதுள்ளன. நாங்கள் 20 குடும்பங்கள் தற்போது கிளிநொச்சியில் வாழ்கின்றோம். கிளிநொச்சியில் சொந்தக் காணிகள் இல்லாது வாடகைக்கும், உறவினர்களது வீடுகளிலுமே வாழ்கின்றோம். இந்த 20 குடும்பங்களின் காணிகளை யாவது முதலில் விடுவியுங்கள்" - என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"கடிதத்தை எமது உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி ஒருவாரத்துக்குள் அவர்கள் தகவல் தந்தால் உங்களுக்கு அறியத்தருவோம். நாம் இந்த இடத்தில் தற்காலிகமாகத்தான் இருக்கின்றோம். எமக்கும் உங்களுக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை. எமது உயர் அதிகாரிகள் இன்று இக் காணியில் இருந்து வெளியேறுங்கள் எனக் கூறினால், இன்றே காணிகளை நாம் உங்களிடம் கையளிப்போம்"- என்று மக்களுக்குப் பதிலளித்தார் இராணுவ மேஜர் ஒருவர். (ற-ஜ-21)



### கண்ணீர் அஞ்சலி



*துரைரத்தினம்திருக்கேதீஸ்வரன்*
*(குழந்தை)*

25.06.2016 அன்று சாவடைந்த திருக்கேதீஸ்வரன் அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வெலிகம ஸ்ரோஸ்**
**139, 4 ஆம் குறுக்குத் தெரு,**
**கொழும்பு 11** (J 1972)(12.18)




# 6 ஆம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## கணபதிப்பிள்ளை வாகீசன்

**(பொறியியலாளர் - பருத்தித்துறை)**



**மலர்வு** 12.08.1989

**உதிர்வு** 30.12.2015

ஓராம்கட்டை, புலோலி மத்தி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் கணபதிப்பிள்ளை வாகீசன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தார் சார்பில் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அவரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் **30.06.2016 வியாழக்கிழமை புலோலி மேற்கிலுள்ள தெணி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் காலை 7 மணியளவில் நடைபெறவுள்ளது.** அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**துலாவெட்டை ஒழுங்கை, ஓராம்கட்டை,**
**புலோலி மத்தி, பருத்தித்துறை.** (ஜ/22122) (11,17) **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## பஸ் நடத்துநர் மீது தாக்குதல்: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்குப் பயணிக்கத் தயாராக இருந்த அரச பஸ்ஸின் நடத்துநரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
யாழ். நகரப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.
"மதுபோதையில் இளைஞன் பஸ்ஸில் சக பயணிகளுடன் தகாத முறையில் நடந்துகொண்டார். அதனை அவதானித்த நடத்துநர் பஸ்ஸை விட்டு இறங்குமாறு அந்த இளைஞரிடம் கூறினார்.
மிதிபலகையில் நின்ற நடத்துனரைத் இளைஞன் தாக்கினார். காயமடைந்த நடத்துநர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். கொட்டடியைச் சேர்ந்த குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார்" - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4,107)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 27 நாள்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆம் திகதி காலை சங்காபிசேகமும், மாலை ரத உற்சவமும், எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ற-ஜ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 27
நீராவியடி கடையிற்சுவாமி கோயில் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி 108 சங்காபிசேகம் ருதுசோபனம் மாலை திருக்கல்யாணம் நடைபெறும். (ற-ரி)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 28
நல்லூர் மூத்த விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-ஜ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28
புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஜ-ரி)

# இராணுவத்திடம் ஒப்படைத்த உறவுகளுக்கு நடந்தது என்ன?

## உறவினர்கள் நேற்று நல்லூரில் கவனவீர்ப்பு பேரணி





யாழ்ப்பாணம், ஜூன் 28
இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை பன்னாட்டு அமைப்புக்கள், இலங்கை அரசிடம் கேட்டுப்பகிரங்கப்படுத்த வேண்டும்.
இவ்வாறு காணாமற்போனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.
"தடுப்பிலிருந்தும் - சிறைகளிலிருந்தும் விடுதலையர்கும் எமது உறவுகளைப் பன்னாட்டு வைத்தியர்கள் ஊடாக குருதிப் பரிசோதனை செய்யவேண்டும். விடுதலையாகி வெளியில் வந்த சில மாதங்களிலேயே அவர்கள் உயிரிழக்கின்றனர்" என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.
காணாமற்போனவர்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்துமாறும் இந்த விடயத்தில் பன்னாட்டு விசாரணையே தேவை என்பதையும் வலியுறுத்தி நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
நல்லூர் ஆலய முன்றலில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது. அங்கிருந்து பேரணியாகச் சென்று யு.என். எச்.சி.ஆர். அலுவலகத்தின் முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
கடத்தப்பட்டு, இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு இன்று வரையில் வீடு திரும்பாத தமது உறவுகளின் படங்களைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையில் தாங்கிப் பிடித்திருந்தனர்.
நல்லாட்சி அரசு காத்திரமான நடவடிக்கையை எடுக்கவில்லை. எமது உறவுகளுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். எங்களது உறவுகளை எங்களிடம் சேர்ப்பியுங்கள். நாங்கள் சாவைத் தழுவுகின்ற நிலையில் இருக்கின்றோம். போரின் இறுதிக் கட்டத்தில் எமது பிள்ளைகளை நாங்கள்தான் இராணுவத்தினரிடம் கொண்டு சென்று ஒப்படைத்தோம். விசாரணையின் பின்னர் விடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் இன்று வரையில் வீடு திரும்பவில்லை.
எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது ? பன்னாட்டு அமைப்புக்கள் இந்த விடயத்தில் எமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும்.
தடுப்பிலிருந்து விடுவிக்கப்படும் முன்னாள் போராளிகள், தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரை பன்னாட்டு வைத்தியர்கள் முன்பாக குருதிப் பரிசோதனை செய்ய வேண்டும். விடுவிக்கப்பட்ட 103 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால்தான் நாம் அவர்கள் விடுவிக்கப்படும் போது குருதிப் பரிசோதனை செய்ய வலியுறுத்துகின்றோம்- என்று அவர்கள் தெரிவித்தனர்.
இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் குறைவானவர்கள் கலந்து கொண்டனர். (ற-ஜ-5-106)

# சிறுவர்களைத் தவறாக அணுகுவோரை கண்டித்து சாவகச்சேரியில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
சிறுவர்களுக்கு எதிரான துர்நடத்தைக்கு எதிராக உடன் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சாவகச்சேரியில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சாவகச்சேரி மத்திய பஸ் நிலையத்துக்கு பிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர். முற்பகல் 11 மணிக்கு மக்கள் பேரணி மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டது. ஏ - 9 பிரதான வீதியூடாக பேரணி நகர்ந்தது. பேரணிக்கு முன்பாக கோஷம் எழுப்பியவாறு ஓட்டோ சென்றது.





வலயக் கல்வி அலுவலரிடமும் மனு

"கைதுசெய் கைதுசெய் காவாலி ஆசிரியர்களைக் கைது செய்", "சிதைக்காதே சிதைக்காதே மலரும் மொட்டுக்களைச் சிதைக்காதே", "சட்டத்துறையே சட்டத்துறையே காமவெறியர்களைக் காப்பாற்றாதே", "தண்டனை கொடு தண்டனை கொடு துர்நடத்தை புரிந்தவருக்குத் தண்டனை கொடு", "அவதானம் அவதானம் பிரத்தியேக வகுப்பு தொடர்பில் அவதானம்", "ஒழிப்போம் ஒழிப்போம் பாலியல் துர்நடத்தையை ஒழிப்போம்" ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.
பேரணி முதலில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது. பிரதேச செயலாளரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. மனுவை பொது அமைப்புக்களின் சார்பில் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற உதவிச் செயலாளர் இ.சுரேஷ் கையளித்தார்.
அங்கிருந்து புறப்பட்ட பேரணி, இராமலிங்கம் வீதி ஹென்ஸ்மன் ஒழுங்கை ஊடாகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையை அடைந்தது. வலயக்கல்விப் பணிப்பாளரிடம் மனுக் கையளிக்கப்பட்டது. பேரணிக்கு இடையூறு ஏற்படாதவாறு பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.
சாவகச்சேரி பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றின் மாணவியுடன் ஆசிரியர் ஒருவர் தவறாக நடந்துகொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவரும், குற்றத்தை மறைத்தார்கள் என்று கூறப்படுபவர்களும் கைது செய்யப்பட்டனர். (ற-ஜ-5-9)



பிரதேச செயலரிடம் மனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டத்தை மீறி மணல் ஏற்றிய உழவு இயந்திரம் பளையில் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 28
பளை தம்பகாமம் பகுதியில் சட்டத்தை மீறி மணல் ஏற்றிய உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுஎன்றுபளைப்பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி பளை தம்பகாமம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் கொள்ளை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்றனர்.

பொலிஸார் சென்றபோது, ஆள்கள் எவருமற்ற நிலையில், மணல் ஏற்றிய உழவு இயந்திரம் மட்டும் இருந்தது. அதனைப் பொலிஸார் கைப்பற் றினர்.

அந்தப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு, பொலிஸ் ரோந்து மேற்கொள்ளப்படவுள்ளது என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-5-21-ரி3)

## வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு தரம் குறைந்த மணல் விநியோகம்

### தென்மராட்சி மக்கள் குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஜுன் 28
தென்மராட்சி பிரதேசத்தில் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு, தரம் குறைந்த மணல் விநியோகிக்கப்படுகிறது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 308 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு பிரதேசத்தில் உள்ள, மணலை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட வாகனச் சாரதிகள் தரம் குறைந்த மணலைக் கொடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தணங்களப்புப் பகுதியில் உள்ள வயல்வரம்புகளை வெட்டி மணல் கொண்டுவரப்படுகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

வீட்டுத்திட்டப் பயனாளிகள் பாலியாற்று மணலைப் பயன்படுத்தி அத்திபாரம் அமைத்துள்ளனர். சிமெந்துக் கலவைக் கற்களும் அறுத்து கட்டடம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு மணலை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

“கட்டடம் அமைப்பதற்கு தரம் குறைந்த மணல் வழங்கப்படுவதால் கட்டட வேலைகள் செய்ய முடியவில்லை. வெளியிடங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மணல்வாங்கிகட்டட வேலைகளை ஆரம்பிக்க வேண்டியுள்ளது” என்று அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

“வீட்டுத் திட்டப் பயனாளிகளின் விருப்பத்துக்கேற்ப மணல் பெறுவதற்கு இரு இடங்களில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்திபாரத்துக்குள் போடுவதற்கு கச்சாயிலிருந்து தரம் குறைந்த மணலும், கட்டட வேலைகளுக்கென அல்லாரையிலிருந்து தரமான மணலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. பயனாளிகள் தரும் விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது. கட்டடம் அமைப்பதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலருடன் கலந்துரையாடி நாகர்கோவில் மணல் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தினமும் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் அலுவலர் மூலம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு மணல் துரிதகதியில் வழங்கப்பட்டு வருகின்றது.

“அல்லாரைப் பிரிவு மணலுக்கு விண்ணப்பித்து, கச்சாய் மணல் வழங்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக பிரதேச செயலகத்துக்கு அறிவியுங்கள்”- என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

பிரதேசத்தில் அமைக்கப்படும் ஒவ்வொருவீடும் பயனுள்ளதாக அமையவேண்டும். பயனாளிகள் மணல் விநியோகத்தில் முறைகேடு இடம்பெற்றால் பிரதேச செயலகத்தில் முறையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-9)

### தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜுன் 28
இலங்கை சமுத்திர பல்கலைக் கழகத்தின் ஊடாக தொழிற் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சமுத்திர பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ்.கிருஷ்ணலிங்கம் தெரிவித்தார்.

நீச்சல்பயிற்சிநெறி, கடலகமாலுமி பயிற்சி நெறி, வெளி இணைப்பு இயந்திர தொழில்நுட்பம், கணினி கற்கைநெறி ஆகிய பாடநெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகளுக்கு க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரம் சித்தியடைந்த மாணவர்கள் நாளை மறுதினம் 30 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

(ற-ஐ-ரி)

## மதுபானம் அருந்த ஆடு திருடியவர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜுன் 28
அச்சுவேலி, சுன்னாகம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்று வந்த ஆட்டுத் திருட்டுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவரும், வாங்கிய குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

புத்தூர் நிலாவரைப் பகுதியில் இரு மறி ஆடுகள் திருட்டுப் போனமை தொடர்பில் அதன் உரிமையாளர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணையை மேற்கொண்ட இரகசியப் பொலிஸார் பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் நெல்லியடி, கரவெட்டி, கொற்றாவத்தை, சமரபாகு ஆகிய இடங்களைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், திருடிய ஆடு ஒன்றைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் யாழ்.ஐந்துசந்தியைச் சேர்ந்த இறைச்சி வியாபாரியும் கைது செய்யப்பட்டார்.

ஆட்டுத் திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ள ஹயஸ் வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் மதுபானம் அருந்துவதற்கு பணம் இல்லாத நேரங்களில் வாடகைக்குக் குறித்த வாகனத்தை அமர்த்தி இரவு வேளைகளில் வீடுகளில் கட்டி வளர்க்கப்படும் ஆடுகளைத் திருடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அதிகமாக அச்சுவேலி, சுன்னாகம், கோப்பாய் பகுதிகளிலே திருட்டில் ஈடுபடுகின்றனர்.

கைதானவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

(ற-ஐ-4,107)

### இலக்கிய விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜுன் 28
தேசிய ஒற்றுமை என்ற தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் இலக்கிய விழா நடத்தப்படவுள்ளது என்று சோசலிச இளைஞர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

கவிதை, சித்திரம், நடனம் ஆகிய துறைகளில் பாடசாலை மட்டம் மற்றும் திறந்த மட்டத்தில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. பாடசாலை மட்ட அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பங்குபற்றுபவர்கள் தமது ஆக்கங்கள், படைப்புக்களை எதிர்வரும் ஜுலை மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் 298, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-ரி)

## இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு மனு

யாழ்ப்பாணம், ஜுன் 28
பலாலி - மயிலிட்டி உள்ளிட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கும் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

மீள்குடியமர்வை வலியுறுத்தி நேற்று முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின் முடிவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள மனுவில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவ நடவடிக்கையால் 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம் திகதி நாம் இடம்பெயர்ந்தோம். எமது உண்மை நிலையை நேரில் கண்டறிந்த ஜனாதிபதி 6 மாதங்களுக்குள் உங்களை மீள்குடியமர்த்துவேன் என்று உறுதி வழங்கினார். ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சுமார் 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப் பரப்பு கையகப்படுத்தப்பட்டிருந்தது. அண்மைளவாக தற்போது வரை ஆயிரத்து 700 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பில் மீள்குடியமர்வுக்குப் பொருத்தமில்லாத காடுகள் அடங்கிய பிரதேசமே அதிகளவில் உள்ளது.

இலங்கையின் மீன் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை வழங்கி வந்த மயிலிட்டித் துறைமுகமும், அதனைச் சூழவுள்ள பலாலி, ஊறணி, காங்கேசன் துறை உள்ளடங்கலாக 12 கிலோமீற்றர் கரையோரம் மக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லை.

பலாலி, மயிலிட்டி, தையிட்டி போன்ற விவசாய நிலங்களை விடுவிக்காது இராணுவம் விவசாயம் செய்து தங்கள் தேவைகளை நிறைவு செய்கிறது. மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

வலி. வடக்கில் போர் நடைபெறவில்லை. எமது பிரதேசத்திலிருந்த வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், காசநோய் வைத்தியசாலை, ஆலயங்கள், தொழிற்சாலைகள் என்பன இடம் தெரியாதவாறு முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் தற்போது ஆடம்பர மாளிகைகள் இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட பிரதேச மக்களின் அவசியத் தேவைகளான குடிதண்ணீர், வைத்தியசாலை, பாடசாலை, போக்குவரத்து, வீதி, மின்சாரம் ஆகியன சீராக்கப்படாத நிலையில் மக்கள் மீள்குடியமர்வில் அக்கறை கொள்ளவில்லை. அடிப்படை வசதிகள் பூர்த்தியானால் மட்டுமே மக்கள் வேகமாக மீள்குடியமர முடியும்.

மீள்குடியமர்வு நிறைவுறும் வரை தென்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுவது போல் நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும். மேலுள்ள விடயங்களோடு உண்மை நிலைகளைப் புரிந்து விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றுள்ளது.

(ற-ஐ-5-101)

### பஸ்ஸிலிருந்து அவசரப்பட்டு இறங்கியவர் காயம்

யாழ்ப்பாணம், ஜுன் 28
பஸ்ஸிலிருந்து அவசரமாக இறங்கிய பயணி காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த அரச பஸ் ஒன்றில் பயணம் செய்த பெண், யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியை அண்மித்த பகுதியில், சாரதி பஸ்ஸை நிறுத்துவதற்கு முன்னர் இறங்கியுள்ளார். அதனால் அவர் காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. சம்பவத்தில் கச்சேரி நல்லூர் பகுதியைச் சேர்ந்த பெண்ணே காயங்களுக்கு உள்ளானார்.

(ற-ஐ-4,107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் வவுனியாவில் நேற்றுக் காலை ஆரம்பம்

## பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்க வலியுறுத்தி


பொருளாதாரத்தையும் போராடித்தான் பெற வேண்டியிருக்கிறது.


எதிர்கால வருவாய்க்காக இன்று வயிற்றில் அடிப்பு.

வவுனியா, ஜூன் 28
பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக் குளத்தில் அமைக்கப்பட வேண்டும். வடக்கு மாகாண சபையில் அது தொடர்பில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி வவுனியாவில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று ஆரம்பமானது.

இந்தப் போராட்டத்துக்கான அழைப்பு வவுனியா உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கத்தால் விடுக்கப்பட்டிருந்தது. போராட்டத்தில் உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர்கள் மற் றும் அரசியல்வாதிகள் கலந்து கொண்டனர். முடிவு கிடைக்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் அமையவுள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கான காணி வழங்கலில் இழுபறி நிலை காணப்படுகின்றது. இதனால் திட்டம் வேறு மாகாணத்துக்கு மாறிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மே மாதம் வடக்கு மாகாண சபையின் 52ஆவது அமர்வில் இந்த விடயத்துக்கு தீர்வு காணப்பட்டிருந்தது. பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குத் தாண்டிக்குளத்தில் காணி வழங்க வேண்டும் என்று மாகாண சபை அமர்வில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானம் பேரவைச் செயலாளரால் கொழும்பு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. காணியை அடையாளப்படுத்தும் நடவடிக்கையும் மாவட்டச் செயலாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாண விவசாய அமைச்சும், மாகாண காணி அமைச்சும் காணியை விடுவிக்க மறுத்தன. தாண்டிக் குளத்துக்குப் பதில் வேறு இடம் தலலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கடிதம் எழுதினார். இந்த விடயத்தில் முடிவு இன்னமும் எட்டப் படவில்லை.

வவுனியா மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், மாவட்டத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டும் வடக்கு மாகாண சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அப்படியே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று போராட்டக் காரர்கள் வலியுறுத்தினர்.

தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டமானது வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரானது அல்ல. மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கோரியே முன்னெடுக்கப்படுகின்றது - என்று வவுனியா உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

போராட்டம் காரணமாக வவுனியா தினச் சந்தைப் பகுதியில் உள்ள 35 கடைகளும் பூட்டப் பட்டிருந்தன. வன்னி மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், கே.மஸ்தான் ஆகியோரும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

கடந்த ஏப்ரல் மாதமும், வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் ஒன்றிணைந்து, வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தியிருந்தனர்.

(ற-ஜ-5-21)

## வதிவிடப் பயிற்சியும் சான்றிதழ் வழங்கலும்


பயிற்சியில் பெற்ற அனுபவங்களை மாணவர்கள் பகிர்ந்தனர்.

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்ற அமைச்சரவைக்கான தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்திக்கான "வெற்றிகளை வென்றெடுப்போம்" என்னும் நான்கு நாள் வதிவிடப் பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வும், சான்றிதழ்கள் வழங்கலும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

தலைமைத்துவப் பயிற்சிநெறியின் இறுதிநாள் நிகழ்வு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக மாகாண உளசமூக நிலைய அலுவலர் செல்வி உதயகலா சிவபாத சுந்தரமும், கௌரவ விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொசைரோவும் கலந்துகொண்டனர்.

பயிற்சி நெறியின்போது பெற்ற அனுபவங்கள் பற்றிய கருத்துக்களை பயிற்சியாளர்கள் சபையினருக்குத் தெரிவித்தனர். பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை விருந்தினர்கள் வழங்கினர்.

ஒவ்வொரு பாடசாலையின் மாணவர் நாடளுமன்றத்தின் சபாநாயகர்களும் சான்றிதழ்களை சக மாணவர்கள் சார்பில் பெற்றுக் கொண்டனர். நிகழ்வில் கல்வி வலயத்தால் உருவாக்கப்பட்ட "இசை ஆரம்" இறுவட்டு வெளியீடும் இடம்பெற்றது.

(ற-ஜ-9)

## கணவனை இழந்தோர் தினத்தில் குடும்பத் தலைவிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 28
யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய, சர்வதேச கணவரை இழந்தோர் தினத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்ப தலைவிகள் மதிப்பளிக்கப்பட்டனர்.

வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை சமாசத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

கணவரை இழந்த குடும்பத் தலைவிகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு, அவர்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன். மோகன், லண்டன் மன்செஸ்ரர் கூட்டுறவுக் கல்லூரியின் அதிபர் திருமதி டாக்டர் சிவா, தமிழ்நாடு மேரிடோக் கல்லூரியின் விரிவுரையாளர் டாக்டர் செல்வி தமிழரசி, நெதர்லாந்து மனித நேய செயற்பாட்டுக்கான கூட்டுறவு அமைப்பின் திட்டப் பணிப்பாளர் திருமதி றஜனி இக்பால், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.செல்வகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-17)


கணவரை இழந்த குடும்ப தலைவியருக்கு மரக் கன்றுகள் வழங்கப்பட்டன.

## வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
குமரபுரம் பரந்தன் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற வுள்ளன. (ற-ரி)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 28
நெடுந்தீவு மத்தி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் மாலை 4 மணிக்கு சமுத்திரத்தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ற-ஜ-7)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 28
திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப .10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிபன்னிரண்டுதினங்கள் இடம்பெறும். (ற-ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனை மீளச் செலுத்த கடன் பெறுகிறது அரசு

## ஜே.வி.பியின் விஜித கேரத் எம்.பி சாடல்



கொழும்பு, ஜூன் 28
பெற்றுக்கொண்ட கடனை அடைக்க மீளவும் கடன் பெறுகிறது அரசு. கடன் எல்லையைத் தாண்டி அரசு கடன் பெற்றுள்ளது. இதற்கு எதிராக மக் கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் செயற்படும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஆட்சியில் அவர் வாங்கிய கடன் மற்றும் ஊழல் மோசடிகளைத் தற்போதைய ஆட்சியாளர்களும் முன்னெடுக்கின்றனர். தவறான கொடுக்கல் வாங்கல்களையே மேற்கொள்கின்றனர். உறவுக்காரர்களுக்கு சலுகை வழங்குகின்றனர். பணத்தை வீணாகச் செலவு செய்கின்றனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நூறு நாள் ஆட்சியில், மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக பிணை முறி மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகியிருக்கவேண்டும். அதற்காக குரல் கொடுத்தவர்கள் நாங்கள். அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக மாத்திரமல்ல, அதற்கு முன்னர் பதவியிலிருந்த முன்னைய ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேற்கொண்ட தவறான முதலீடுகள் தொடர்பாகவும், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை மேற் கொண்டிருந்தோம். நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கேள்விகளை எழுப்பியிருந்தோம்.

நாளை புதன்கிழமை கோப் குழுவின் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது. இதன்போது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த அறிக்கைக்கு அமைவாக, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கடன் பெறும் எல்லையை மீறி, கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பில் விசாரணை நடத்தப்படும்.

எந்தக் காரணங்களுக்காகவும், மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான விசாரணைகள், கடன் எல்லை மீறிய விடயம் தொடர்பில் எமது எதிர்ப்பைக் கைவிடமாட்டோம் – என்றார். (ந–ஐ–5)

## பயன்படுத்தும் நேர அடிப்படையில் மின் கட்டணம் அறவிடத் திட்டம்

கொழும்பு, ஜூன் 28
பயன்படுத்தும் நேரத்தின் அடிப்படையில் மின் கட்டணம் அறவிடப்படவுள்ளது. இந்தப் புதிய முறை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அறிமுகப்படுத்தப்படும் என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

காலை 5.30 மணி முதல் இரவு 10.30 மணி வரை மற்றும் இரவு 10.30 மணி முதல் காலை 5.30 மணிவரை என்று இரண்டு காலப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு மின் கட்டணம் அறவிடப்படும்.

இரவு 10.30 மணிமுதல் காலை 5.30 மணிவரை பாவிக்கப்படும் மின்சாரத்துக்கு அறவிடப்படும் கட்டணம், சாதாரண கட்டணத்தை விட 40 சதவீதம் குறைவானதாகும்.

இந்தப் புதிய முறைக்குள் தங்களைச் சேர்த்துக் கொள்ள விரும்புவர்கள், 8 ஆயிரம் ரூபா மற்றும் அதனைவிடக் குறைந்த கட்டணத்தைச் செலுத்தி இணைந்துகொள்ள முடியும்.

இந்தத் திட்டமானது தற்போது பெரியளவில் மின்சாரத்தை பயன்படுத்தி வரும் பாவனையாளர்களுக்காகவே அறிமுகப்படுத்தப்படவுள்ளது. சாதாரண பாவனையாளர்களுக்காக புதிய மின்சார அளவீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்திச் செலவுகளைக் குறைத்துக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ந–ஐ–5)

## பாம்புகளுடனிருந்து அப்பமுண்டு பழக்கமில்லாததால் வீழ்ந்தேன்

### மகிந்தவின் கவலை இது



கொழும்பு, ஜூன் 28
எனக்கு குரக்கன் மாவில் செய்த உணவு வகைகளை உண்டுதான் பழக்கம். பாம்புகளுடன் அப்பம் சாப்பிட்டுப் பழக்கம் இல்லை. இதுதான் எனது வீழ்ச்சிக்குக் காரணம்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குருநாகல் குளியாப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

என்னுடன் அப்பம் சாப்பிட்ட பாம்புகளை, அடையாளம் காண முடியாதுபோனமையே எனது வீழ்ச்சிக்கு முக்கிய காரணமானது.

நான் ஆரம்பித்து வைத்த மகிந்தோதய திட்டங்களில் இருந்த பெயர் பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. பெயர் மாற்றப்படுவது குறித்துக் கவலையில்லை. அந்த வளங்களை மாணவர்களின் பாவனைக்கு சீரமைத்துக் கொடுக்கவேண்டும். குருநாகல் மல்லியத்தேவ பாடசாலைக்கும், மகிந்த மன்றத்தின் கீழ் எனது சொந்தச் செலவில் நீச்சல் தடாகம் அமைத்துக் கொடுத்திருந்தேன். அரசு தரப்பினர் அறியாமல் இல்லை. எனக்கு திறப்பு விழாவுக்கு அழைப்புக்கூட விடுக்கப்படவில்லை.

அரசு பழிவாங்கல் முயற்சிகளுக்காக எம்மை சிறையில் அடைக்க முடியும். மக்கள் மனங்களை சிறையிலடைக்க முடியாது – என்றார்.

மகிந்த அரசின் சுகாதார அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த அரசிலிருந்து வெளியேறும் கடைசி நாளன்று நடந்த விருந்தில் மகிந்த ராஜபக்சவுடன் அப்பம் உண்டார். அதனையே மகிந்த இப்போது இப்படிக் குத்திக் காட்டியுள்ளார். (ந–ஐ–5)

## விமான நிலைய நடவடிக்கைகளை பொறுப்பேற்குமாறு பரிந்துரை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் கீழ்மட்ட நடவடிக்கைகள் விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனம் ஆகியவற்றுக்கு வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு அரச பொருளாதார நடவடிக்கை தொடர்பான ஆலோசனைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

சிறிலங்கன் ஏயார் லைன்ஸ் நிறுவனத்தாலேயே இந்த நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறிலங்கன் விமான சேவையை அரசு வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்கவுள்ளது. அதனால் விமான நிலையத்தின் கடமைகளை அரசு ஏற்க வேண்டும் என்று அரச பொருளாதார நடவடிக்கை தொடர்பான ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பரிந்துரையால் எந்தவொரு ஊழியருக்கும் தமது பணியில் பிரச்சினை ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந–ஐ–5)

## விமர்சனங்களுடன் மகேந்திரன் பதவி வகிப்பது நியாயமற்றது

### அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28
மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பான விவகாரத்தில் மகேந்திரன் பிரதமரின் நண்பரா? இல்லையா? என ஆராய்வதை விடுத்து, அவரால் நாட்டுக்கு நன்மையா? தீமையா? என்பதை ஆராய்வதுதான் முக்கியம். அவர் அந்தப் பதவியை வகிப்பது நியாயமற்றது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டுமக்களின் நிதியைச் சரியான முறையில் கையாள வேண்டியது முக்கியமாகும். உயர் நீதிமன்றம் இந்த விடயத்தில் வெளியிட்ட தீர்ப்பை நாம் விமர்சிக்கவில்லை. 'கோப்' குழுவின் முன்னிலையில் இவர் விசாரிக்கப்பட்டபோது, தனது மருமகனின் நிறுவனத்துக்கு பங்குகளை வழங்கியதை ஒப்புக்கொண்டார். கோப் குழுவில் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் மறுக்கவில்லை. அவர் மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்ற வாதத்தை முன்வைக்கின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், குற்றச்சாட்டுக்கள் உள்ளவர் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் இருக்கக்கூடாது, வெளியேற்றப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.

பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு உள்ளான மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், தொடர்ந்தும் அந்தப் பதவியை வகிப்பது நியாயமற்றது. அவரை அந்தப் பதவியிலிருந்து வெளியேற்றுவதன் மூலமே தேசிய ரீதியிலும், பன்னாட்டு ரீதியிலும் நம்பிக்கையை உறுதி செய்து கொள்ள முடியும் – என்றார்.
(ந–ஐ–5)

## வீடு வீடாகச் சென்று இனி சூழல் சுத்தப்படுத்தப்படும்

நாட்டில் பரவி வரும் டெங்குத் தொற்றைத் தடுக்க, வீடு வீடாகச் சென்று சூழலைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

முப்படையினர், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர் அதில் கலந்துகொள்வர். கொலன்னாவை, கடுவெல, கம்பஹா, தெஹிவளை உட்பட ஏனைய பிரதேசங்களிலும் இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவுள்ளது. இந்த வருடத்துக்குள் மாத்திரம் டெங்குத் தொற்றுக் காரணமாக 31 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரை காலமும் 20 ஆயிரத்து 731 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டது. மேல் மாகாணத்திலேயே இதில் அதிகமான நோயாளர்கள் இனங் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந–ஐ–5)

## கட்டுநாயக்கா வெடி பொருள்கள் வேறு இரு இடங்களுக்கு மாற்றம்

கொழும்பு, ஜூன் 28
கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் மேலதிக வெடி பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அவை தற்போது ஒதுக்குப்புறமான இரு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு விமானப்படை தெரிவித்துள்ளது.

விமானப்படைப் பேச்சாளர் விங்கொமாண்டர் சந்திம சில்வா தெரிவித்தார். கொஸ்கம சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கில் கடந்த 5ஆம் திகதி பெரிய வெடி விபத்து ஏற்பட்டது. பெருமளவில் அழிவுகள் ஏற்பட்டன.

இதையடுத்து முப்படைகளினதும் ஆயுதக் களஞ்சியங்களை சன அடர்த்தி குறைந்த பகுதிகளுக்கு மாற்ற திட்டமிடப்பட்டது. பாதுகாப்பை மீளாய்வு செய்யவும், பாதுகாப்பு அமைச்சு அவசர நடவடிக்கை எடுத்தது.

வெடிபொருள் களஞ்சிய வசதிகள் தொடர்பாக விமானப்படை ஏற்கனவே ஆய்வுகளை மேற்கொண்டது. வெடிபொருள்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சன அடர்த்தியுள்ள பகுதிகளில் உள்ள வெடிபொருள் களஞ்சியங்களின் பாதுகாப்பு தொடர்பாக ஆய்வுகள் நடத்தப்பட்டன. கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் மேலதிக வெடிபொருள்களை நாம் கையிருப்பில் வைத்திருந்தோம். தற்போது அவற்றை கட்டு நாயக்கவில் இருந்து அகற்றி, ஒதுக்குப் புறமான இரு இடங்களுக்கு மாற்றியுள்ளோம். (ந–ஐ–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச எப்போதும் தயார் நிலையில் அரசு

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 28

"தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் எந்த நேரத்திலும் பேச்சு நடத்த அரசு தயாராகவே உள்ளது. சம்பந்தனும், கூட்டமைப்பும் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளனர். தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நல்லாட்சியுடன், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்"– இவ்வாறு சபை முதல்வரும், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

"அரசுடன் பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 8 பேர் கொண்ட குழுவை நியமித்தது. இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?"என்றுவினவப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

"இனப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்கப்பட்டது. தமிழ் மக்கள் மற்றும் கூட்டமைப்பினர் இணைந்து இந்த ஆதரவை வழங்கியிருந்தனர். ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு கிடைத்தது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இந்த நாட்டு மக்கள் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆணை வழங்கியுள்ளனர். இனப் பிரச்சினைக்கு வெளிப்படைத் தன்மையான தீர்வை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அடிப்படைவாத சக்திகள் நாட்டில் உள்ளன. அவற்றுக்கு நாம் ஒரு போதும் அடிபணிய மாட்டோம். இடமளிக்கவும் மாட்டோம். இனங்களுக்கு இடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அனைவருக்கும் சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே அரசின் நோக்கம்.



தேசிய நல்லிணக்கத்துக்காக அரசு படிப்படியாக நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. இன்று அனைத்தும் எமது நாட்டுக்கு சாதகமாக அமைந்துள்ளன.

சிங்கள பௌத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப் போன்று தமிழ், முஸ்லிம் உட்பட அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்குவதே அரசின் நோக்கமாகும். 1950 ஆம் ஆண்டுகளிலிருந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தட்டிக் கழித்ததாலேயே 30 வருட காலப் போர் நாட்டில் தலையெடுத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்கு முன்வந்திருப்பது அரசின் மிதவாதப் போக்குக்கும், தேசிய நல்லிணக்கத்துக்கும் கிடைத்த வெற்றியாகும். வடக்கில் படிப்படியாக இராணுவ முகாம்கள் நீக்கப்படும். மக்களின் சிவில் வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கப்படும். தற்போதைய ஆட்சியில் தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டமும் ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தமிழ் மக்களின் காணிகளும் விடுவிக்கப்பட்டு அவர்களை சொந்த மண்ணில் குடியேற்றும் நடவடிக்கைகளை அரசு பூர்த்தி செய்யும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எந்த நேரத்திலும் பேச்சு நடத்த அரசு தயாராகவே உள்ளது" – என்றார். (ற-ஐ-5)

# ராஜபக்சவினர் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 28

"ராஜபக்சாக்கள் இந்த நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டார்கள். ஆட்சிக்கு வருவதற்கு ஜாதிக ஹெலஉறுமய இடமளிக்காது. 2020ஆம்ஆண்டுபுதியஅரசை அமைக்கும் திறப்பு ஜாதிக ஹெல உறுமய கட்சியிடமே உள்ளது."

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியுமே அடுத்து அதிகாரத்துக்கு வரவுள்ள கட்சிகள். இன்னும் அவை ஜனநாயக நீரோட்டத்துக்கு வர வேண்டியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியைப் பற்றி பேசுவதால் பயனேதுமில்லை. அவர்கள் இன்னும் 40 வருடங்களுக்கு அப்படியே இருப்பார்கள்" – என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# அல்லாஹ்வுக்கு அனுப்புங்கள் பயப்படுகிறோமா பார்க்கலாம்

## கொக்கரிக்கிறார் ஞானசாரர்

கொழும்பு, ஜூன் 28

"பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியை முஹம்மது நபி ஊடாக அல்லாஹ்வுக்கும் அனுப்பி வையுங்கள்"

இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதி மகியங்கனை பிரதேசத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. அதில் இலங்கைப் பொலிஸாருக்கு எதிராகவும், இனவாதத்தைத் தூண்டும் விதத்திலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டது என்று முஸ்லிம் கவுன்சில் ஒப் சிறிலங்கா பொலிஸ்மா அதிபருக்கு கடித மூலம் முறைப்பாடு செய்திருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் சிங்கள இணையத்தளத்துக்கு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

"பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியொன்றை முஹம்மது நபி ஊடாக அல்லாஹ்வுக்கும் அனுப்புங்கள். நாங்கள் பயப்படுகிறோமா என்று பார்க்கலாம். இது சிங்கள பௌத்தர்களின் நாடு. இது சவூதியோ, பாகிஸ்தானோ, ஆப்கானிஸ்தானோ அல்ல. எமது முன்னோர்களின் குருதியில், கண்ணீரில் கட்டியெழுப்பிய நாடு இது. அதைக் கொள்ளையடிக்க முற்படுபவர்களுக்கு எதிராக நாம் அன்றும் செயற்பட்டோம், நாளையும் செயற்படுவோம்.

முஸ்லிம் கவுன்சிலுக்கு சுருக்கமாகச் சொல்வது என்னவென்றால் இந்த நாட்டில் பிக்குகளுக்கு நல்லிணக்கத்தைக் கற்பிக்க முஸ்லிம்களுக்கு உரிமையில்லை" – என்றார். (ற-ஐ-5)

# உக்ரேனில் உள்ள குற்றவாளிகளை கையளிக்க உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் தேடப்படும் – உக்ரேனில் மறைந்திருக்கும் குற்றவாளிகளை கொழும்பிடம் கையளிப்பதற்கு வசதி செய்யும் உடன்பாடு ஒன்று இலங்கைக்கும், உக்ரேனுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.

உக்ரேனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உக்ரேன் வெளிவிவகார அமைச்சர் பாவ்லோ லிம்கின்னைச் சந்தித்து நடத்திய பேச்சின் போதே இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சின் முடிவில், குற்றவியல் விவகாரங்கள் தொடர்பாக பரஸ்பரம் சட்ட உதவிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும், தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் இணங்கும் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இலங்கையில் தேடப்படும் குற்றவாளிகள் – உக்ரேனில் மறைந்திருந்தால் அவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசு கோர முடியும்.

பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள, ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரும், மகிந்த ராஜபக்சவின் மைத்துனருமான உதயங்க வீரதுங்க தற்போது உக்ரேனில் மறைந்துள்ளார் என்று கருதப்படுகிறது.

அவரை இலங்கைக்கு கொண்டு வரும் நோக்கிலேயே இந்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (ற-ஐ-5)

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் ஐ.நா. பிரதிநிதியுடன் சந்திப்பு

ஐ.நா. மனித உரிமை சபைக்கான அமெரிக்காவின் வதிவிட நிரந்தரப் பிரதிநிதி கீத் ஹாபரை, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் சந்தித்துள்ளன.

இலங்கையின் மனித உரிமை நிலமை மற்றும் உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இன்று செவ்வாய்க் கிழமை வாய் மூல அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசேடமாக இலங்கையானது ஜெனிவா பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், உள்ளக விசாரணைப் பொறிமுறையில் பொதுநலவாய நீதிபதிகளை உள்ளடக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

புலம்பெயர் அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமை சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துவருகின்றன. இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் உதவிகளை வழங்க வேண்டும்என்றுபுலம்பெயர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ற-ஐ-5)

# சீனாவிடம் வாங்கிய கப்பல் இலங்கை வருகின்றது

கொழும்பு, ஜூன் 28

மகிந்த ராஜபக்ச அரசால் சீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரண்டாவது புதிய கப்பலும் இலங்கைக்கு வரவுள்ளது. சர்வதேச சரக்குக் கப்பல் போக்குவரத்துச் சந்தை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இந்தக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

எம்வி சிலோன் பிரின்சஸ் என்று பெயரிடப்பட்டதும், சீனாவில் கட்டப்பட்டதுமான இந்தக் கப்பல் 75 லட்சம் டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டது. ஏற்கனவே கடந்த வருடமும் இதேபோன்ற கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இரண்டு கப்பல்களுக்குமாக மகிந்த ராஜபக்சவின் அரசு 3 கோடி 50 லட்சம் டொலர் செலுத்தியுள்ளது. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தலைகுனிய வைக்கிறதே எம்மவரின் மதுபானப்பாவனை!

"தண்ணிச் சாமிகள்" மலிந்த இடம் என்று முதலிடம் பிடித்து உயர்ந்து நிற்கும் மாவட்டம் யாழ்ப்பாணம். இந்தத் தகவலைப் புள்ளி விவரங்களுடன் வெளிப்படுத்தி உள்ளார் நாட்டின் தலைவர்-ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதனை அடுத்துத் தொடுத்து, வரிசை கட்டியிருக்கும் மாவட்டங்கள், தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் ஆகும்.

தமிழர்கள் குடிகாரர்கள் என்பதை ஜனாதிபதி தொட்டுக்காட்டி இருப்பதோடு மட்டுமன்றி, அது குறித்து மிகுந்த கவலையையும் வெளியிட்டுள்ளார். அது ஆரோக்கியமான செயற்பாடு அல்ல என்பதை அவர் மனம் நொந்து தெரிவித்துள்ளார்.

அடுத்தவளமாக நோக்கினால், தமிழ் மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் குடிகாரர்கள் என்ற தேற்றம் தடித்துப் பருத்துள்ளதே!

நாட்டின் தலைவர் என்ற வகையில், ஆரோக்கிய மற்ற இந்த நிலையை அவர் வெளிப்படுத்தி உள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

மேலும், அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரும் மது விற்பனையில் மறைமுகமாகச் சம்பந்தப்பட்டுள்ளார்கள். அவர்கள் யார், யார் என்று சுட்டிக்காட்ட முடியாது.

அவ்வாறு செய்யும் பட்சத்தில் அரசைக் கொண்டு செலுத்த முடியாது. எவ்வாறாயினும் ஏதோ ஒரு வழியில், அதனைக் கட்டுப் படுத்தி ஆக வேண்டும். அதனூடாகவே மதுவற்ற ஒரு சமூகமாக மாற்றம் பெறமுடியும் என்றும் ஜனாதிபதி சரியாகவும், சாதுரியமாகவும் கூறி உள்ளார்.

மிகப்பெரும் குற்றங்களில் மதுப்பாவனை முன்னணியில் நிற்கிறது. அதற்குத் தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையோனோர் அடிமைகளாகி, தங்களையும் எரித்து, தமிழ் இனத்தையும் புல்லர்கள் ஆக்கிச் சுட்டெரிக்கும் போக்கு, வெட்கப்பட வேண்டியது ஆகும்.

அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு அரும்பாடுபட்டு, தமிழ் அரச தலைவர்கள் ஆட்சித் தலைமைக்கு அழுத்தம் கொடுக்கும் கட்டத்தில், தமிழர்கள் குடிகாரர்கள் என்றாகி இருப்பது மிகுந்த வெட்கத்துக்கு உரியதும் த்லைகுனிவை ஏற்படுத்துவதும் ஆகும்.

அதனை மனதிருத்திச் செயற்பட வேண்டிய வேளை இது. வெட்கத்துக்கு உரிய நிலைமையை நாமாகவே தேடிக்கொள்வது அபசாரம் அ்ன்றி வேறல்ல.

கஞ்சா மற்றும் போதைவஸ்துக் கடத்தலில் யாழ். குடாநாடு முக்கிய மையமாக முகிழ்த்து வருவதும் தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்று.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் போதைப்பொருள், உள்நுழைக்கப்படுவதில், பின்னணி ஏதோ இருப்பதாகவே கருதவேண்டி உள்ளது.

மறுபுறத்தில், கல்வித் தலங்கள், வணக்கத் தலங்களைச் சூழ, சாராயக் கடைகள் மற்றும் போதைப் பொருள் "நிலையங்கள்" பல்கிப் பெருகி வருவதும் இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டியதே.

இவை, தமிழ் மக்களின் வாழ்வைச் சிதைக்க மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட சதி எனக் கொள்ளத்தக்கவை.

இந்த நிலையைப் போக்கடித்து, எமது இளைஞர்களை மீட்டெடுக்க ஒன்றிணைந்த வேலைத் திட்டங்கள் அவசியமும் அவசரமும் ஆகும். அது குறித்து நாம் மனம் கொள்வது எப்போது?

# பிரிட்டனது ஐரோப்பிய ஒன்றிய வெளியேற்றம் ஈழத்தமிழர் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமா?

சிவா.செல்லையா

இடம்பெற்ற கருத்துக் கணிப்பில் 51.6 சதவீத பிரித்தானிய மக்கள், தமது நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகவும், தமது சுயாதீனத்தை உறுதிப்படுத்தவும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். இது இன்று உலகில் பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் பல அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்வு கூற இயலும்.

ஈழத்தமிழர்களை, பிரித்தானிய அரசே சிங்கள அரசுடன் இணைத்து அடிமைப்படுத்தியது. ஈழத்தமிழர்களும் ஒட்டுமொத்த இலங்கையில் இருந்து பிரிந்து வடக்கு, கிழக்குத் தாயகத்தில் தனியாக வாழும் உரிமையைக் கோருகின்றனர். கடந்த சில தசாப்தங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு, தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்த பிரித்தானியா, பல தசாப்தங்களாக தொடர் இன அழிப்புக்கு உள்ளாகும் தமிழினம் பிரிந்து போவதற்குத் தனது ஆதரவை வழங்க வேண்டும். வாக்கெடுப்புக்குப் பின்னர் ஸ்கொட்லாந்து-தற்போது பிரிந்து செல்ல முனைவதைப் போல் ஈழத்திலும் நிகழ வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசுடனும் அமெரிக்க அரசுடனும் இணைந்து பிரித்தானிய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டதை அடக்க முனைந்தது. இதன் முதல்கட்டமாக விடுதலைப் புலிகளைத் தடைசெய்தது. இலங்கை அரசுக்கு ஆயுத தொழில் நுட்ப உதவிகளைச் செய்தது அமெரிக்கா. அப்போதைய பிரித்தானிய வெளியுறவுச் செயலர் ஜாக்ஸ்ரோ மூலம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அழுத்தம் கொடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்தினாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டது.

தற்போது பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் முரண்பட்டு அதிலிருந்து விலகியுள்ளது. இந்த நிலையில் பிரித்தானிய ஆதரவுடன் ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிறைவேற்றப்பட்ட விடுதலைப்புலிகள் மீதான தடை செல்லுபடிற்றதாக வேண்டிய இராஜதந்திர நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு கிடைத்த பெருவெற்றியாகும். எனவே சட்ட ரீதியாக ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை தற்போது செல்லுபடியற்றதாக ஆக வேண்டும். புதிய பிரித்தானிய அரசும், ஒன்றுபட்ட இலங்கை அரசில் இருந்து பிரிந்து செல்லுவதற்கான தமிழர்களது தமிழீழக் கோரிக்கையை இராஜ தந்திரரீதியில் ஆதரிக்க வேண் டிய சூழல் உருவாகி உள்ளது. அத்தோடு சட்ட ரீதியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டிய கட்டாயத்தை, 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் இலங்கை அரசு மேற்கொண்ட இனஅழிப்பு ஏற்படுத்தி உள்ளது.

விடுதலைப் புலிகளது நிர்வாகத்தில் ஒரு நாட்டுக்கு உரிய அனைத்துக் கட்டமைப்புக்களும் உள்ளடங்கி இருந்தன. நீதி, நிர்வாகம், அரசியல், மருத்துவம், காவற்றுறை எனப் பொதுப்பரிபாலனம் சிறப்பாக இடம்பெற்றது. இந்த நிலையிலேயே நோர்வே அரசு 2002 ஆம் ஆண்டு இடையீட்டாளராகச் செயற்பட்டு சமாதான ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே ஏற்படுத்தி வைத்தது. அதனை அடுத்து நிகழ்ந்த பேச்சு வார்த்தைகள் இணைத் தலைமை நாடுகளின் அனுசரணையில் நடைபெற்றன. அதன் பின்பு 2006 இல் இலங்கை அரசால் ஒரு தலைப் பட்சமாகப் போர் தொடங்கப்பட்டது. இது 2009 வரை தொடர்ந்து வடக்கு, கிழக்கில் அமைந்த தமிழ் மக்களின் அரசு அழிக்கப்பட்டது? ஒரு நாட்டையே அழித்த குற்றத்தை இலங்கை அரசு புரிந்து உள்ளதுஎன்ற உண்மை உணர்த்தப்பட வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இனப்படுகொலையை மறைத்து மனிதாபிமான நடவடிக்கை எனப் பாராட்டி, பின்னர் போர்க்குற்ற விசாரணை எனத் தொடங்கி, அதனை உள்ளக விசாரணையாக மாற்றி, சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பையும் இலங்கை அரசு நிராகரித்த நிலையில், தமிழ் மக்களுக்கு உரிய ஒரே ஒரு இராஜதந்திர நகர்வு நாடழித்த குற்றத்துக்கான தண்டனை (Nation Havocked Penalization) என்ற அணுகுமுறையை ஏற்படுத்துதல் வேண்டும். அவ்வாறு அணுகின் இலங்கை அரசு மட்டுமல்ல, இந்தியா மற்றும் இணைத் தலைமை நாடுகளும் குற்றவாளிகளாகக் கருதப்பட நேரும். இது தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் பிரஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

> உலகில் தமிழ் அடையாளத்தைப் பாது காக்க இலங்கையில் வடக்கு கிழக்கில் சுதேச ஆட்சி அலகு முறை மிகவும் அவசியமானதாகும். இலங்கையில் ஆயுதத்தை அரசியல் காப்பாகப் பயன்படுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். நட்பு ரீதியான அரசியல் பரிவர்த்தனைகள் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே உருவாக்கப்படல் வேண்டும்.

ஈழத்தமிழ் மக்களது கூட்டு மனித உரிமைத்தேவைகளை (Collective Human Right Needs) சர்வதேசமும் இலங்கை அரசும் புரிந்து கொள்ளாத தன்மை காணப்படுகின்றது. இதனை வெளிப்படுத்த முனையும் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக இராஜதந்திர அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. இதனை எதிர்கொள்ள எமது சமூகநிலை, அரசியல் நிலை, இராஜதந்திர நிலைகளில் எமக்கு இதுகாறும் ஏற்பட்ட அழிவுகளையும் அதன் விளைவுகளையும் எடுத்துக் காட்ட வேண்டும். தமிழ் மக்களது கூட்டு மனித உரிமைப் கருப்பொருளாக தமிழீழம் விளங்குகின்றது.

தமிழ் மக்களது கூட்டு மனித உரிமைத்தேவைகள், தமிழ் மக்கள் மீதான இன அழிப்புக்கு வெளிப்படையான சர்வதேச விசாரணைகளையும் பரிந்துரைகளையும் எதிர்பார்த்து உள்ளது. இலங்கையின் இறைமை பிரித்தானியரால் சிங்களவரிடம் கையளிக்கப்பட்ட ஆண்டான 1948 முதலே தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக சிறுபான்மையினராக ஆக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வருகின்றனர். உலகில் தமிழ் அடையாளத்தைப் பா்து காக்க இலங்கையில் வடக்கு கிழக்கில் சுதேச ஆட்சி அலகு முறை மிகவும் அவசியமானதாகும். இலங்கையில் ஆயுதத்தை அரசியல் காப்பாகப் பயன் படுத்தல் தவிர்க்கப் படல் வேண்டும். நட்பு ரீதியான அரசியல் பரிவர்த்தனைகள் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் மக்கள் மீதான இன அழிப்புத் தொடர்பான விழிப்பை கூட்டு மனித உரிமைத் தேவைகள் என்ற கருப்பொருளில் மேற் கொள்ள வேண்டும்.

கூட்டு மனித உரிமைத்தேவைகள் என்ற கருப்பொருளில் அணுகுவதால்:

01.தொடர்ந்தும் தமிழினம் அழியாது தடுக்கப்படும்.
02.உலக நியதிக்கு ஏற்ப பாதுகாப்பைப் பெற இயலும்.
03.சுய அரசியல் ஆளுகையை ஐ.நா. அனுசரணையுடன் பெறும்.
04.தமிழின அழிப்பில் ஈடுபட்ட, ஈடுபடும் குற்றவாளிகள் அடையாளம் காணப்படுவர்.
05.தமிழ் மக்களுக்கு மனிதத்துவம் கிடைக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலான குடும்ப அரசியல் கலாசாரத்தின் தோற்றம்

லங்காதீப
தமிழில்: சரா

(நாட்டைச் சீரழித்துள்ள கடந்தகால அரசியல் நிர்வாகம் என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சி அரசியல் சார்ந்து செயற்பட ஆரம்பித்ததால், இராஜ தந்திரத்துடன் நாட்டை நிர்வகிக்க வேண்டியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் தாமாகவே அதற்கு வேலி போட்டுக் கொண்டார். பொது அமைப்புக்கள் முன்னின்று செயற்பட்டு 2015 ஜனவரியில் அவருக்கு அந்த மாபெரும் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமைக்குப் பிரதியீடாக, தற்காலிகமாகவேனும் கட்சி அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படுவதற்கு, நல்லாட்சி ஒன்றை ஏற்படுத்தி வைக்க, நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்ற ஊழல், மோசடிப் பேர்வழிகள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ள ஜனாதிபதி செயற்பட்டிருக்க வேண்டும். ஆனாலும், வெளிப்படுத்தப்பட்டுவரும் கருத்து வெளிப்பாடுகள், பேச்சுக்கள் மூலமாகவும், பின்பற்றப்பட்டுவரும் நடைமுறைப் போக்குகளின் காரணமா கவும் அந்த சிவில் சமூகத்தின் நம்பிக்கை சிதைந்து போவதற்கு இட மளிக்கப்பட்டு வருவது தெரிகிறது. இருந்தாலும் கூட அரசு புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். அந்த அரசமைப்பானது, எமது உள்நாட்டு அரசியல் கலாசாரத்துக்கு ஒத்துப் போகும், எளிமையான ஆனாலும் திடமான ஒன்றாக உருவாக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கின்றோம்.

**"பண்டாரநாயக்கா போன்ற கட்சியின் மூத்த தரப்பினருக்குக் கிடைக்க வேண்டியிருந்த பதவிநிலை கிட்டாது போனமை வரலாற்றில் இடம்பெற்ற பாரதூரமான தவறொன்றாகும். அத்தகைய தவறொன்று அன்று இடம்பெறாது இருந்திருக்குமானால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்றொரு கட்சி உருவாவதற்கு இடமிருந்திருக்காது."**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1951ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டதொன்று. அது ஆரம்பிக்கப்பட்டமைக்கு முக்கியமான காரணம் ஒன்று இருந்தது. அதாவது அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் மறைவுக்குப் பின்னர், கட்சித் தலைமை தமக்கே கிடைக்குமென்பதே அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனாலும் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் புதல்வரான டட்லி சேனநாயக்காவே பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பண்டாரநாயக்கா போன்ற கட்சியின் மூத்த தரப்பினருக்குக் கிடைக்க வேண்டியிருந்த பதவிநிலை கிட்டாது போனமை வரலாற்றில் இடம்பெற்ற பாரதூரமான தவறொன்றாகும். அத்தகைய தவறொன்று அன்று இடம் பெறாது இருந்திருக்குமானால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்றொரு கட்சி உருவாவதற்கு இடமிருந்திருக்காது. அதே போன்று இன்று நாட்டில் தலையெடுத்துள்ள ஏராளமான தேசியப் பிரச்சினைகள் ஏற்படாதிருந்திருக்கும். எவ்வாறான போதிலும், அன்றைய இந்த நிலைப்பாடானது மேலுமொரு அரசியல் கட்சி உருவாவதற்கு வழிசமைத்திருந்ததோடு, அன்றைய அரசில் சுகாதார மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க மேலும் சில பிரமுகர்களுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கிக் கொண்டார்.



### சிங்களத்தை அரசகரும மொழியாக்குதல்

1952 ஆம் ஆண்டில் பிரதமர் டி.எஸ் சேனநாயக்க சாவடைந்தார். நீர்ப்பாசன மற்றும் விவசாய அமைச்சராக இருந்த அவரது புதல்வரான டட்லி சேனாநாயக்க பிரதமராகப் பதவி ஏற்றார். ஆனாலும் மக்களின் விருப்பு இன்றி பதவியில் இருப்பதற்கு விரும்பாத அவர், பொது மக்களின் விருப்பை அறிந்து கொள்வதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலொன்றை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு, அன்று தேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவுக்கு ஆலோசனை வழங்கினார். அதற்கமைய நடத்தப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலில் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றியை ஈட்டிக் கொண்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 09 ஆசனங்கள் மட்டுமே கிடைத் திருந்தன. அந்தக் தோல்வியினால் துவண்டு போகாத பண்டாரநாயக்க எந்த விதத்திலாவது அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் திடசங்கற்பத்துடன் செயற்பட்டார். அன்றைய காலகட்டத்தில் நாட்டின் ஒட்டுமொத்த தொழிற் சங்கங்களும் லங்கா சமசமாஜக் கட்சியினதும், கம் யூனிஸ்ட் கட்சியினதும் ஆதிக்கத்தின் கீழேயே செயற்பட்டன. 1953 ஆம் ஆண்டில் 50 சதங்களுக்குச் சற்று மேற்பட்டிருந்த ஒரு கொத்து அரிசியின் விலையை அரசு 70 சதங்களாக உயர்த்தியது. அதற்கு எதிராகக் கிளந்தெழுந்த சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சித் தொழிற் சங்கங்களின் செயற்பாட்டினால் ஓகஸ்ட் 12 ஆம் திகதியன்று பெரும் கடையடைப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

*(தொடரும்)*

## தீர விசாரித்தறிவதே மெய்

இன்று யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர், மாணவர் துஷ்பிரயோகம் என்னும் செய்தி பரபரப்பாகப் பேசப்படுவதும், அது சம்பந்தமாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதும் அதிபர், ஆசிரியர்கள் சிலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுமான செய்திகளை வாசிக்கும்போது நானும் ஒரு முன்னாள் ஆசிரியர் என்னும் நிலையில் வெட்கமும், வேதனையும் அடைகின்றேன். இதற்குத் தண்டனையாக சம்பவங்களுடன் சம்பந்தப்படும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யாது வேலை நீக்கம் செய்ய வேண்டும் எனப் பெற்றோரும், மாணவரும் கோருவதில் நியாயம் இருந்தாலும், அதன் உண்மைத் தன்மை கண்டறியப்பட வேண்டும். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் தீரவிசாரித்தறிவதே மெய் என ஒரு முதுமொழி உண்டு.

நான் ஆசிரியராக இருந்த காலத்தில் இப்படியான சம்பவங்கள் எதுவும் நடந்ததாக அறியவில்லை. காரணம் அப்போது ஆசிரிய மாணவ உறவு நல்ல முறையில் இருந்தது. பாடசாலை சட்டதிட்டங்களுக்கு அமைய மாணவர்கள் ஒழுகினர். மாணவர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கும் சந்தர்ப்பங்களில் சில மாணவர்கள் குறித்த ஆசிரியர் மீது வெறுப்படைந்து அவரைப்பற்றி பாடசாலைச் சுவரிலும் வேறு இடங்களிலும் எழுதித் தத்தமது வஞ்சம் தீர்த்த வரலாறுகள் உண்டு. அத்துடன் அவர்கள் கவலை மாறிவிடும். சில மாணவர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று இந்த ஆசிரியர் என்னை ஒரு மாதிரிப் பார்க்கிறார், பேசுகிறார் என வீட்டில் முறைப்பாடு கொடுத்துப் பெற்றோர், அதிபரிடம் முறைப்பாடு கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றதுண்டு. ஆனால், மதிநுட்பமுள்ள அதிபர் அவர்களை நான் விசாரிக்கிறேன் எனக்கூறி அனுப்பிவிட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் எதுவும் விசாரித்து அவரை மனம் நோகப் பண்ணாது வேறு விதத்தில் மாணவர்களிடமும் ஏனைய ஆசிரியர்களிடமும் விசாரித்து உண்மையை அறிந்து பின்னர் பெற்றோரை அழைத்து நிலமையை விளங்கிப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்த வரலாறுகளும் உண்டு.

இன்றைய மாணவர்களில் பலர் தமது சுதந்திரத்தில் எவர் குறுக்கிடுவதையும் விரும்பாதவர்கள். எனவே அவர்களின் விடயத்தில் அனைவரும் மிக விழிப்பாகச் செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் மீது வீண்பழி சூழாது பார்க்க வேண்டும். ஆசிரியத் தொழில் புனிதமான தொழில். தவறுபவர்களுக்குத் தண்டனை கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் அவர்களின் எதிர்காலம் பற்றி சகலரும் சற்றுச் சிந்திக்க வேண்டும். எனவே இந்த விடயம் பற்றி தீர விசாரித்தறிந்தே உண்மையை அறிய வேண்டும் என்பது எனது கருத்தாகும். சம்பந்தப்பட்ட அனைவரும் கவனத்தில் எடுப்பார்களா?

ஆ.த.குணத்திலகம், ஓய்வுபெற்ற ஆசிரியர்,
அகில இலங்கை சமாதான நீதிவான்.

## எது சரியான நடைமுறை?

சைவமக்கள் ஆலயங்களில் இடது கையின்மேல் வலது கையை வைத்து குருக்களிடமிருந்து விபூதியை வாங்கி, கிழக்கு முகமாகவோ, அல்லது வடக்கு முகமாகவோ நின்று அண்ணாந்து கொண்டு நிலத்தில் சிந்தாவண்ணம் வலதுகை நடு மூன்று விரல்களாலும் சிவ சிவ என உச்சரித்துக் கொண்டு மூன்று தடவைகள் நெற்றியில் தரித்துக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இன்று அந்த நடைமுறை மாறியுள்ளது. திசை எதுவுமின்றிப் பெரியவர்கள் கூட பணிவாக நின்று குருக்களே பூசி விடட்டும் என்று குருக்கள் முன்னால் நிற்கின்றார்கள். குருக்கள்மாரும் பெரு விரலால் சிறியவர் பெரியவர் யாவருக்கும் பூசி விட்டுச் செல்கின்றார்கள். இதனால் காலக் கிரமத்தில் விபூதி எப்படித் தரித்துக் கொள்வது என்பதே சைவ சமயத்தவர்களுக்குத் தெரியாமல் போய் விடும்.

சில ஆலயங்களில் (நகர்ப்புறம்) இந்த நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த முறை சரியானதா என்பதைச் சிவாச்சாரியார்களே தீர்மானிக்கட்டும்.

சைவ அன்பர்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதக் குண்டுத் தாக்குதல் லெபனானில் ஆறு பேர் சாவு

பெய்ரூட், ஜூன் 28
லெபனானில் நேற்று நடத்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். 19 பேர் காயமடைந்தனர். குவா என்னும் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்தவர்களில் பாதுகாப்புத் தரப்பினரும் அடங்குவர்.
லெபனானில் ஷியா பிரிவு முஸ்லிம்கள்செறிந்துவாழ்கின்றனர். அங்குள்ள ஹிஸ்புல்லா இயக்கம் சிரிய ஜனதிபதி பஸர் அல் அசாத்துக்கு ஆதரவாகப் போரிட்டு வருகின்றது.
(ற-ரி4)

## ஊடகவியலாளர்களை கொன்று காணொலி வெளியிட்டது ஐ.எஸ்.

டமஸ்கஸ், ஜூன் 28
ஊடகவியலாளர்கள் 5 பேரைக் கொலை செய்யும் காணொலி ஒன்றை ஐ.எஸ். அமைப்பு வெளியிட்டுள்ளது. இந்தக் காணொலி கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள் ளது.
ஒக்ரோபர், டிசெம்பர் மாதங்களில் குறித்த ஐவரும் டயர் எல் சோர் நகரில் கொல்லப்பட்டுள்ளனர் என்று சிரிய அவதானிப்புக் குழு தெரிவித்தது.
ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிட்டமைக்காகவே அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-ரி4)

## வானில் தீப்பிடித்தது பயணிகள் விமானம்



சிங்கப்பூர் சிட்டி, ஜூன் 28
வானில் தீப்பிடித்த பயணிகள் விமானம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டது. சிங்கப்பூரில் இருந்து மிலானுக்குப் பயணித்த விமானமே தீப்பிடித்தது. அதில் 222 பயணிகளும், 19 விமானப் பணியாளர்களும் இருந்தனர்.
எண்ணெய்க்கசிவுஏற்பட்டுள்ளது என்று அவசர எச்சரிக்கைத் தகவலை விமானம் காட்டியதை அடுத்தே விமானம் தரையிறக்கப்பட்டது. சங்காய் விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்பட்டபோது தீப்பிடித்திருந்தது.
விமானத்தில் இருந்தவர்கள் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டனர். தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர். பயணிகள் வேறு விமானம் மூலம் பயணத்தைத் தொடர்ந்தனர்.
இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள்தெரிவித்தனர்.(ற-ரி4)



# வான் வழித் தாக்குதல்
# சிரிய சிறுவர்கள் 25 பே

டமஸ்கஸ், ஜூன் 28
சிரியாவின் கிழக்குப் பகுதியில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 25 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. சிறுவர் நிதியம் தெரிவித்தது. டார் - அல் - சோர் மாகாணத்தின் அல்குரியா பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து தொடர்ச்சியாக சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன என்று அங்குள்ள சுகாதாரப் பணியாளர்கள் தெரிவித்தனர்.
கடந்த சனிக்கிழமை இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன. சிரிய அல்லது ரஷ்ய விமானங்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.
சன நெருக்கடியான 3 இடங்களில் பிரதான தாக்குதல்கள் நடத்துள்ளன. அவற்றில் பள்ளிவாசல் ஒன்றும் சேதமாகியுள்ளது. இது கண்டனத்துக்குரியது - என்று சிறுவர் நிதியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
டர் - அல் - சோர் மாகாணம் ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் மீது தற்போது ரஷ்யா மற்றும் சிரிய விமா
னப்
நடத்
பின்
றன
சிரி
தொ
களி
களி
லப்

## வளர்த்தவர்களை மிரட்டிய

வீட்டில் செல்லமாக வளர்த்த பூனை ஒன்று வீட்டிலில் இருந்தவர்களைக் கடித்ததுடன் பிணைக் கைதிகளாகவும் பிடித்து வைத்தது. இந்தச் சம்பவம் அமெரிக்காவின் விஸ்காசின் பகுதியில் நடந்துள்ளது.
தம்பதிகள் குறித்த பூனையை வளர்த்துள்ளனர். அதற்கு கொன்னா என பெயரிட்டிருந்தனர். திடீரென கடந்த வெள்ளிக்கிழமை பூனையின் குணம்மாறியது. மியாவ்எனகத்துவதற்குப்பதிலாக வினோதமான குரலில் சத்தமிட்டது. திடீரென பெண்ணின் கணவரைக் கடித்தது.
அதைத் தொடர்ந்து மிரண்டு தப்பி ஓட முயன்ற தம்பதியை வெளியேற விடாமல் கொடூரமாக நடந்துகொண்டு வழி மறித்து பிணைக் கைதிகள் ஆக்கியது.
பயந்து போன அ
தொலைபேசி இ
டனர். உடனே பெ
விரைந்து வந்து
னர். கொடூரமாக
பிடித்துச் சென்ற

## ஆர்ப்பாட்டத்தில் வன்முறை; துருக்கியில் 19 பேர் கைது



இஸ்தான்புல், ஜூன் 28
துருக்கியில் நேற்றுமுன்தினம் நடந்த ஓரினச் சேர்க்கையாளர் ஊர்வலத்தில் வன்முறை ஏற்பட்டது. பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர். 19 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த ஊர்வலம் வருடாந்தம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஊர்வலத்தில் சட்டத்தை மீறிய வாசகங்கள் பயன்படுத்தப்பட்டன. அதனால் பொலிஸார் தடை விதித்தனர்.
ஏனைய இஸ்லாமிய நாடுகளைப் போன்று துருக்கியில் ஓரினச் சேர்க்கைக்குத் தடை விதிக்கப்படுவதில்லை. சிறுபான்மையினர், பெண்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பில் துருக்கி ஜனாதிபதி கரிசனை கொண்டுள்ளார். ஆயினும் ரம்ழான் புனித மாதத்தில் இவ்வாறான ஊர்வலங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்பதே இதற்குப் பிரதான காரணமாகும்.
(ற-ரி4)



சீனாவில் மாக்கஸ் பகுதியில் உள்
பெண் பன்டா 2 ஆண் குட்டிகள
இணைந்ததன் மூலம் கருக் கெ
கண்ணாடிப் பெட்டியில் பாதுகாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐ. ஒன்றியத்திலிருந்து விலகியதால் உணவுகள் விலைகள் அதிகரிக்கும்

## பிரிட்டன் தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 28

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதால் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும்.

இவ்வாறு அந்த நாட்டுத் தேசிய விவசாயிகள் ஒன்றியம் எச்சரித்துள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் மெரிச் ரேய்மன் தெரிவித்ததாவது-

பிரிட்டன் பவுண்ட் பெறுமதி என்றுமில்லாதவாறு 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1986ஆம் ஆண்டு இருந்த பெறுமதியை அடைந்துள்ளது. இது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாம் எமக்குத் தேவையானவற்றில் 60 சதவீத உணவுகளையே உற்பத்தி செய்கின்றோம். ஏனையவற்றை இறக்குமதி செய்கின்றோம். பணப் பெறுமதி வீழ்ச்சியடைந்தால் உணவு இறக்குமதிக்கான செலவு அதிகரிக்கும்.

2014ஆம் ஆண்டு விவசாயி ஒருவரின் ஆண்டு வருமானம் 20 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட் ஆகும். அதில் 55 சதவீதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலம் கிடைக்கின்றது. ஐரோப்பிய ஒன்றிய ஏற்றுமதியில் பிரிட்டன் முக்கிய இடம் வகிக்கின்றது.

பிரிட்டன் விலகுவதால் விவசாயிகள் பெரும் சிக்கலை எதிர்கொள்வர். அடுத்த மாதம் முதலாம் திகதி இது குறித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாற்றங்கள் விவசாயிகளுக்கு இலாபத்தை ஏற்படுத்தும் என்பதை உறுதி செய்ய வேண்டும் - என்றார். (ற-ரி4)

# விபத்தில் 5 பேர் சாவு

வொஷிங்டன், ஜூன் 28

தெற்கு அமெரிக்காவின் லாஸ் அனிமாஸ் பகுதியில் ரயிலும், வானும் விபத்துக்குள்ளாகின. அதில் 3 சிறுவர்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

வான் சாரதியும், பயணம் செய்தவர்களில் 4 பேரும் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மினிவானை மோதிய ரயில் தனது வேகத்தில் மாற்றமின்றிச் சென்றுள்ளது. மினிவானில் இருந்த சாரதி, பயணிகள் ஆகியோர் இருக்கைப் பட்டிகளை அணிந்திருந்தமையால் அவர்களால் உடனடியாக வெளியேற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# ...ல்களில் ...பேர் சாவு

...ல் ஒன் ... கண் ... சிறுவர் ... கையில் ... ஐ.எஸ். ... உள் ... கட்டுப் ... து தற் ... விமா

...னப் படைகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. ஐ.எஸ். அமைப்பின் இலக்குகளே தாக்கப் படுகின்றன என்று அவை கூறுகின்றன.

சிரியாவில் உள்ள தன்னார்வத் தொண்டு அமைப்புகளின் தகவல்களின்படி விமானத் தாக்குதல்களில் பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர். (ற-ரி4)



# ரோலக்கோஸ்டர் உடைந்து வீழ்ந்ததில் ஏழு பேர் காயம்

எடின்பரோ, ஜூன்.28

ஸ்கொட்லாந்தில், மதர்வெல் பகுதியில் உள்ள கேளிக்கை பூங்காவில் ரோலக்கோஸ்டர் உடைந்து வீழ்ந்தில் 7 பேர் காயமடைந்தனர். சுனாமிச் சவாரி என அழைக்கப்படும் இந்த சவாரி நடந்போது உடைந்த ரோலக் கோஸ்ட்டர் 20 மீற்றர் உயரத்தில் இருந்து விழுந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த முதலுதவிக்குழுவினர் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்கினர்.

குறித்த ரோலக்கோஸ்டர் 650 கிலோமீற்றர் தூரமுடைய தண்டவாளத்தில், மணிக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும்.

விபத்துக்கான காரணம் குறித்த விசாரணை இடம்பெற்ற வருகின்றது. (ற-ரி4)

# ஓரினச் சேர்க்கையாளர்களை மோசமாக நடத்தியமைக்கு மன்னிப்புக் கோரவேண்டும்

## பாப்பரசர் பிரான்ஸிஸ் தெரிவிப்பு

ரோம், ஜூன் 28

கிறிஸ்தவர்களும், ரோமன் கத்தோலிக்க ஆலயங்களும் ஓரினச் சேர்க்கையாளர்களை மோசமாக நடத்தியமைக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இவ்வாறு பாப்பரசர் பிரான்ஸிஸ் தெரிவித்தார்.

ஆர்மேனியாவில் இருந்து ரோமுக்குப் பயணிக்கும் முன்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது-

பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மோசமான ஆயுதங்களாகும். கடந்த காலங்களுக்கு நாம் மன்னிப்புக் கோர வேண்டும். சர்வதேசப் பயணங்களின் மூலம் பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். கத்தோலிக்கச் திருச்சபைகள் ஓரினச் சேர்க்கையாளர்களை நடத்திய விதம் தொடர்பில் மன்னிப்புத் தெரிவிக்க வேண்டும்.



இன்னொருவருக்குத் தீர்ப்புச் செய்வதற்கு நாம் யார்?. பல்வேறு நாடுகளில் வேறுபட்ட கலாசாரங்கள், பின்னூட்டங்கள் உண்டு. அவற்றின்படி ஓரினச் சேர்க்கையாளர்கள் பல்வேறு விதமான தாக்குதல்களுக்கும், புறந்தள்ளல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அவற்றுக்கு ஆலயங்களும் ஆதரவாகச் செயற்படுகின்றன. இந்த உணர்வுகள் மாற வேண்டும் - என்றார். (ற-ரி4)

# ...ழிய பூனை

...க்கியது.

...ந்து போன அவர்கள் அவசரகால பொலிஸ் ...ாலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண் ...ர். உடனே பொலிஸார் அவர்களது வீட்டுக்கு ...ரைந்து வந்து தம்பதியை பாதுகாப்பாக மீட்ட ... கொடூரமாக நடந்த பூனையை அங்கிருந்து ...த்துச் சென்றனர். (ற-ரி4)

# செல்பியால் ஏற்பட்ட விபரீதம் நண்பர்கள் நீரில் மூழ்கிச் சாவு

புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் கங்கை நதியில் செல்பி எடு... முயன்ற 7 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் நண்பர்கள் என்று... படம் எடுக்கும்போது தவறி விழுந்தவரைக் காப்பாற்ற முயன்... அனைவருமே நீரில் மூழ்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்ற...

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டம் கலோனல் கஞ்ச் ...தியைச் சேர்ந்தவர் சிவம். இவர் தனது நண்பர்களான சச்சின் குப்... போலு திவாரி, ரோஹித், மக்சூத், போலா, சத்யம் ஆகியோரு... கடந்த புதன் கிழமை கங்கை நதியில் குளிக்கச் சென்றுள்ளார்.

அண்மையில் பெய்த மழை காரணமாக கங்கை நதியில் வெள்... பெருக்கெடுத்து ஓடுகின்றது. நதியில் குளித்துக் கொண்டிரு... சிவத்திற்கு ஆற்றின் நீரோட்டம் அதிகமுள்ள பகுதியில் செ... எடுத்து தனது நண்பர்களை ஆச்சரியப்படுத்த விரும்பினார். ...யின் நீரோட்டம் அதிகமுள்ள பகுதிக்கு சென்றார். பின்னர் செ... எடுக்கத் தயாரானபோது எதிர்பாராதவிதமாக ஆற்றின் நீரோட்ட... அடித்துச் செல்லப்பட்டார்.

அவரது நண்பர் மக்சூத் அவரைக் காப்பாற்ற முயன்றார். இ... முயற்சியில் அவரும் நீரில் மூழ்கினார். அடுத்தடுத்து நண்பர்... ஒருவரையொருவர் காக்கும் முயற்சியில் ஒவ்வொருவராக நீ... குதித்தனர். வேகமான நீரோட்டத்தில் அவர்கள் அனைவரும் நீ... மூழ்கினர். அந்தப் பகுதியில் இருந்தவர்கள் அளித்த தகவலின்பே... நீர்மூழ்கி வீரர்கள் தேடுதல் நடத்தினர். நீண்ட தேடுதலுக்குப் பி... 7 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் 21க்கும் 31க்கும் இடைப்பட்ட வயதினர்.

செல்பி எடுக்கும் ஆசையில் நண்பர்கள் உயிரை இழந்த சம்ப... சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-...



...பகுதியில் உள்ள இராட்சத பண்டா, இரட்டைக் குட்டிகளை நேற்று முன்தினம் ஈன்றுள்ளது. சின்சின் எனும் பெயர்கொண்ட ...ஆண் குட்டிகளை ஈன்றுள்ளது. கைகை எனப் பெயர் கொண்ட ஆண் பண்டாவுடன் சின்சின் இயற்கை முறை யில் ...லம் கருக் கொண்டது. ஒரு குட்டி 1.38 கிராமிலும் மற்றையது 53.8 கிராமிலும் உள்ளன. எடை குறைந்த பண்டா ...யில் பாதுகாக்கப்படுகிறது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 8

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 8 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

**நண்பர்கள்**

1, 4 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களே இவர்களுக்குச் சிறந்த நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் இருப்பார்கள். 8 ஆம் திகதி பிறந்தவர்களாலும் இவர்கள் நன்மையடையலாம். 6, 5 திகதியில் பிறந்தவர்களாலும் நன்மை அடையலாம்!

**இவர்களது நோய்கள்**

இவர்கள் குடல் பலவீனம் உடையவர்கள். சிறு வயதில் வயிற்றுவலி இவர்களில் பெரும்பாலானோருக்கு இருக்கும். ஆஸ்துமா, மூச்சு விடுதல் பிரச் சினை அடிக்கடி உண்டு. தலைவலி, கிறு கிறுப்பு ஆகியவற்றால் அடிக்கடி பாதிக் கப்படுவார்கள். குருதிச்சோகை எளிதில் ஏற்பட்டு விடும். எனவே அடிக்கடி குருதிப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. வாதம் மூட்டுப்பிடிப்புகளால் பாதிப்புகள் அதிகம் உண்டு. ஈரல் அடிக்கடி பாதிக் கப்படும். உணவில் எலுமிச்சம் பழம், அன்னாசி, வாழைப்பழம் ஆகியவற்றை அடிக்கடி சேர்த் துக் கொள்ள வேண்டும். அகத்திக்கீரை மிகவும் நல்லது.

**சிறப்புப் பலன்கள்**

மக்கள் அனைவரும் பயப்படும் எண்ணாக 8ஆம் எண் விளங்குகின்றது. அதன் சிறப்பு பலன்களைப் பற்றிப் பார்ப்போம். மக்களின் வாழ்க்கைக்கும், முன்னேற்றத்துக்கும் ஆதாரமாக விளங்குவது இந்த 8 ஆம் எண்ணே. ஆனால், மக்கள் இந்த எண்ணை வெறுத்து ஒதுக்குகிறார்கள். இந்த எண் விதியின் எண்ணாக இருப்பதால், நாம் முற்பிறவிகளில் செய்த கர்ம வினைகளை அனுசரித்து நல்ல பலன்களையோ அல்லது தீயபலன்களையோ கொடுக்கிறது.

இவர்கள் எடுத்துக்கொள்ளும் எந்தச் செயலானாலும் அவற்றில் எதிர்ப்பும், முட்டுக்கட்டையும் உண்டு. ஆனால் எதிர்ப்பையும், தடைகளையும் பொருட்படுத்தாமல் காரியங்களில் ஈடுபடுவார்கள். வெற்றி பெறுவார்கள். இவர்கள் தங்களைப்போல் மற்ற பாதிக் கப்பட்ட மக்களிடம் மிகவும் அன்பு பாராட்டுவார்கள். மனதில் இரக்க குணம் இருக்கும். இவர்களில் பெரும்பாலோர் பெரிய சாதனைகளை, கடின உழைப்பின் மூலம் செய்து முடிப்பார்கள்.

இது விதியின் எண்ணாக இருப்பதால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் வெற்றியோ அல்லது தோல்வியோ தொடர்ந்து வந்தகொண்டே இருக்கும். ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படாமல், தங்களது கடமைகளை இவர்கள் தீவிர முனைப்புடன் செய்து கொண்டிருப்பார்கள். இவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்கு உண்மையான நன்மை செய்வார்கள்.

8 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு உறவினர்களின் ஆதரவு பெரும்பாலும் கிடைக்காது.

இதனால் வெளியூர், அடுத்த இன மக்கள், வெளிநாடு என அந்நியர்களிடமிருந்தே இவர்களுக்கு ஆதரவு கிடைக்கும். இவர்களுக்குத் தொடர்ந்து துன்பங்கள் வந்தால், பின்பு தொடர்ந்து யோகம் வரப் போகிறது என்று பொருள். இதற்குக் காரணம் 8 என்பது இரண்டு வட்டங்களால் உருவாக்கப்பட்டது. எனவே, முயற்சிகள் எல்லாம் பயன் அடைவதும், பயனற்றுப் போவதும் அவர்களது விதிப்படியே அமைகிறது. விதி என்றவுடன் பயப்பட வேண்டாம். இன்று நாம் செய்யும் நல்ல செயல்கள், நாளை நல்ல விதியாக அமைகின்றன. அலட்சியத்துடன் புரியும் தீய செயல்கள், நாளை நிச்சயம் கெட்ட விதியாக மாறி விடுகின்றன.

எனவே, நேர்மையான வழியில் உழைத்தால் வெற்றி மேல் வெற்றி இவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். ஆரம்ப காலம் முதலே மக்கள் 8 ஆம் எண்ணை விதியின் எண் என்று பயந்து வந்துள்ளார்கள். இது தனி மனிதன் வாழ்க்கைக்கும், சமுதாய வாழ்க்கைக்கும் பொருந்தும். இந்த எண்ணின் ஒரு பக்கம் கடுமையான உழைப்பு, கருணை, ஏற்றம், பெருத்த இராஜ யோகம் உண்டு. மறுபக்கம் புரட்சி, எழுச்சி, அராஜகம், ஒழுங்கின்மை போன்றவையும் உண்டு.

எல்லாம் விதிப்படியேதான் நடக்கிறது என்று இவர்கள் புலம்புவார்கள். பல நேரங்களில் வாழ்வில் விரக்தியும் ஏற்படும். இருப்பினும் தங்களது வாழ்நாளுக்குள், இவர்கள் பெருத்த யோகத்தை அனுபவித்தே செல்வார்கள்.

(தொடரும்)

# தவறான முடிவுகள் பிரச்சினைக்குத் தீர்வல்ல!

இராசத்தினம் துஷ்யந்தி

உயிரினங்களில் மனித உயிரினமே மிகவும் உன்னதமானதும், கௌரவமானதுமாக மதிக்கப்படுகிறது. இதனையே எம் சான்றோராகிய ஔவையாரும்,

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என மனிதப் பிறவியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். ஆனால் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய மகத்துவம் யாவும் வழக்கொழிந்து மனித உயிரைத் துச்சம் என மதிக்கின்ற செயல்களே அதிகம் இடம்பெற்று வருகின்றன. இவற்றுள் தற்கொலையும் ஒன்று.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வின் பிரகாரம் அதிகம் தற்கொலை இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. மக்கள் தொகைக்கேற்ப இலங்கையில் ஒரு லட்சம் பேரில் 28.8 வீதமானோர் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவது அதிர்ச்சியளிக்கிறது.

பொலிஸ் தரப்பின் புள்ளிவிவரப்படி இலங்கையில் தற்கொலை செய்து கொள்பவர்களில் 80 வீதமானவர்கள் ஆண்கள், முன்னைய ஆண்டுகளை விட தற்கொலை செய்துகொள்வோர் தொகை குறைவடைந்துள்ளதாகவும் அந்தப் புள்ளிவிவரம் கூறுகிறது.

2014ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டவர்களில் 2,484 பேர் ஆண்கள், 660 பேர் பெண்கள். 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை 1,856 ஆண்களும், 519 பெண்களும் தற்கொலை செய்துள்ளனர். எனவே முன்னைய காலங்களைவிடக் கடந்த வருடத்தில் தற்கொலை செய்துகொள்வோரின் அளவு குறைவடைந்துள்ளது என்கிறது பொலிஸ்.

கடந்த காலகட்டத்தில் தற்கொலைக்கான முதன்மையான காரணிகளாக கணவன்- மனைவி இடையிலான முரண்பாடுகள், பொருளாதாரப் பிரச்சினை, வறுமை, மனவிரக்தி, மனஉளைச்சல், போதைப்பொருள் பாவனை என்பனவும் பரீட்சைத் தோல்வி, தாங்க முடியாத அவமானம், காதல் தோல்வி, தீராத நோய் போன்ற காரணிகளும் பொலிஸாரால் காணப்பட்டுள்ளன.

உண்மையில் இத்தகைய காரணங்களுக்காக விலை மதிப்பிட முடியாத உயிரை மாய்த்துக்கொள்வதென்பது ஏற்றுக்கொள்ளவே முடியாதது. எமது உடலில் சிறு வியாதிகள் ஏற்பட்டால்கூட அவற்றுக்குரிய சிகிச்சையை வழங்கிக் குணப்படுத்தும் நாம் மனதில் ஏற்படும் குழப்பங்களுக்கும், மனக்கலக்கங்களுக்கும் விடிவு கண்டு நிம்மதியைப் பெறத் தவறி விடுகிறோம்.

குழந்தையாக இருக்கும்போது மனதில் எந்தவித சலனமும் ஏற்படுவதில்லை. பின்னர் வளர வளரத் தேவைகளும், பிரச்சினைகளும் உருவாகின்றன. நாம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் வெவ்வேறு அனுபவத்தை எமக்குத்தருகின்றன. கவலை, ஏமாற்றம், வலிகள், துரோகம், துன்பம் இவையாவும் எமக்குப் புதிய புதிய அனுபவப் பாடத்தையே கற்றுக்கொடுக்கின்றன. இவற்றைக் கண்டு நாம் ஒருபோதும் துவண்டு போகக்கூடாது. வாழ்வின் கசப்பான அனுபவங்கள் எமக்கு வாழ்க்கை என்றால்என்ன என்பதைக் கற்றுக்கொடுப்பவையே தவிர வாழ்வை வெறுப்பதற்கானவையல்ல. இதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

வாழ்க்கை என்பது இன்பம், துன்பம் இரண்டும் நிறைந்தது. இதுவே யதார்த்தம். இன்பம் ஏற்படும் போது மகிழ்ச்சியைப் பிறரிடம் பகிர்ந்து உற்சாகமாக இருப்பவர்கள். துன்பம் ஏற்பட்டவுடன் மாத்திரம் அதனைத் தமக்குள்ளேயே மறைத்துப் பிறரிடம் மனம் விட்டுப்பேசத் தவறி விடுகின்றனர். மகிழ்ச்சியான தருணங்களை இந்த நாள்வரை கொடுத்த வாழ்க்கை தான் துன்பங்களை [illegible] கிடைத்த [illegible] எமக்குக் கிடைத்த தோல்விகளால் துவண்டு மனமுடைந்து மன அழுத்தத்தின் உச்சத்துக்கே போய்விடுகிறோம். இதுவே தவறான முடிவுகளுக்கு இட்டுச்செல்கிறது. முக்கியமாக சாதாரணதர, உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகும் தருணங்களில் மாணவர்கள் தற்கொலை செய்துகொள்வது மிகமோசமானது. பெற்றோர்களுக்கும் சமுதாயத்துக்கும் அஞ்சி உயிரை மாய்த்துக்கொள்பவர்கள் சிறிதளவாவது தமது பெற்றோரை நினைத்துப் பார்க்கத் தவறி விடுகிறார்கள். பரீட்சைத் தோல்வி வாழ்வின் முடிவல்ல என்பதை நினைத்துப் பார்க்கத் தவறுகிறார்கள். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளைக் குழந்தைப் பருவத்திலிருந்து பராமரித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தம்மையே அர்ப்பணிக்கின்றனர். அப்படிப்பட்ட பெற்றோரின் அர்ப்பணிப்பை ஒவ்வொருவரும் தவறான முடிவை எடுப்பதற்கு முன்னர் எண்ணிப் பார்க்கவேண்டும். தோல்விகளைக் கண்டு எதிர்மறையான முடிவுகளைத் தீர்மானித்துக்கொள்வது முட்டாள் தனமானது.

தற்கொலை செய்து கொள்வது ஒருவரது உயிரையும், வாழ்வையும் முடித்துக் கொள்ளுமே தவிர, பிரச்சினைக்கான தீர்வாக ஒருபோதும் அமைந்துவிடாது. எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் சரி, எம் சிந்தனையை, பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு, தீர்வுகளை ஆராய்ந்து முடிவை எடுக்க வேண்டும். பிரச்சினைகளின் போது உணர்ச்சிவசப்பட்டு அவசரத்தில் எடுக்கும் முடிவுகள் தவறாக அமையலாம். எனவே சற்றுச்சிந்தித்துசெயற்பட வேண்டும். இன்றைய பெரும்பாலான தற்கொலைகள் உணர்ச்சிபூர்வமாக எடுத்த முடிவு தவறான முடிவுகளே. அறிவுபூர்வமாகச் சிந்தித்து நிதானமான முறையில் தீர்மானங்களை மேற்கொண்டால், தற்கொலைகளைத் தவிர்க்க முடியும். சிந்தித்துச் செயற்படுங்கள்! வாழ்க்கைப் பயணத்தைச் சிறப்பாகத் தொடருங்கள்!

கட்டுரையாளர்– மாணவி, மெய்யியற்றுறை, 3ஆம்வருடம், யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் நீர் வளத்தை முனைப்புடன் மேம்படுத்துவோம்

இணுவிலூர்.
சி.திருக்குமார்



வட மாகாணத்தின் நீர்வளத்தை மேம்படுத்தல் என்னும் ஆய்வரங்கு சம்பந்தமான அறிவித்தலைப் பத்திரிகை வாயிலாக அறிந்து எனது பங்கேற்பையும் மேற்படி விடயத்துக்கு அறியத் தருகின்றேன். வட மாகாணம் ஒருவறண்ட சமதரைப் பிரதேசம் ஆகும். (இலங்கையின் வறண்ட பிரதேசம் எதிர்காலத்தின் வளர்ச்சியில் தங்கியுள்ளது) இங்கு மாரிமழையும், கோடை வெயிலும் அமைந்திருப்பது ஒரு வரப் பிரசாதமாகும். வட மாகாணம் ஒரு மத்தியதரைக் கடற்சுவாத்திய கால நிலைக்குள் அடங்குவதால் பயிர்கள் மிகவும் செழித்து வளர்ந்து பயன்தருகின்றன. பழவர்க்கங்களை மிகவும் செழிப்பாக உற்பத்தி செய்ய முடியும். இங்கு பெரிய ஆறுகளோ, பெரிய நீர் நிலைகளோ, நீர்ப்பாசனத் திட்டங்களோ குறிபிடக் கூடிய வகையில் இல்லை. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றால் இரண்டு மாதங்கள் மழை பெய்கின்றது. இந்த இரண்டு மாதங்களில் பெய்கின்ற மழைநீரும் முறையான பராமரிப்பு இன்றி வீணாகிப் போகின்றது. வட மாகாணத்தில் அமைந்துள்ள வன்னிப் பிரதேசத்தில் அந்தக்கால அரசர்களால் அமைக்கப்பட்ட குளங்களில் நீர் தேக்கப்பட்டு இருபோக வேளாண்மை செய்யப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணக் குடா நாடும் அதை அண்டிய பகுதிகளும் இந்த இரண்டு மாத மழை நீரையே நம்பி இருக்கின்றன. இறைவன் திருவருளால் எங்களுக்குக் கிடைத்த பொக்கிசமாக நிலத்தடி நீர் இருப்பது பெரும் பாக்கியம் ஆகும். இந்தப் பிரதேசம் சுண்ணாம்புக்கல் பிரதேசமாக இருப்பதனால் மழை நீர் உடனடியாகவே தரையால் உறிஞ்சப்பட்டு சேமிக்கப்படுகின்றது. ஆனால் இந்த இரண்டு மாத மழை நீரைக் கூடச் சேமிக்க முடியாத பாவிகளாக நாம் உள்ளோம். எமது மூதாதையர்கள் மழை நீரின் பெறுமதி அறிந்து தமது தரிசு நிலங்கள் பனம் காணிகள், தென்னங்காணிகள், கலட்டிக் காணிகள் என்பவற்றில் வரம்பு கட்டியும், துரவுகள் வெட்டியும், அணைக்கட்டுகள் போட்டும் சுயமாகவே நீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீரை விருத்தி செய்தனர். அந்த நீரைப் பின்பு ஆழ அகலமான கிணறுகள் மூலம் ஒன்று சேர்த்து சிக்கனமான நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயம் செய்து வளமாக வாழ்ந்தார்கள். தற்போது பெய்கின்ற மழை நீர் வெள்ள வாய்க்கால்கள் மூலம் கரைபுரண்டோடிக் கடலை அடைகின்றது. இதனால் எமக்கு இரண்டு விதமான நட்டம் ஏற்படுகின்றது.

1.நல்ல வண்டல் மண் வெள்ளத்துடன் போகின்றது.
2.வறட்சியான காலத்தில் நீர் நிலைகள் வற்றிப் போகின்றன. மேலும் தற்போது இயந்திர மயமான நீர்ப்பாசனத்தால் நிலத்தடி நீர் சீக்கிரமாக வற்றிப் போகின்றது. இந்த நிலையை மாற்றி அமைத்து

**"எமது மூதாதையர்கள் மழை நீரின் பெறுமதி அறிந்து தமது தரிசு நிலங்கள் பனங் காணிகள், தென்னங் காணிகள், கலட்டிக் காணிகள் என்பவற்றில் வரம்பு கட்டியும், துரவுகள் வெட்டியும், அணைக் கட்டுகள் போட்டும் சுயமாகவே நீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீரைப் விருத்தி செய்தனர். அந்த நீரைப் பின்பு ஆழ அகலமான கிணறுகள் மூலம் ஒன்று சேர்த்து சிக்கனமான நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயம் செய்து வளமாக வாழ்ந்தார்கள்."**

பழையபடி தரிசு நிலங்கள் பனங்காணிகள், கற்காணிகளில் வரம்புகள், அணைகளைக் கட்டி மழை நீரைத் தேக்கி வைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளம் பாய்கின்ற வெள்ள வாய்க்கால்களை ஆங்காங்கு தடுப்பணைகள் போட்டும் கிராமங்கள் தோறும் நீர்த் தேக்கங்களை அமைத்தும் நீரைச் சேமித்து வைக்க முடியும். வழுக்கையாற்றிலும் பொன்னாலைப் பகுதியிலும் பெரிய நீர்த்தேக்கம் அமைத்து நீரைச் சேமித்தால் சிறிய யாழ்.குடா நாட்டின் நீர்த்தேவைக்கு வேறெங்கும் கையேந்த வேண்டிய



நிலை ஏற்படாது. பெரும் செலவில் நீர்தேட வேண்டிய அவசியமும் இல்லை. நிலத்தடி நீரைப் பாதுகாத்து விருத்தி செய்து மீட்டெடுத்துச் சிக்கனமாக முகாமைத்துவம் செய்தால் எவருடனும் வீண் சண்டைகள் செய்ய வேண்டியதும் இல்லை. யாழ்.குடா நாட்டில் இயங்குகின்ற நீர்வளச் சபையை எதிர்காலத்தில் நல்லபடியாகச் செயலாற்ற வைக்கவேண்டும். யாழ். நகரப் பகுதியில் எத்தனையோ குளங்கள் மூதாதையர்களால் அமைக்கப்பட்டுள்ளன. அவை தற்போது பராமரிப்பு இன்றியும், ஆக்கிரமிக்கப்பட்டும் தேடுவாரற்றுக் காணப்படுகின்றன. நாவற்குழி நன்நீர்த்தேக்கம் கைவிடப்பட்டு சுமார் 25,000ஏக்கர் நிலம் தரிசாக உள்ளது. இந்த நிலத்தை வளப்படுத்தினால் பயிர்ச்செய்கை நிலமாகவும் வளம் கொழிக்கும் பிரதேசமாகவும் மாறும். உண்மையில் வட மாகாண சபை இந்த நீர் முகாமைத் துவத்துக்கு வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுச் செயற்பட்டால் வட மாகாணம் ஆசியாவிலேயே பொன் கொளிக்கும் பூமியாக மிளிரும். எமது இனத்தின் பொருளாதாரம் உன்னத நிலையை அடையும். அத்துடன் எமது பிரதேசத்தில் மத்தியதரைக் கடல் சுவாத்தியமும் மாரி மழையும், கோடை வெய்யிலும் உள்ள சுவாத்தியம் இருப்பதால் பழப்பயிர்ச் செய்கையை மிகவும் உன்னத நிலைக்குக் கொண்டு வரலாம். அத்துடன் இந்த நீர் நிலைகள், வாய்க்கால்கள் என்பவற்றின் ஓரங்களில் பனை, தென்னை, மருது, தேக்கு ,பழ மரங்கள் போன்றவற்றை நட்டால் நீர் நிலைகளும் வற்றாது.

அவற்றின் பிரயோசனங்களும் பன்மடங்கு விருத்தியாகும். தற்போது ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையை இங்கேயே தீர்த்து வைக்க வேண்டும். வெளியில் இருந்து வரும் குடிதண்ணீர் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். ஒரு போத்தல் பால் 70 ரூபாவாக விற்கப்படும் போது ஒரு போத்தல் தண்ணீரையும் 70 ரூபாவாக விற்கிறார்கள். இந்த நிலையில் இருந்து பொது மக்கள் விடுபட வேண்டும். மழை நீரைத் தேக்கும் விடயத்தில் மாவட்ட அரசும் மானிய முறையை அறிவித்து மழை நீரை அந்தந்த இடங்களில் தேக்க ஆவன செய்ய வேண்டும். தேக்குகின்ற மழைநீர் விரைவாகப் பூமியால் உறிஞ்சப்பட்டு நிலத்தடி நீர் விருத்தியாகும். இதனால் பொருளாதாரம் விருத்தியடையும். ஆகவே எம்மினத்தின் பெரும்பாலான பிரச்சினைகள் தானாகவே தீர்ந்து விடும் என்பது எனது அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வரலாற்றில் இன்றைய தினம்

1360 - இரண்டாம் இஸ்மாயிலைக் கொலை செய்த பின்னர் அவரின் மைத்துனர் ஆறாம் முகஹமட் கிரனடாவின் 10 ஆவது அரசரானார்.
1461 - நாலாம் எட்வேட் இங்கிலாந்தின் அரசரானார்.
1519 - புனித ரோமின் பேரரசராக, ஐந்தாம் சார்ள்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
1651 - போலந்து மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பெறஸ்ரெக்கோ போர் ஆரம்பமானது.
1846 - சக்ஸஸ்போனுக்கான காப்புரிமத்தை அடொல்ப் சக்ஸ் பெற்றுக் கொண்டார்.
1881 - ஒஸ்ரியா மற்றும் சேர்பியா இடையே இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்தானது.
1894 - தொழிலாளர் தினம் அமெரிக்காவில் உத்தியோக பூர்வ விடுமுறை தினமானது.
1895 - எல்சவடோர், ஹொண்டூராஸ் மற்றும் நிக்கறாகுவா ஆகிய நாடுகள் மத்திய அமெரிக்காவில் பெரிய குடியரசை உருவாக்கின.
1896 - பென்சில்வேனியா ருவின் ஷாப்ட் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 58 சுரங்கத் தொழிலாளர்கள், உயிரிழந்தனர்.
1950 - சியோல் வடகொரியப் படைகளால் கைப்பற்றப்பட்டது.
1969 - நியூயோர்க் நகரில் ஸ்டோன்வோல் வன்முறை தொடங்கியது.
1981 - தெஹ்ரானில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் இஸ்லாமிக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 73 அதிகாரிகள் உயிரிழந்தனர்.
1987 - ஈரான் சர்டாஸ்ட் நகர் மீது பொதுமக்களை இலக்கு வைத்து ஈராக் போர் விமானங்களால் இரசாயனக் குண்டுகள் வீசப்பட்டன. இத்தகைய சம்பவம் போர் வரலாற்றிலேயே இதுவே முதல் தடவையாகும்.
1990 - கிளிநொச்சி வைத்தியசாலை மூடப்பட்டதால் கிளிநொச்சிப் பகுதியில் நோயாளர்கள் அவதி.
1992 - எஸ்டோனியா அரசியலமைப்பு ஒப்பமிடப்பட்டுச் சட்டமாகியது.
- இலங்கையின் வடபகுதியில் ஒபரேஷன் பலவேகய ஆரம்பமானது.
2004 - கிருஷாந்தி கொலை வழக்கின் குற்றவாளியான இராணுவக் கோப்ரல் ராஜபக்ச யாழ். நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார்.
- இலங்கையில் சித்திர வதைகளை ஒழிக்க வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக அரசு நீக்க வேண்டுமென லண்டன் தமிழர் உரிமை மையம் தெரிவிப்பு.
- ஈராக் நாட்டுக்கு மேலும் படைகளை அனுப்ப கனடாவில் எதிர்ப்பு.
- ஈராக்கிடம் இடைக்கால அரசைத் திடீரெனக் கையளித்தது அமெரிக்கா.

## அணு விஞ்ஞானி அப்துல் கலாம்



*(கடந்த செவ்வாய் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

கலாம் எத்தகைய உயர்நிலையை எட்டிப்பிடித்த போதிலும் தமது மானசீக குருக்களை மறந்து விடவில்லை. அவர்களுக்கு அவ்வப்போது புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். நான் எந்த நிலையிலும் கடந்து வந்த பாதையை மறப்பவனவல்லன்; என்று பல சான்றோர்கள் அறிஞர்கள் மத்தியில் உரையாற்றும்போது பலமுறை எடுத்துக் கூறி வந்தார். இந்திய தேசப்பிதா மகாத்மா காந்தி மற்றும் விக்ரம் சாராபாய். இவர்கள் இருவரும் எனது வாழ்க்கையில் மறக்க முடியாதவர்கள் என்று கலாம் கூறுவார்.

மேலும் பறக்கும் தத்துவத்தை எடுத்துரைக்க பறவைகளை உதாரணம் காட்டிய ஆசிரியரையும், நீரில் ஓடும் படகுகளின் சக்தியை உணர பாயும் மீன்களைச் சிறுவயதில் காட்டி விளக்கம் அளித்த ஆசிரியரும் என்னால் மறக்க முடியாதவர்கள் எனப் பசுமையான இளமைக்கால நினைவுகளில் திளைப்பார்.

அதுபோல் விண்வெளித்துறையில் அரும்பெரும் சாதனைகளுக்கு தலைமை தாங்கி நடத்தி சென்ற டாக்டர்- விக்ரம் சாராபாய் , பேராசிரியர் சதீஷ்தவான் அணுசக்தித் துறையின் தந்தை எனப்படும் டாக்டர் பிரம்மபிரகாஷ் ஆகியோருடன் பணியாற்றியதை மிகவும் பெருமிதமாகக் குறிப்பிடுகின்றார். அவரது வாழ்க்கையில் அந்த மூன்று விஞ்ஞானிகளுடன் சேர்ந்து பணியாற்றியதை பெரும் அதிர்ஷ்டமாக எண்ணிப் பெருமிதப்படுகிறார் எனக் கலாம் குறிப்பிட்டார்.

கலாம் ஒரு செயலில் ஈடுபடும்போது தம்மைப் புகழ்வதை கேட்டு மகிழவும் மாட்டார். இகழ்வதைக் கேட்டுத் துவளவும் மாட்டார். மாறாக தாம் எடுத்துக் கொண்ட முயற்சியிலேயே குறிக்கோளுடன் இருப்பார். இவர் கற்ற கல்வியை தாம் மட்டும் பயன்படுத்தாமல் இந்த நாடே பயன்படுத்தியதைக் கண்டு மனம் மகிழ்வார். அல்லாமல் தம்மைச் சுற்றியுள்ளவர்களும் உயர்ந்த நிலையை எட்டிப்பிடிக்கப் பல்வேறு உதவிகளைச் செய்து மகிழ்ச்சியுறுவார். இத்தகைய செயல்களுக்கு, நாற்பத்தைந்து ஆண்டுகால செயற்கைகோள் ஆராய்ச்சிகளும் ஏவுகணைச் சோதனைகளும் அவருக்கு உலகளவில் பெரும் புகழையும் பெயரையும் ஈட்டித் தந்தன.

அவரது விஞ்ஞான சாதனைகள் யாவும் இந்திய வரலாற்றிலே அழியாத காவியங்களாய் நீடித்து நிலைத்து வாழ்பவையாகும்.

*(அடுத்த செவ்வாய் தொடரும்)*

## வர்ணம் தீட்டுவோம்வாங்க....





## எறும்புகள் வாங்கிய வரம்

ஒரு காலத்தில் எறும்புகள் எல்லாம் ஒன்றாகக் கூடி யோசித்தன. "எவ்வளவு காலத்துக்குத்தான் நாம் பொறுமையாக இருப்பது? தெருக்களிலும், வீடுகளிலும் எம்மால் நடமாட முடியவில்லை. தரையைப்பார்த்து யார் நடக்கிறார்கள்? எல்லோரும் மிதித்துக் கொண்டே நடந்து போகிறார்கள். நாம் ஒரு மிதியில் நசுங்கிச் சாக வேண்டியிருக்கிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாம் எல்லாம் அழிந்து போய் விடுவோம். எவ்வளவு காலத்துக்கு இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்வது?"

இப்படியாக எறும்புகள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து, கடவுளை நோக்கித் தவம் இருந்தன. எறும்புகளுக்கு இப்படி ஒரு துன்பம் வந்ததே என்று கடவுள் மனம் இரங்கி அவற்றின் முன் தோன்றி, "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார்.

கடவுளே தங்கள் முன் வந்ததால் எறும்புகளுக்கு மகிழ்ச்சி தாங்காமல், கேட்க வேண்டும் என்று நினைத்ததை மறந்து, "நாங்கள் கடித்துச் சாக வேண்டும்" என்று ஒரே குரலில் கத்தின.



கடவுள் பிரமித்து "இது என்ன வம்பா இருக்கிறதே. எறும்புகள் கடித்து, உலகத்தில் இருக்கிற ஜீவன்கள் சாகுமானால் அவை தவிர மற்ற உயிர் இனங்களே உலகத்தில் இல்லாமல் போய் விடுமே" என்று மனதில் நினைத்துக் கொண்டு ''நன்றாக யோசித்துக் கேளுங்கள். நீங்கள் கேட்பது சரிதானா?" என்று கேட்டார் கடவுள்.

அவை பிடிவாதமாக "நாங்கள் கேட்பது சரிதான். நாங்கள் கடித்ததும் செத்துப்போய் விடவேண்டும். இந்த வரத்தை எங்களுக்குத் தந்தே ஆக வேண்டும்" என்று கேட்டன.

கடவுள் கோபத்தோடு "அப்படியே நடக்கும்" என்று கூறிவிட்டு மறைந்து விட்டார்.

அன்று முதல் எறும்புகள் ஏனைய பிராணிகளைக் கடித்ததும் தாம் செத்துப்போகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தாமன்



# சிறப்புற நடைபெற்ற தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர் மாநாடு

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு கடந்த 10 மற்றும் 11ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. முதலாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள், தென்மராட்சிக் கல்வி வலய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் அணிவகுப்புடன் மங்கல வாத்தியங்கள் முழங்க காலை 8 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்றிலில் இருந்து அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்து பூமணி இராசரத்தினம் கலையரங்கில் தொடக்க நிகழ்வு ஆரம்பமானது. தலைமையுரை, விருந்தினர் உரைகள் இடம்பெற்றதையடுத்து ஆசிரிய மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பேருரைகள், ஆசிரியர்களது ஆய்வுக் கட்டுரைகள், பாடரீதியான கற்றல் கற்பித்தல் அனுபவங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் அதிபர்கள் பாட ரீதியான ஆசிரியர்கள் ஆகியோரது புகைப்படங்கள் என்பவற்றைத் தாங்கிய 'தென்கதிர்' என்னும் மலர் வெளி யீடும் இடம்பெற்றது.

மேலும் ஆசிரியர்களது பாடரீதியான கற்றல் கற்பித்தல் கண்காட்சியும் இடம்பெற்றது. இதனை ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் பார்வையிட்டுப் பயன் பெற்றனர். அத்துடன் பூமணி இராசரத்தினம் கலையரங்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட வளவாளரான ப.ஆறுமுகம் இலங்கையின் பொதுக் கல்விக்கான சட்டங்களும் பொதுக் கல்வியுடன் தொடர்புடைய சட்டங்களும் எனும் தலைப்பில் பேருரை நிகழ்த்தினார். இந்தப் பேருரையின் இறுதியில் சம்பவக் கற்கை அடிப்படையில் பயனுள்ள கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இதன் பின்னர் பண்டித மணி அரங்கு மற்றும் முருகையன் அரங்கு ஆகியவற்றில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆறு ஆய்வுகளின் முன்வைப்புக்கள் மற்றும் அவை தொடர்பான கலந்துரையாடல்கள் என்பன சமநேரத்தில் நடைபெற்றமை சிறப்புடையதாக இருந்தது. அதனைத் தொடர்ந்து பூமணி இராசரத்தினம் கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசாவின் விழுமியத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகள் எனும் தலைப்பிலான பேருரை இடம்பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் கலந்து கொண்டனர்.

காலை நேர நிகழ்வாக பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனின் தமிழ் காட்டும் ஆசிரியம் எனும் தலைப்பிலான பேருரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களின் பாடரீதியான கற்றல் கற்பித்தல் அனுபவங்களின் முன்வைப்பானது பண்டித மணி அரங்கு மற்றும் முருகையன் அரங்கு ஆகியவற்றில் சமநேரத்தில் இடம்பெற்றன.

மாலை நேர நிகழ்வுகளாக விருந்தினர்களின் உரைகளும் அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இறுதியாக கண்காட்சி, ஆய்வுகள், பாட ரீதியான முன்வைப்புக்கள் கலை நிகழ்வுகள் என்பவற்றில் பங்குபற்றிய ஆசிரியர்கள் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் முழுமையான பங்குபற்றுதலுடன் ஆசிரியத்துக்கு அணிகலன் எனும் தொனிப் பொருளிலான ஆசிரியர் மாநாடு எழுச்சியுடன் உயர்ச்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இளைஞர்களே..! சலன புத்தியை விடுத்து ஊக்கத்துடன் செயற்படுங்கள்

முயற்சி செய்யுங்கள்..! முயற்சி செய்யுங்கள்..! என்பதே தமிழ் மக்களிடமும் அவர்களை உரிமை வேண்டிய கொள்கையின் வழியே வழிநடத்தி வந்த வீரமான பு(ம)னிதர்களிடமும் கடந்த முப்பது ஆண்டுகளாக மாறாத இலட்சியமாக இருந்து வந்தது. இப்போதும் இதனையே நான் சொல்கிறேன்.ஏற்றுக் கொள்ளுங்கள். ஏற்றுக் கொள்ளவேண்டும்.

கட்டுக்கோப்புகளின் செழுமையில் திளைத்திருந்த,காத்திரம் செய்து சரித்திரமாய் மிளிர்ந்திருந்த தமிழ்ச் சமூகம் தற்போது கதிகலங்கத் தொடங்கியுள்ளது. போரின் அழிவுகளில் இருந்து மீள்வதற்குள் திட்டமிட்ட போதையின் அழிவிற்குள் அமிழ்ந்து திக்குமுக்காடத் தொடங்கியிருக்கிறது. கட்டுப்பாட்டுடன் இருந்த சமூக விழுமியங்களிடையே எல்லைகளைக் கட்டுடைத்த துரித பாய்ச்சலாக இளைய தலைமுறையினரை நோக்கியதான விசக் களையிடலாக, அதற்கான மேய்ச்சலாக, சத்தமற்ற திட்டமிட்ட இன அழிப்பின் திணிப்பாக போதை பயன்படுத்தப்படுகின்றது.

மதுப்பாவனை என்பது சட்டரீதியான அனுமதியுடனும் போதை வஸ்துக்கள் சட்டரீதியற்ற எல்லை கடந்த செறிவூட்டமாகவும் அழிவு நிலைகளை நிலைபெறச் செய்கின்றன. தமிழர் பிராந்தியங்கள் அரசின் பொருளாதார மீட்டல் என்ற மறைமுகப் போர்வைகளினுள் இனச் சுத்திகரிப்புக்கான கருச்சிதைவுகளாக சேடமிழுக்கத் தொடங்கி விட்டன.

நல்லாட்சி அரசு என்று சொல்லுபவர்களும் இது தொடர்பில் தங்களது சொல்லாட்சியில் நல்லிணக்கத்தை வெளிப்படுத்த முற்பட்டுள்ளனர். மதுவற்ற ஒரு சமூகமாக நாம் மாற்றம் பெற்றால் பல மாற்றங்களை எமது நாட்டில் ஏற்படுத்த முடியும் என்பதாக நாட்டிய நாடகம் ஆடியிருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன மேடை போட்டு. அதிர்ச்சி அடையவில்லை அவர். அழிவுறும் எம் சமூகத்தைப் பார்த்துக் கெக்கட்டமிட்டுச் சிரித்திருக்கிறார்.

நற் சமூகமாக இருந்தவர்கள் நாங்கள், இப்போது நற் சமுதாயமாக அன்றி ஒரு வார்த்தையில் சொல்வதானால் மிகவும் பயங்கரமான, காட்டுமிராண்டித்தனமான தோற்றங் கொள்ளலை நிலைபேறாக்கத் தொடங்கிவிட்டோம் என்பதை அழிவின் பிரகிருதிகளே சொல்லக் கேட்க வேண்டிய நிலைக்கு கீழிறக்கப்பட்டிருக்கிறோம். இளைஞர்களாக, ஒற்றுமையின் பலவான்களாக,இலட்சியத்தின் போராளிகளாக இனியாவது இந்த நிலையிலிருந்து மீள்வோமா...? அதற்காக ஒருமுகப்பட்டுச் சிந்திப்போமா..? சிந்திக்க வேண்டும்...! சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு எழுதிய கடிதத்தை இவ்விடம் உணர்ந்து படியுங்கள். விழித்தெழுங்கள்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகிய மூன்றும் இருந்தால் போதும். வேறு எதுவும் தேவையில்லை. அன்புதான் வாழ்க்கையின் ஒரே நியதி. எல்லா விதமான சுயநலமும் சாவுதான். மற்றவர்களுக்கு நன்மை செய்வது தான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்பதுதான் சாவு. என் இளைஞர்களே! அன்புடையவர்களைத் தவிர மற்றவர்கள் வாழ்பவர்கள் அல்லர். என் குழந்தைகளே..! மற்றவர்களுக்காக உங்கள் மனம் உருகவேண்டும். ஏழை எளியவர்கள், பாமரர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக உங்கள் மனம் உருகவேண்டும். மற்றவர்களின் நன்மையின் பொருட்டு உங்கள் இதயமே நின்று, மூளை குழம்பி, உங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும் என்ற நிலை வரும் வரையில் மற்றவர்களுக்காக நீங்கள் மனம் உருகுங்கள். பிறகு இறைவனின் திருவடிகளில் உங்கள் ஆன்மாவைச் சமர்ப்பியுங்கள். அப்போது உங்களுக்கு ஆற்றல் வரும், உதவி வரும், குறையாத ஊக்கம் வரும். உங்களைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தபோதும், முயற்சி செய்யுங்கள்..! பயப்படாதீர்கள்! பணத்தால் பயனில்லை. ஒழுக்கம் ஒன்றுதான் துளைக்க முடியாத சுவர்களையெல்லாம் துளைத்து எம்மை முன்னேறச் செய்கிறது. சுதந்திரம் இல்லாமல் எந்த வளர்ச்சியையும் அடைய முடியாது.

வளர்ச்சிக்கு முதல் நிபந்தனை சுதந்திரம். சமுதாயத்தில் கொடுமைகளை அகற்றவேண்டும். சமுதாயத்தில் கொடுமைகள் வேண்டாம். மற்றவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கத் தயாராக இல்லாதவனுக்கு. சுதந்திரம் பெறுவதற்குத் தகுதி கிடையாது.

நற் சமுதாயத்தை உங்களால் உருவாக்க முடியுமா...? முடியும்...! முடிய வேண்டும் என்பதுதான் என் நம்பிக்கை. நல் வழியில் சமுதாயத்தை புதுப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். உங்களிடம் ஊக்கம் என் நெருப்பு பற்றி எரிய வேண்டும். பிறகு அதை எல்லா இடங்களுக்கு பரப்புங்கள். வேலை செய்யுங்கள். சுயநலம் இல்லாதவனாக இரு கள். எல்லையற்ற பொறுமையுடன் இருங்கள். அவ்விதம் செய்தா உங்களுக்கு வெற்றி நிச்சயம். மற்றவர்களின் நன்மைக்காக வே செய்வதுதான் வாழ்க்கையின் இலட்சியம். போலித்தனம் என்ப இருக்கக் கூடாது, பொய் கூடாது, போக்கிரித்தனம் கூடாது. இதை தான் நான் விரும்புகிறேன். ஒழுக்கக்கேடு என்ற மூச்சுக் காற்றுக் கூ வீசக் கூடாது; செயல்முறையில் குற்றத்தின் நிழல்கூடப் படியக் கூடா சலனபுத்தி வேண்டாம், இரகசிய வித்தை என்ற அயோக்கியத்த வேண்டாம், இருட்டில் செய்யும் எதுவும் வேண்டாம். என் வீ குழந்தைகளே..! முன்னேறுங்கள். பணம் இருந்தாலும் சரி, இல் மல் போனாலும் சரி உங்களுடன் மனிதர்கள் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி முன்னேறிச் செல்லுங்கள். கவனமாக இருங்கள். உண்மைக்குப் புறம்பான எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையை விடாமல் பிடித்துக் கொள்ளுங்கள்...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# விஜய் படத்தில்



விஜய் நடிப்பில் அண்மையில் வெளியாகி வெற்றிபெற்ற 'தெறி' திரைப்படம் ஹிந்தியில் ரீ-மேக் ஆகவுள்ளது. ஷாருக்கானை வைத்து 'சென்னை எக்ஸ்பிரஸ்' மற்றும் 'தில்வாலே' ஆகிய படங்களை இயக்கிய ரோஹித் ரெட்டி. 'தெறி'யை ஹிந்தியில் இயக்கவுள்ளார். இதில் ஷாருக்கானே கதாநாயகனாக நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார். விஜய்யின் 'துப்பாக்கி' படத்தின் ஹிந்தி ரீ-மேக்கில் நடித்த அக்ஷய் குமார், விஜய்யின் 'தெறி'யையும் ஹிந்தியில் ரீ-மேக் செய்து நடிக்க விருப்பம் தெரிவித்திருந்தாராம். ஆனால் இப்போது 'தெறி'யின் ஹிந்தி ரீ-மேக் உரிமை இயக்குநர் ரோஹித் ரெட்டி வசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.



ஷாருக்கான்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சுய கௌரவம் பேணும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமார். உடல்நலனில் அக்கறை காட்டி வருவீர்கள்.

**இடபம்:** அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்ததை விட இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மிதுனம்:** எண்ணத்தைச் செயல் வடிவமாக்குவீர்கள். தொழில் வளர்ச்சிக்கான, புதிய வாய்ப்பு கிடைக்கும். தாராள இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவர்.

**கடகம்:** பேச்சு, செயலில் நிதானம் வேண்டும். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். உடல் நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேறத் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை உருவாகலாம். இலாபம் சுமார். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாவர். அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.

**கன்னி:** பணியில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். இலாபம் உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்கள் வீட்டை அழகுபடுத்த கலையம்சப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** முகத்தில் சந்தோசப் பொலிவு ஏற்படும். தொழிலில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உருவாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வந்து சேரும். புத்திரரின் நற்செயலால் பெருமை தேடி வரும்.

**விருச்சிகம்:** மனதில் சோர்வு ஏற்படலாம். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு:** பொது இடங்களில் பிறருடன் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்புணர்வு அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். திடீர் வெளியூர்ப் பயணம் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்.

**மகரம்:** ஆன்மிக சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கும்பம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால், குடும்பச் செலவு அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல் நலம் பாதுகாக்க உதவும்.

**மீனம்:** எதிரி தொல்லை இடம் தெரியாமல் மறையும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

மனைவி நேசித்தால் 50% இதய நோயைத் தவிர்க்கலாம்!



அப்படியானால் இரண்டு பொண்டாட்டி கட்டிக்கலாமா பாஸ், இதய நோயே வராது!



love marriage என்பது சொந்தக் காசில் சூனியம் வைப்பது

Arranged Marriage என்பது பெரியவர்களாய்ப் பார்த்து சூனியம் வைப்பது

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 4 | | | 3 | | | |
| 8 | | 7 | | | | 3 | | 5 |
| 9 | | | 1 | | | | | 4 |
| | | 6 | 4 | 3 | | 9 | | |
| | | | | | | | | |
| | | 9 | | 2 | 7 | 8 | | |
| 5 | | | | | 2 | | | 6 |
| 7 | | 8 | | | | 5 | | 2 |
| | | | 9 | | | 7 | 3 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 3 | 7 | 9 | 1 | 5 | 6 | 8 |
| 8 | 7 | 9 | 4 | 6 | 5 | 2 | 3 | 1 |
| 5 | 1 | 6 | 3 | 2 | 8 | 4 | 7 | 9 |
| 6 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 | 9 | 5 |
| 7 | 3 | 2 | 5 | 4 | 9 | 1 | 8 | 6 |
| 1 | 9 | 5 | 8 | 3 | 6 | 7 | 4 | 2 |
| 3 | 2 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 4 | 5 | 1 | 6 | 8 | 7 | 9 | 2 | 3 |
| 9 | 6 | 7 | 2 | 1 | 3 | 8 | 5 | 4 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும்3நிரைகளையும்கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள்இரட்டைப்படாமல்வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனைஅறிமுகப்படுத்திவெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல்இது உலக அளவில் பிரபல்யமானது.

Jino Keerththana @Jino_Offl

உன்னை அடக்க நினைப்பவரிடம் சுதந்திரமாக இரு! உன்னை சுதந்திரமாக இருக்க விடுபவரிடம் அடங்கி இரு.

401

வரம் வேண்டித் தவம் இருந்த பக்தன் முன் கடவுள் தோன்றினார்.
"பக்தா.! என்ன வரம் வேண்டும்? கேள்."
"கடவுளே! எனக்கு இரண்டு வரம் வேண்டும்."
"சரி, கேள்."
"நான் திருமணம் செய்து கொள்ள அழகான பெண் வேண்டும். வசதியான பெண்ணாக இருக்க வேண்டும். நன்றாக சமைக்கத் தெரிந்த பெண்ணாக இருக்க வேண்டும்."

"சரி, அப்படியே நடக்கட்டும். இரண்டாவது வரம் என்ன?"
"இந்த மூன்று பெண்களும் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இருக்க வேண்டும்.!"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org






## மூடி வைத்த மக்குகள்

மூடி வைத்த மக்குகள் விற்பனை செய்யப் படுகின்றன. இளைஞர்களுக்கான வடிவமைப்புடன் இவை உரு வாக்கப்பட்டுள்ளன. இதன் விலை 600 ரூபா தொடக்கம் 750 ரூபா ஆகும்.

## முட்டை வடை



**தேவையானவை**

முட்டை–5
கடலை மா– ஒரு கரண்டி
இஞ்சி - பேஸ்ட்
உள்ளி - பேஸ்ட்
மிளகாய்த்தூள்
- ஒரு கரண்டி

**செய்முறை**

முட்டையைவேகவைத்துஉரித்து வெட்டி வைத்துக் கொள்ளவும். ஒரு கரண்டி கடலை மா எடுத்து அதனுடன் ஒரு கரண்டி இஞ்சி, உள்ளி பேஸ்ட், ஒரு கரண்டி மிளகாய்த்தூள், உப்பு சேர்த்து பிசைந்து கொள்ளவும். இந்தக் கலவையை முட்டையில் தடவி எண்ணெயில் பொரித்து எடுக்கவேண்டும்.





## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 450 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 400 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | 500 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 160 | 80 | 120 | – | 60 |
| கத்தரி | 100 | 80 | 80 | 100 | 60 | 200 | – | 40 |
| கரட் | 200 | 250 | 160–300 | 240 | 240–280 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | – | 50 |
| பயிற்றை | 140 | 120 | 100 | 120 | 140 | 120 | – | 80 |
| பாகல் | 250 | 200 | 250 | 240 | 160 | 200 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 120 | 160 | 140 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 180 | 60 | 200 | – | 160 |
| பூசணி | 80 | 80 | 80 | 120 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 200 | 160 | 250 | 240 | 200 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 | 100 | 60 | 80 | – | 40 |
| கீரை | 15 | 20 | 30 | 20 | 15–20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 45 | 15–20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 650 | 500 | 600 | 700–800 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 80 | 60 | 120 | 100–120 | 120 | – | 100 |
| கோவா | 140 | 140 | 150 | 240 | 140–160 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 120 | 120 | 80–100 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 240 | 200 | 200 | 200–220 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 150 | 240 | 160 | 250 | – | 150 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 20–30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 | 240 | 200 | 150 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 240 | 240 | 350 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 550 | 640 | 800 | 800 | 300 | – | 350 |

## நாளை

ஆனி-15
புதன்கிழமை - 29.06.2016
திதி: தசமி
பி.இ.04.07 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பி.இ.02.30 வரை
ராகுகாலம்: 11.56-01.26 வரை
சுபநேரம்: 04.26-05.56 வரை

## நம் சமையல் அறையில்...

### சமைக்கும் முறை

சமையல் மேடை அருகே நின்று நாம் சமைக்கும்போது, சமை யல் மேடையின் உயரம் எமது உயரத்துக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். மேடை உயரமாக இருந்தால் கைகளை ஊன்றிக் கொண்டோ அல்லது சமையல் பாத்திரத்தை எட்டிப்பார்த்தோ சமைப்பதுபோல இருக்கக் கூடாது. இப்படிச் சமைத்தால், அடுப்பில் இருக்கும் பாத்திரங் களில் உள்ள உணவுப் பொருள் களைக் கிளறும்போது, கை மூட்டுப் பகுதியைச் சிரமப்பட்டுத் தூக்க வேண்டி இருக்கும். அத னால், அந்தப் பகுதியில் உள்ள தசைகளில் பிடிப்பு ஏற்படும். பிறகு, இது வலியாக மாறும். இதைத் தவிர்க்கக் கைமூட்டுப் பகுதி உயர்த்தப்படாமல், சாதா ரண நிலையில் நின்று சமைக் கும் வகையில் சமையல் மேடை யின் உயரம் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். உயரம் குறைவாக இருப்பவர் கள் சரியான உயரத்தில் மேடை இருக்கும் வகையில் மரப் பலகைகளைப் பயன்படுத்தி அதன் மீது நின்றும் சமைக் கலாம்.

### பாத்திரம் கழுவும் முறை

பாத்திரம் கழுவப் பயன்படும் “சிங்க்” உயரம் உங்களது உய ரத்துக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். அதாவது, குனிந்தோ அல்லது எட்டிப் பார்த்தோ பாத்திரங்களைக் கழுவ வேண்டாத நிலையில் இருக்கவேண்டும். இதனால், முதுகு, கை மற்றும் கழுத்து வலி வராமல் தடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பத்தை வெல்லும் மொபிட்டல்

2016 ஜூன் 18ஆம் திகதி, கொழும்பு தேசிய கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநரான SLT மொபிட்டல் நிறுவனம் மேம்படுத்தப்பட்ட 4.5G LTE Advanced pro தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகப் பரிசீலித்துப் பார்த்ததாக அறிவித்தது. அதனடிப்படையில் நொடிக்கு 1 கிகா பிட் ஐ விட அதிகமான வேகத்தை எட்டியுள்ளமை விசேட அம்சமாகும்.

2007ஆம் ஆண்டு 3.5G HSPA தொழில்நுட்பத்தை தெற்காசியாவில் முதன்முறையாக பரிசோதனை செய்த மொபிட்டல் நிறுவனம், 2009ஆம் ஆண்டு HSPA+, MIMO ஆகிய தொலைபேசித் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 2011ஆம் ஆண்டு ஆசியாவில் முதன் முறையாக 4G LTE தொழில்நுட்பத்தைப் பரிசோதனை செய்வதற்கு முன்னோடியான நடவடிக்கைகளை மொபிட்டல் நிறுவனம் மேற்கொண்டிருந்தது. தகவல் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்வதில் எப்பொழுதும் முன்னின்று செயற்படும் SLT மொபிட்டல் நிறுவனம் தற்பொழுது மேம்படுத்தப்பட்ட 4.5G LTE Advanced pro தொழில்நுட்பத்தை ஆசியாவில் முதன் முறையாகப் பரிசோதனை செய்துள்ளது.

இறுதி பயன்பாட்டாளருடன் தரவின் வேகம் தங்கிவிடாது அது தொடர்ச்சியாகப் பயணம் செய்யக் கூடிய தன்மையே 4.5G LTE Advanced Pro தொழில்நுட்பத்தின் அதிவேகமான செயற்பாட்டுக்குக் காரணமாகும். மேலும் மேம்படுத்தப்பட்ட LTE தொழில்நுட்பத்தில் செங்குத்தான அதிர வெண் பிரிவுப் பெருக்கத்தின் ஊடாகக் கொண்டு செல்லும் பண்பேற்றம் மூலம் MIMO தொழில்நுட்பத்திறனும் இணைந்து கையடக்கத் தொலைபேசி அலைவரிசை மற்றும் ரேடியோ அலைவரிசையின் உதவியுடன் மிகச் சிறந்த தெளிவான மற்றும் வேகமான செயற்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியும். 4.5G LTE Advanced Pro தொழில்நுட்பமானது 4G மற்றும் 5G தொழில்நுட்பத்தை இணைப்பதாக அமைவதுடன் 5G தொழில்நுட்பமானது 2020 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வணிகம்

இங்கு பரிசீலிக்கப்பட்ட 4.5G LTE Advanced Pro ஆனது தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 4x4 MIMO Multiple-Input Multiple-Output மற்றும் உயர் பண்பேற்றம் கொண்ட 256 QAm Quadrature Amplitude Modulation மற்றும் five-component carrier ஆகிய தொழில்நுட்பங்களின் உதவியுடன் 1 நொடிக்கு 1 கிகா பிட் வேகத்தை வாடிக்கையாளருக்கு வழங்க முடியும். மேம்படுத்தப்பட்ட 4.5G LTE Advanced Pro தொழில்நுட்பப் பரிசோதனை நிகழ்வுகள் Huawei Technologies மற்றும் ZTE Corporation ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதுடன், மொபிட்டல் நிறுவனத்துக்குச் சொந்தமான ஆய்வு கூடத்தில் இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. LTE தொழில்நுட்பத்தை எதிர்காலத்துக்கான தொழில்நுட்பமாவதற்கென 4.5G LTE Advanced Pro தொழில்நுட்பமானது மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாக அடையாளம் காணப்பட்டு உலகின் முன்னணித் தொலைத் தொடர்பாடல் நிறுவனங்களான Vodafone, AT&T, Softbank, Telstra, Orange மற்றும் China Mobile ஆகிய நிறுவனங்கள் பரிசீலனை செய்துள்ளதுடன் தற்பொழுது இந்தப் பட்டியலில் SLT மொபிட்டல் நிறுவனமும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

4.5G LTE Advanced Pro தொழில்நுட்பத்தை வெற்றிகரமாகப் பரிசீலித்துப் பார்த்துள்ள SLT மொபிட்டல் நிறுவனம் இந் நாட்டு தொழில்நுட்பத் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இதன் பலனாகத் தமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த சேவையை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இம்மேம்படுத்தப்பட்ட 4.5G LTE Advanced Pro தொழில்நுட்பத்தின் உதவியுடன் எந்தவிதமான தங்குதடைகளுமின்றி மிக வேகமாக மொபைல் இணையசேவையை வழங்க முடியும். இதனூடான ஏனைய தொலைத் தொடர்பாடல் சேவை வழங்கும் நிறுவனங்களைவிட வேகமான சேவையை மொபிட்டலிடமிருந்து பெற்று கொள்ள முடியும். தொலைப் பேசி சேவை யொன்றை நாம் கருத்தில் கொள்ளும்போது வேகமான இணையத் தொடர்பு மிக அவ சியமாவதுடன் வீடியோக் காட்சிகள் பார்வை யிடுவதற்கு மற்றும் இணைய விளையாட்டுகளின்போது இந்தத் தொழில்நுட்பம் மிகச் சிறந்த பயன்பாட்டை வழங்குகின் றது. தொழில்நுட்பத்துடன் தரவுகளைக் கொண்டு செல்லும் காலம் மிகவும் குறை வாகக் காணப்படுவதுடன், நிதிப் பரிமாற் றங்கள் மற்றும் இணையக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற நடவடிக்கைகளையும் இந்தத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மிக இலகுவாக மேற்கொள்ள முடியும்.

## ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளுக்கான

# சேவைகளை நிறுத்துகிறது சிறிலங்கன் விமான நிறுவனம்




கொழும்பு, ஜூன் 28

ஜேர்மனியின் பிராங்போர்ட் மற்றும் பிரான்சின் பரிஸ் நகரங்களுக்கான விமான சேவைகளை நிறுத்தவுள்ளதாக சிறிலங்கன் விமான சேவை நேற்று அறிவித்தது.

பிராங்போட்டில் இருந்து கொழும்புக்கான கடைசி விமான சேவை ஒக்ரோபர் 30 ஆம் திகதி இடம்பெறும். பரிசில் இருந்து கொழும்புக்கான கடைசி விமான சேவை நவம்பர் 6 ஆம் திகதி நடைபெறும் என அந்த நிறுவனம் தெரிவித்தது.

சிறிலங்கன் விமான சேவை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் வருமானம் குறைந்த இந்த இரண்டு வழித்தடங்களிலும் சேவைகளை நிறுத்த சிறிலங்கன் விமான சேவை தீர்மானித்துள்ளது. எனினும், லண்டனுக்கும் கொழும்புக்கும் இடையிலான சேவை தொடர்ந்து இடம்பெறும் என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள் ளது.

இந்திய உபகண்டம், மத்திய கிழக்கு, தூரகிழக்கு நாடுகளுக்கான பயணங்களில் தொடர்ந்து கவனம் செலுத்தவுள்ளதாக சிறிலங்கன் விமான சேவை குறிப்பிட்டுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்

### கருந்துளைகளை ஆராய மிகப் பெரிய தொலைக்காட்டி



பால்வெளியிலுள்ள கருந்துளைகளை இலகுவாக ஆராய முடியுமான விதத்திலான மிகப்பெரிய தொலைகாட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஐரோப்பிய விண்வெளி மையத்துடன் இணைந்து பணியாற்றும் வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

க்ரேவிட்டி என அழைக்கப்படும் தொலைகாட்டி தற்போது இயங்கு நிலையில் உள்ளது. அது மிக துல்லியமாக செயற்படுகின்றது என்று குறித்த வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது நான்கு சிறிய அலகு தொலைகாட்டிகளை இணைக்கும் சக்தியை கொண்டுள்ளது. இந்த நான்கு தொலைகாட்டிகளிலிருந்தும் வரும் ஒளியை ஒருங்கிணைப்பதன் மூலம் மிக திருத்தமான கணிப்புக்களை தருகிறது.

இந்தத் தொலைகாட்டி 130 மீற்றர் விட்டத்தை கொண்டுள்ளது. அதீத சக்தியை பயன்படுத்தி மிக தொலைவிலுள்ள பொருட்களின் அமைவிடத்தை திருத்தமாக கணிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




### உணவுப் பெட்டியில் மின்னேற்றும் வசதி

உலகமெங்கிலும் நிலை கொண்டுள்ள துரித உணவு நிலையமான கே.எப்.சி வாடிக்கையாளர்களை தக்க வைக்கவும், புதிய வாடிக்கையாளர்களை கவரவும் உணவு பெட்டியிலேயே கைபேசிகளை மின்னேற்றம் செய்யும் வசதியை வழங்கவுள்ளது.

இந்த வகையில் புதிய உத்தியாக 5 இன் 12 திட்டம் ஒன்றை கே.எப்.சி அறிமுகப்படுத்தியுள்ளது. வட் எ பொக்ஸ் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள கே.எப்.சியின் உணவு பெட்டியிலேயே கைபேசி மின்னேற்றம் செய்யும் வசதியை ஏற்படுத்தியுள்ளது. உணவு அட்டையின் வெளிப்புறத்தில் இருந்து கைபேசியை இணைத்துச் செய்து கொள்ளும் வகையில் வயர் ஒன்றும் வழங்கப்படுகிறது.

இதனை கொண்டு தொடுதிரைக் கைபேசிகளை மின்னேற்றம் செய்து கொள்ள முடியும். இந்த சேவையானது மிக விரைவில் உலகின் பல்வேறு நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# கிணற்றில் தவறி வீழ்ந்து இளம் பெண் சாவு

மண்கும்பான் 5ஆம் வட்டாரம் பகுதியில் கிணற்றில் வீழ்ந்த வாளியை எடுக்க முற்பட்ட இளம் பெண் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சோம சேகரம் கோசலா (வயது - 20) என்ற இளம் பெண்ணே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து உயிரிழந்தவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. பாத்திரங்கள் கழுவுவதற்காகக் கிணற்றடியில் தண்ணீர் அள்ளியுள்ளார். அதன்போது வாளிக் கயிறு அறுந்து வாளி கிணற்றினுள் விழுந்துள்ளது. அதனை கொக்கத்தடியால் எடுக்க முயன்றுகொண்டிருந்தபோதே தவறிக் கிணற்றினுள் வீழ்ந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் பற்றிய விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எஸ்.தியாகராஜா மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,10)

## தனியார்

இடம்பெறவில்லை. இணைந்த போக்குவரத்து அட்டவணையை நடைமுறைப்படுத்துமாறு கோரி சேவைப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினரை அழைத்து வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், தமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று ஆளுநரை வலியுறுத்தினர். இணைந்த நேர போக்குவரத்து அட்டவணையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை கையெழுத்திட்டிருந்தது. அதற்கமைய அவர்கள் செயற்படவேண்டும் என்றும் கோரினர்.

இரண்டு வாரங்களுக்குள் இதற்குரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக ஆளுநர் உறுதியளித்தார். இதனையடுத்தே நேற்று ஆரம்பித்த சேவைப் புறக்கணிப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

“வடக்கு மாகாண ஆளுநருடைய உறுதிமொழியை அடுத்து எமது போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு வாரங்களில் தீர்வு கிடைக்கும் என்று அவர் உறுதியளித்தார். இரண்டு வாரங்களும் மக்களுடைய போக்குவரத்து தேவைகளைக் கருத்திற்கொண்டு நாம் வழமை போன்று சேவைகளில் ஈடுபடுவோம். அதன் பின்னரும் வாக்குறுதி நிறைவேற்றப்படாது போனால், போராட்டத்தைத் தொடருவோம். இன்றைய தினம் (நேற்று) வெளி மாகாணங்களுக்கான பஸ்களே சேவையில் ஈடுபடும். நாளை முதல் தனியார் பஸ்கள் அனைத்தும் தங்களுடைய சேவைகளை வழமை போன்று ஆரம்பிக்கும்” - என்றார் தனியார் பஸ் உரிமையாளர் சங்கச் செயலாளர் எஸ்.சுதர்சன்.

(வ-5-21-10)

(போராட்டம் குறித்த விரிவு 2ஆம் பக்கத்தில்)


## மரண அறிவித்தல்

### கந்தையா பரமேஸ்வரன்



தோற்றம்: 1953.05.04
மறைவு : 2016.06.26

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட கந்தையா பரமேஸ் வரன் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆவரங்கால் கந்தையா - தங்கம்மா (கைராசி) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கோகுலராணியின் பாசமிகு கணவரும், லயரமணன் (லண்டன்), ராகவன், சங்காயத்திரி, குகனூயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், யோகேஸ்வரன், துரைராஜா, புவனேஸ்வரி மற்றும் ஆனந்தலட்சுமி, புஸ்பராணி, தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், குழந்தைவடிவேல், கவீந்திரன், புனிதவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நல்லூர். (J/2465) (11,17) தகவல்: குடும்பத்தினர்.

021 222 1712, 077 662 1871

## மரண அறிவித்தல்

### விக்ரர் அலோசியஸ் மரியதாஸ்

(பொலிஸ் சாஜன் - பொலிஸ் நிலையம், சுன்னாகம் . பாதுகாப்பு உத்தியோகத்தர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் - யாழ் மாவட்டம்)

மண்ணில் பிறப்பு 1968 . 11 . 03



விண்ணில் பிறப்பு 2016 . 06 . 25

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட விக்டர் அலோசியஸ் மரியதாஸ் 25.06.2016 சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறு விக்டர் - அன்னறெஜினா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் சூசைப்பிள்ளை - மாக்கிறட் தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி யூடித்கொலஸ்ரிக்கா (அதிபர் - வறுத்தலை விளான் அ.மி.த.க பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் அலன்டொனால்ட்(யா/யாழ் மத்திய கல்லூரி தரம் II), றெஜீனாறெறன்சியா (உடுவில் மகளிர் கல்லூரி தரம் -8) டொலின்பவுலா(உடுவில் மகளிர் கல்லூரி - தரம் -7) ஆகியோரின் அன்புத் தந்தையும் மரியசெலஸ்ரீனா (மலேசியா), அல்பிரட் டொமினிக், அன்ரன் மத்தி யூஸ்(மாகாண காணித் திணைக்களம் வ.மா) அலெக்ஸ் பெனடிற், மரியமக்டலீனா(நோர்வே), மரியகொன்சலீனா , அமல்யேசு டொமினிக் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அல்வின்ஸ், அலோசியஸ்தாசன், ஜோன்அரியதாஸ், அமலசோதி, ஜெனோசியஸ், மேரிறோஸ் (பிரான்ஸ்), அருட்திரு.அல்றின்(அ.ம.தி - டென்மார்க்), நெயலின் ஆகியோரின் மைத்துனரும் அருட்திரு. வெ.ஆ.ஜெறோம்(அ.ம.தி) அவர்களின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை(29.06.2016) புதன்கிழமை அன்னாரின் சகோதரின் இல்லத்தில் 8.30 மணிக்கு அஞ்சலி நிகழ்வு நடைபெற்று மு.ப 11.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திரு. வி.அன்ரன் மத்தியூஸ்
இல.40, புனிதஅந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
திருமதி யூ.டெ.அலோசியஸ்
குடும்பத்தினர்.

021 224 0951 / 077 610 7801

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர்
திரு. இராசையா சாந்தகுமார்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி இராசையா சிவம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி செலீன் ஸ்ரீமதி ஜோன் குலசேகரம்



தோற்றம் : 07.11.1963
மறைவு : 25.06.2016

41, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செலீன் ஸ்ரீமதி ஜோன் குலசேகரம் 25.06.2016 சனிக்கிழமை இத்தாலியில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற அகஸ்ரின் அனகிலேட் மற்றும் யூலியானா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை ஞானசோதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஜோன் குலசேகரத்தின் அன்பு மனைவியும் நொயிலின்ஜெயமதி (ஆசிரியர் O.L.R பாடசாலை), ஜலீன்(இத்தாலி), அன்று சிறிதரன்(இத்தாலி) ஆகியோரின் சகோதரியும் ஞானதாஸ், புலோறன்ஸ் ஜெயில் (இத்தாலி), றஞ்சினி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனியும் ஜெனிபர், யூடித்தா (இத்தாலி) ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை றெயியோமிலான் இத்தாலியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாளை (29.06.2016) புதன்கிழமை யாழ் மரியன்னை பேராலயத்தில் காலை 6.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அன்றைய தினம் 41, டேவிட் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் மாலை 5.00 மணியளவில் நிகழும் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

41, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம். (J/2026) (12.17.18)

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

### நாகநாதி இராமலிங்கம்



5ஆம் வட்டாரம் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி இ ர ா ம லி ங் க ம் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி - நாகம்மா தம்பதியரின் மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - மீனாட்சி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, செல்லமுத்து, வள்ளியம்மை, பொன்னம்பலம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகுலராஜா காலஞ்சென்ற சௌந்தரராஜா மற்றும் சரோஜாதேவி, இந்திராதேவி(ஆசிரியை-ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவளம், புஸ்பவதி, பேரின்பதாஸ்(சைபான்), மதிசூடி(N.S.B, காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனும் துசியந்தன்- பபிதா(கனடா), ஜெயந்தன், ஹரிகரன்(கொலன்ட்), மதுஷன்(சைபான்), பிரகாஷ் (பிரான்ஸ்), கௌசிகா, சாருகா, நிலக்ஷன், தர்சிகா ஆகியோரின் பேரனும் சிவானி(கனடா), துஷானி (கனடா), ரிஷி(கனடா) ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், நமசிவாயம், வள்ளியம்மை, பசுபதி மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலிவடக்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை




சகாயபுரம் மாதகலைச் சேர்ந்த

**இராசன் கஜந்தினி வயது -24, மதுமிதா வயது - 6**

(தாயும் மகளும்) ஆகியோரை கடந்த **24.05.2016ஆம்** திகதியிலிருந்து காணவில்லை. இவர்களைக் கண்டவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

சுகந்தி

(கை/2477) (11,17)

**077 621 4837, 077 878 3886**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 08 . 1948

மறைவு 28 . 06 . 2012

### கனகேந்திரம் அன்னலிங்கம்

ஆண்டுகள் நான்கு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 106 ,
இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

26.06.2016 அன்று இறைபதம் அடைந்த வடக்கு, கிழக்கு முன்னாள் உதவிப் பதிவாளர் நாயகம்

**இலட்சுமணன் இராசையா**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. வே. பேரம்பலம்
(முன்னாள் ஊழியர்-
காணி மாவட்டப் பதிவகம், யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு ,
கைதடி.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பிரதி அதிபராகக் கடமையாற்றும்
திருமதி நொய்லின் ஞானதாசன்
அவர்களின் அன்புச் சகோதரி
**திருமதி செலீன் ஸ்ரீமதி ஜோன் குலசேகரம்**
அவர்கள் 25.06.2016 அன்று இத்தாலியில் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்
யா/செனிமேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) நினைவுப் பேருரை**

**'நந்தியின் நாவல்களில் சமூகநோக்கு'**

| | | |
|---|---|---|
| பேருரை வழங்குநர் | : | கலாநிதி ம.இரகுநாதன் தமிழ்த்துறை,கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| இடம் | : | கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| திகதி | : | 29.06.2016 |
| நேரம் | : | பிற்பகல் 3.00 மணி |

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்

(சி/22131) (11,17)

## கொடியேற்றம்

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் நாளை புதன் கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கல்யாணமும் நடைபெறும். (வ-ரி)

## நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.பல்கலைகழகத்தில் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரத்தின் நினைவுச் சொற்பொழிவு நாளை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறும். சொற்பொழிவை, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ரகுநாதன் நிகழ்த்துவார். (ற-ஜூரி4)

## தேவை

களஞ்சிய காப்பாளர்,கணினிஅறிவு,சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் விரும்பத்தக்கது.(ஆண்)
தொடர்பு கொள்ளும் நேரம்:Pm3.00-7.00 மணிவரை

**075 978 9223**

## ஆட்டோ உடன் விற்பனைக்கு

NPYD XXXX TVS ஆட்டோ உடன் விற்பனைக்கு உண்டு.
விலை ரூபா 290, 000/-
தொடர்பு நேரம் : 9-12 , 3-5

**077 8536808**

## வேலையாள்கள் தேவை

01. மேசன் (ரூபா 1200-1500)
02. மேசன் உதவியாளர்
03. வெல்டர், உதவியாளர்
04. அலுமினிய பிற்றிங் தெரிந்தவர்கள்
(சாப்பாடு, தங்குமிடம் வழங்கப்படும்)

**தொடர்பு: 076 8663944**

## மரண அறிவித்தல்

### பழனி சிவப்பிரகாசம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



பிறப்பு 23 . 09 . 1931

இறப்பு 27 . 06 . 2016

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பழனி சிவப்பிரகாசம் நேற்று (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னாச்சிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், இராஜேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும்,ஜெயந்திரகுமார் (தபால் ஊழியர் - சுழிபுரம்), ஜெயராணி, பாலகுமார், பத்மராணி, இன்பராணி (லண்டன்),காலஞ்சென்ற நந்தகுமார், விக்னகுமார் (மேல் நீதிமன்ற ஊழியர் - யாழ்ப்பாணம்),செல்வராணி (பாடசாலை பணியாளர்-குளமங்கால் றோ.க.த.வித்தியாலயம் மல்லாகம்), சேனாதிராஜா, வரதன், பிறேமச்சந்திரன் (லண்டன்), சசிகரன், மனோகரி, தவமலர், பேபிவதனா (உதவிமேற்றன் - அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி) ஆகியோரின் மாமனாரும், பிரணவன், காயத்திரி, கார்த்திகா, காஞ்சனா, சரணவன், நவநீதன், பாமினி, தர்மினி, நர்த்தனன், திரிச்சிகன் (லண்டன்), திருச்சிகா (லண்டன்), விஸ்ணுப்பிரியா, சிவப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/2374) (11,18)

தகவல்: குடும்பத்தினர்.

**077 937 0253, 077 839 2194**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவம் இராசையா

(கார்க்கார அம்மானின் மனைவி)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவம் இராசையா நேற்று (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னப்பு-இராசமணி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சரவணமுத்து (ஓய்வு பெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம்-சாவகச்சேரி), சர்வானந்தன் (நீர்ப்பாசனத் திணைக்களம்-வவுனிக்குளம்), சச்சிதானந்தன் (இளைஞர் சேவை மன்றம்-யாழ்ப்பாணம்), சபானந்தன் (இலங்கைவங்கி வடபிராந்திய காரியாலயம்-யாழ்ப்பாணம்), சாந்தகுமாரி, சாந்தரூபன் (பிரதேசசபை , கொடிகாமம்) ஆகியோரின் அன்புத் தாயும் கிருஸ்ணகுமாரி, கெங்காதேவி , சுகந்தினி, தேவராணி, பத்மகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சபேசன் (மருத்துவபீடம்-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), குகப்பிரியா (சட்டத்துறை-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), சதீஸ்கண்ணா (கட்டார்) , சயந்தினி, கௌசிகா, சுதர்சன், துளசிகா (மாணவி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி), உஷாலினி, யதீபா, சஜீவன், சஜிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொடிகாமம் சோனகம் புலவு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி, கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 1992464, 077 8448024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டங்களால்

கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (விரிவான செய்தி 2 ஆம் பக்கம்)

காணாமற்போனவர்களின் உறவுகளும் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று தமது போராட்டத்தை நடத்தினர். நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலிருந்து, அருகிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் அலுவலகத்துக்குப் பேரணியாகச் சென்றனர். அங்கும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (விரிவான செய்தி 7 ஆம் பக்கம்)

வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலையிலிருந்து மாலை வரையில் இடம்பெற்றது. இதனால் உள்ளூர் விளைபொருள் விற்பனை சேவை முற்றாக முடங்கியது. வடக்கு முதல்வருடன் பேசுவது என்ற உறுதிமொழியை அடுத்து அந்தப் போராட்டமும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. (விரிவான செய்தி 9 ஆம் பக்கம்)

சிறுவருக்கு எதிரான துர்நடத்தையைக் கண்டித்து சாவகச்சேரியில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். (விரிவான செய்தி 7 ஆம் பக்கம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சத்திர சிகிச்சைக்கூடத்தில் மருத்துவர் ஒருவருக்கும் தாதி ஒருவருக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு தரப்பினரதும் தொழிற் சங்கங்கள் ஏட்டிக்குப் போட்டியாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தன. இரு நாள்களுக்கு முன்னர் தாதிய சங்கமும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டமும் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது. (விரிவான செய்தி 2 ஆம் பக்கம்) (வ-5)

## தொடர் உணவு

சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலையிலிருந்து தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பமானது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுடன் மாலையில் கலந்துரையாடினார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வியாழக்கிழமை வவுனியாவுக்கு வருகைதரவுள்ளார். இதன் போது அவருடன் நேரில் பேச்சு நடத்தப்படும். இதனூடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என்ற உறுதிமொழியை அவர் வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் உறுதிமொழியை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தினர் சம்மதித்தனர். இதனையடுத்து பால் பக்கெட் வழங்கி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்து வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர். (போராட்டம் பற்றிய விரிவான செய்தி 09ஆம் பக்கத்தில்). (வ-5)

## ஜெனிவாவில்

வளாகத்தில் நடைபெறவுள்ள இலங்கை விவகாரம் குறித்த உபகுழுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றுவார்.

நாளை புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் சார்பில் 5 நிமிட உரையொன்றை மங்கள சமரவீர ஆற்றவுள்ளார். இதில் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் தற்போதைய நிலமை தொடர்பில் விளக்கமளிப்பார்.

(வ-5)

## காணியையே

தெரிவித்தார் காணியின் உரிமையாளர் சுப்பிரமணியம் தளையசிங்கம்.

வலி. வடக்கில் 201ஏக்கர் நிலப்பரப்பு கடந்த சனிக்கிழமை விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் பயன்பாட்டுக்காக வல்லை - அராலி பிரதான வீதியை விடுவிக்காமல், மக்களின் காணிகள் ஊடாகப் புதிய பாதை அமைக்கப்பட்டு அதுவும் விடுவிக்கப்பட்டது. இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட வீதியில் ஒரு பகுதி தனது காணியின் ஊடாகவே அமைக்கப்பட்டுள்ளதாக தளையசிங்கம் கூறுகின்றார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியினால், அவரது காணி மீளக் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

"அம்பலவாணர் வீதியில் மொத்தம் 11 பரப்பு. எனது உறுதிக்காணி. இத்தனை விடுவித்துள்ளதாக சான்றிதழ் வழங்கினர். அதன் பிரகாரம் எனது காணியைப் பொறுப்பெடுக்கும் ஆர்வத்தில் சென்றேன். எனது ஒன்பதரைப் பரப்புக் காணியை இராணுவம் இன்னும் தனது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கிறது. மீதி ஒன்றரைப் பரப்புக் காணியை வீதியாக்கி வைத்திருக்கின்றது.

குடியிருக்கக் காணியின்றி நாம் வீதியில் அலைய, எனது காணியில் அனுமதியில்லாமல் இராணுவம் வீதி அமைத்துள்ளது. அந்த வீதிக்கு விடுவித்தல் சான்றிதழ் வேறு. அதனை மேடைக்கு அழைத்து வேறு அதை வழங்கினர்" என வேதனையுடன் தெரிவித்தார் தளையசிங்கம்.

(வ-5-10)

## பொருளாதார

உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதால் பயன் எதுவும் கிடைக்காது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜத ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்வதற்காகவே, ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்த இலக்கை அடைய அந்த ஒன்றியத்தால் முடியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் பிரிட்டன் அங்கம் வகித்தாலும், வெளியேறினாலும் உலகப் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க முடியாது.

உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையையும் பாதிக்கும். அமெரிக்காவின் பொருளாதார எதேச்சதிகாரத்தை வீழ்த்தவே, ஐரோப்பிய ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்ததால் பிரிட்டனுக்கு தமது நாட்டு பிரச்சினைகளுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

அத்தோடு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொருளாதாரப் பிரச்சினையால் சிக்கித் தவிக்கும் மக்கள் பிரிட்டனுக்கு இடம்பெயர ஆரம்பித்தனர்.

இதனால் ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதை அந்த நாட்டு மக்கள் ஆதரித்தனர்.

இது பொருளாதார வீழ்ச்சியின் ஒரு பக்கம்தான். அத்தோடு பிரிட்டனின் வெளியேற்றத்தால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு வேறு நாடுகளுடன் இலங்கை அரசு உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதால் எமது நாட்டின் பாதிப்பை தடுக்க முடியாது. ஏனென்றால் முழு உலகமே இன்று பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது - என்றார்.

(வ-5)

## மீண்டும்

வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

விமானக் கொள்வனவு மோசடி, ஜனாதிபதி செயலக வாகனங் களை முறைகேடாகப் பயன் படுத்தியமை மற்றும் சந்தேக நபர் ஒருவரை அச்சுறுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சஜின் வாஸ் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்காக இரகசியப் பொலிஸார், அவரை நேற்றுக்காலை கைது செய்தனர். இந்த நிலையில் நேற்று மாலை அவர் கொழும்பு தலைமை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார்.

சஜின் வாசால் அச்சுறுத்தப்பட்ட நபரை அடுத்த தவணை மன்றில் முற்படுத்துமாறும் நீதிவான் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

(வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சிற்றம்பலம்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில்வீதி, இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சிற்றம்பலம் நேற்று (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லர்-உத்தமி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மயிலு-குழந்தை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, முருகேசு ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, செல்லம் ஆகியோரின் மைத்துனியும் லட்சுமிதாசன், சந்திரவதனா, ரூபதாசன், காலஞ்சென்றறமணிதாசன், பிறேமலதா, சரசவாணி ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர், சிற்றம்பலம், புவனேஸ்வரி, சுசீலாதேவி, மனோகரன், கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும்தாருகாசன், கஜானனன், நிறஞ்சினி, கிரவுஞ்சன், கரிதரன், தனுசன், சுஜீபன், நிஷாந்தி, கிருசாந்தன், நிசானி, அனுதீபன், நீரஜா, கஜதீபன், றஜதீபன், வைதேகி, மயூரதன், அர்ச்சுதன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோண்டாவில் வீதி, இருபாலை. குடும்பத்தினர்.

**077 5250920**

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா பரராஜசிங்கம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மூன்று கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பரராஜசிங்கம் நேற்று (27.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபாகரமூர்த்தி, கிருதரமூர்த்தி, சிவானந்தமூர்த்தி, லோகேஸ்வரமூர்த்தி, ஐங்கரமூர்த்தி, சிலோசனா, சுபாஜினி, கலைவாணி, பத்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூன்று கோயிலடி, உரும்பிராய்.
தகவல்: குடும்பத்தினர்.
077 0457830, 077 7352185

### செல்வி
### சோமசேகரம் கோசலா-மண்கும்பான்

(வேலணை மத்திய கல்லூரி-க.பொ.த. உயர்தரம் 2 ஆம் வருட மாணவி)



வேலணை மண்கும்பானைச் சேர்ந்த செல்வி சோமசேகரம் கோசலா நேற்று (27.06.2016) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சோமசேகரம்-புஸ்பகலாதேவி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை-மாணிக்கம்,சுப்பிரமணியம்-நாகேஸ்வரி தம்பதி யரின் அன்புப் பேர்த்தியும் கோபிகா, கோகுலன், கோகுல தாசன், கோபிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவரூபனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆசிரியர்கள், சகமாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம், மண்கும்பான்,வேலணை.
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழித்துத்துடைத்தது யாழ். மாவட்டம்

கரணவாய், ஜூன் 28
மாகாண மட்ட மேசைப் பந்தாட்டத் தொடரில் இருபால் பிரிவுகளிலும் யாழ். மாவட்ட அணிகள் வெற்றி பெற்று கிண்ணங்களைக் கைப்பற்றின.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றது.

பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின. இதில் 3:0 என்ற நேர்செற் கணக்கில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது. மூன்றாமிடத்தை கிளிநொச்சி தனதாக்கியது. (ம-108)



## துடுப்பாட்டத் தொடர்

கரணவாய், ஜூன் 28
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அழைக்கப்பட்ட பழைய மாணவர் சங்கங்களுக்கு இடையில் துடுப்பாட்டத் தொடர் ஒன்றை விரைவில் நடத்தவுள்ளது.

10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக நடைபெறவுள்ள இந்தத் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும். (ம-23)



# சிலி மீண்டும் சம்பியன் விடைபெற்றார் மெஸ்ஸி

நடப்பு வருடத்துக்கான கோப்பா அமெரிக்கத் தொடரில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி சிலி மீண்டும் சம்பியனானது. ஆர்ஜென்ரீனாவின் அதிர்ச்சித் தோல்வியை அடுத்து அந்த அணியின் தலைவரான மெஸ்ஸி பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

அமெரிக்காவில் நடைபெற்றுவந்த இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில் சிலியும், ஆர்ஜென்ரீனாவும் பலப்பரீட்சை நடத்தின. இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 5.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெற்றது. கடந்த வருடம் நடைபெற்ற கோப்பா அமெரிக்கத் தொடரின் இறுதியாட்டத்திலும் இந்த இரு அணிகளுமே மோதியிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற அந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் சிலி சம்பியனாகியிருந்தது. இதனால் இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா பதிலடிகொடுத்து கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இறுதியாட்டத்துக்கு உரிய பரபரப்புக்களுக்கு பஞ்சம் இல்லாமல் நகர்ந்தது ஆட்டம். கோல் கணக்கு இல்லாமல் உருண்டோடியது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். எதிர்பார்க்கப்பட்டதைப்போல மெஸ்ஸியின் வியூகங்களை ஒன்றன்பின் ஒன்றாக தகர்த்துக் கொண்டிருந்தார் வர்காஸ். வர்காஸ் மெஸ்ஸியை சமாளித்து தற்காப்பு


முடிந்தது மெஸ்ஸியின் ஆட்டம்

முயற்சியில் ஈடுபட்டார். விடாலும் ஏனைய வீரர்களும் தாக்குதல் பாணியை நடைமுறைப்படுத்திக்கொண்டிருந்தனர். இரண்டாம் பாதியுடன் மேலதிக நேரங்களும் முடிந்தாயிற்று கோலெதுவும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மெஸ்ஸி தனது வாய்ப்பை தவறவிட 4:2 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சிலி. மீண்டுமொரு தடவை ஏமாற்றமடைந்தது ஆர் ஜென்ரீனா. இறுதியாட்டத்துக்கு முன்னைய நாள் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில், ஆர்ஜென்ரீனா கிண்ணம் வெல்லும் என மெஸ்ஸி அறிவித்திருந்தார். ஆர்ஜென்ரீனா கிண்ணத்தை தவறவிட்ட நிலையில் அவர் பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து விடைபெற்றார். (ம)

## ஆஸ்திரேலியாவிடம் கிண்ணம்

முத்தரப்புத் தொடரின் கிண்ணத்தைத் தனதாக்கியது ஆஸ்திரேலியா.

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றது. தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இலங்கை நேரப்படி இரவு 11.30 மணிக்கு நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்ப வீரர்களாக கவாயா மற்றும் பின்ஞ். 14 ஓட்டங்களுடன் கவாயாவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் கோல்டர். பின்ஞ், சிமித் இணைய மேலதிக இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது ஆஸி. இருவரும் அரைச்சதத்தை தவறவிட்டனர். பின்ஞ் 47 ஓட்டங்களுடனும், சிமித் 46 ஓடடங்களுடனும் பவிலியன் திரும்ப, மத்திய வரிசையைப் பலப்படுத்தினார் வேட். அவர் மட்டுமே ஆஸியின் சார்பாக அரைச்சதத்தை எட்டியவர். முடிவில் ஆஸ்திரேலியா 270-9.

பந்துவீச்சில் தீவுகளின் சார்பாக கோல்டர், கபிரியேல் இருவரும் தலா இரு இலக்குகளையும், பிரீத்வைட், பொலார்ட், நரைன், பென் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்பம் தடுமாறியது. 9 ஓட்டங்களுடன் பிளெட்சரை வீழ்த்தினார் ஹசில்வூட். பிராவோ, சாமுவேல்ஸ் இருவரையும் அடுத்தடுத்து வீழ்த்தினார் மார்ஷ். சாள்ஸ், ரம்டின் இணை ஓரளவு தாக்குப்பிடித்தது. இலக்கை எடடக்கூடிய அடித்தளம் அமையு முன்னர் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சாள்ஸ். 40 ஓட்டங்களுடன் ரம்டினை போல்ட் செய்தார் ஹசில்வூட். கோல்டர் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் இலக்குகள் சரிய முடிவில் 212 ஓட்டங்களில் சுருண்டது தீவுகள். இதனால் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சம்பியனானது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஹசில்வூட் 5 இலக்குகளையும், மார்ஷ் 3 இலக்கு களையும், கட்டர் நைல், சாம்பா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## உதயசூரியன் சம்பியன்

முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகம் நடத்திய இ.தங்கராசா ஞாபகார்த்த கால்பந்தாட்டத்தொடரில் உதயசூரியன் அணி சம்பியனானது. முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலையோசை அணி மோதியது. 1:0 என்ற உதயசூரியனின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் பதிலடி கொடுத்தது அலையோசை. சமநிலைத் தவிர்ப்பில் கிண்ணத்தை தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது உதயசூரியன் அணி. (ம-102)



## இலங்கை

வேண்டும் என்ற அழுத்தமும் அறிக்கையில் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான வாய் மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேன் இன்று வெளியிடுவார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 30ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, இலங்கை அரசு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என்பது தொடர்பாகவே ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையில் தெரிவிப்பார்.

30ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்தத் தீர்மானத்தில், இலங்கை அரசு நிறைவேற்றியுள்ள விடயங்கள் தொடர்பில் வாய்மூல அறிக்கை 32ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமையவே ஆணையாளர் தனது அறிக்கையை இன்று முன்வைக்கிறார்.

ஆணையாளர் வாய்மூல அறிக்கையை வெளியிட்டதும் இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறும். மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை தொடர்பான விவாதத்தில் பங்கேற்று தமது கண்டனங்களை வெளிப்படுத்தும்.

விசேடமாகப் பன்னாட்டு மன்னிப்புச் சபை, பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட அமைப்புக்கள் இலங்கை தொடர்பான தமது காட்டமான கருத்துக்களை முன்வைக்கும்.

இதேவேளை, போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளைப் பயன்படுத்த இலங்கை அரசு கடந்த ஆண்டு இணங்கியிருந்தது. இருப்பினும் இதிலிருந்து மாறுபட்ட கருத்துக்களை ஜனாதிபதி மைத்திரிபால இப்போது வெளிப்படுத்தி வருகின்றார். இது தொடர்பில் இலங்கையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இந்த அமர்வில் தெரிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (வ-5)

## [illegible]

[illegible] உயிரிழந்த துயரச் சம்பவமொன்று அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

தடைகளையும் தாண்டி இன்று பதிவுத் திருமணம் இடம்பெறவுள்ள சந்தோசத்தில், நேற்றுமுன்தினம் மாலை அநுராதபுரம், பண்டாரபுலன் குளத்தில் படகோட்டச் சென்றிருந்த வேளையிலேயே காதல் ஜோடியின் வாழ்வு இவ்வாறு முடிவுக்கு வந்தது.

புதியதொரு வாழ்வைநோக்கி பாதம் எடுத்துவைக்கக் காத்திருந்த அவர்களின் கனவு, படகு கவிழ்ந்ததால் நிரந்தரமாகவே கலைந்துபோனது. 21வயதான ருவான்குமார என்ற இளைஞனும், 19 வயதான அயோ என்ற இளம் பெண்ணுமே உயிரிழந்தனர்.

குறித்த இளைஞன், அந்த இளம் பெண்ணை நீண்ட காலமாக காதலித்து வந்தார். பதிவுத் திருமணத்துக்காக அவரை தனது கிராமத்துக்கு அழைத்துவந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை இருவரும் படகோட்டுவதற்கு சென்றிருந்தனர். மாலை 6.30 மணியளவிலேயே குளத்தின் நடுப்பகுதியில் படகு கவிழ்ந்தது.

இரவு முழுவதும் தேடியும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. நேற்றுக் காலை கடற்படையினர், பிரதேசவாசிகள் இணைந்து தேடுதல் நடத்தியபோது இருவரினது சடலங்களும் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவத்தால் குறித்த பகுதிபெரும் சோகத்தில் மூழ்கியது. (வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் ஏ.பி. இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 28
கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் ஏ.பி. அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கிருஸ்ரார் வி.கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் ஏ.பி. அணியை எதிர்த்து சுன்னாகம் உதயதாரகை அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏ.பி. அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கஜி 32 ஓட்டங்களையும், சசி 24 ஓட்டங்களையும் சாஜி 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உதயதாரகை அணியின் சார்பில் பகிர், கபில் இருவரும் தலா இரு இலக்குகளையும், ராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய உதயதாரகை அணி 8.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 54 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக பகீரதன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கொக்குவில் ஏ.பி. அணியின் சார்பில் உத்தமன் 4 இலக்குகளையும் சாஜி, பார்த்தீபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கொக்குவில் ஏ.பி. அணியைச் சேர்ந்த கஜி, தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சாஜி இருவரும் தெரிவானார்கள். (ம-422)




# மாகாண பூப்பந்தாட்டம்; மகுடம் சூடியது யாழ்.

கரணவாய், ஜூன் 28
மாகாணமட்ட பூப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வவுனியாவை வீழ்த்தி மகுடம் சூடியது யாழ். அணி

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. 3 தனிநபர் ஆட்டங்கள் மற்றும் இரு இரட்டையர் ஆட்டங்கள் என மொத்தமாக 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்திருந்தது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் யாழின் சார்பாக களமிறங்கிய துசானந், தன்னை எதிர்த்து விளையாடிய சுபேசனை 21:14, 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தார். இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழின் சார்பாக களமிறங்கிய றெமிசன் இரண்டாவது வெற்றியைப் பதிவுசெய்ய யாழ். மாவட்ட அணி 2:0 என்ற செற் கணக்கில் முன்னிலை பெற்றுக் கொடுத்தார். மூன்றாவது தனிநபர் ஆட்டத்தில் வவுனியா மாவட்ட வீரர் தர்சானந், யாழ். மாவட்ட வீரரான கனிஸ்ரனை 24:22, 21:17 என்று தோற்கடித்து தனது அணிக்கான முதல் வெற்றியைப் பதிவுசெய்தார். தொடர்ந்து நடைபெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி வெற்றி பெற்றதையடுத்து அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது. (ம-108)




தேசியமட்ட பளுதூக்கல் தொடரில் சிறந்த வீரனாக இலங்கை விமானப்படை பளுதூக்கல் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த டபிள்யு.ஐ.ஆர்.தனபால தெரிவானார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது. (ம-23)

## வெண்கலம் வென்றது யாழ். அணி

யாழ்ப்பாணம், ஜூன் 28
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட கபடிப் போட்டியில், பெண்கள் பிரிவில் குருநாகல் மாவட்ட அணியை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை தனதாக்கியது யாழ்.மாவட்ட அணி.

கொழும்பு மகரகம தேசிய இளைஞர்மன்ற விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான போட்டியில் யாழ். மாவட்ட இளைஞர் கழக அணியும் குருநாகல் மாவட்ட இளைஞர் கழக அணியும் மோதின. இதில் 31:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கத்தை தனதாக்கியது யாழ். மாவட்ட அணி. (ம-422-108)

## றோயல், பாடும்மீன் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 28
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் றோயல், பாடும்மீன் அணிகள் வெற்றிபெற்றன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மாலை 4:30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வைகறை அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 28
இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சித் தொடரில் வைகறை அணி சம்பியனானது.

அண்ணா வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து ஏ அணி மோதியது. இதில் புதுமடம் வைகறை அணி 6:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் சம்பியனானது. (ம-23)

## யூனியன், கலைமதி அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 28
அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் யூனியன், கலைமதி அணிகள் வெற்றிபெற்றன.

திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து ஆனைக்கோ... ட யூனியன் அணி மோதியது... தில் ஆனைக் கோட்டை யூன... ன் அணி 1:0 என்ற கோல் கண... கில் வெற்றி பெற்றது. மாலை 4.30 மணிக்கு இடம்பெற... ஆட்டத்தில் நவிண்டில் கலை... தி அணியை எதிர்த்து இள... லை யங்ஹென்றிஸ் அ... மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி குறித்த பாடசாலையின் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பாடசாலையின் இயக்குநர் அருட்பணி எஸ். சத்தியராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜா கலந்துகொண்டார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெல்ஜியம் காலிறுதிக்குள்

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் யூரோ கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டமொன்றில் ஹங்கேரியை வீழ்த்தியது பெல்ஜியம். ஆட்டம் ஆரம்பித்து 10ஆவது நிமிடத்தில் பெல்ஜியம் சார்பாக வரெல்டு முதல் கோலைப் பதிவுசெய்தார். சரிவிலிருந்து மீண்டு விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தியது ஹங்கேரி. இதனால் முதல் பாதியின் முடிவுவரை வேறெந்த கோலும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியின் முடிவுக்கட்டம் வரை முடிவு துல்லியமாகக் கணிக்க முடியாததாகவே ஆட்டம் நகர்ந்தது. ஆனால் 75ஆவது நிமிடத்துக்குப் பின்னர் ஆட்டம் அப்படியே பெல்ஜியத்தின் பக்கமாக மாற்றம் பெற்றது. பாட்சுகி 78 ஆவது நிமிடத்திலும், ஈடன் 80 ஆவது நிமிடத்திலும், கிராஸ்கோ 91 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் ஹங்கேரியைப் பந்தாடியது பெல்ஜியம். (ம)



## மாகாணமட்ட எல்லே தொடர் சாவகச்சேரி இந்து. சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 28

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட எல்லே தொடரில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து முல்லைத்தீவு – குமுழமுனை மகா வித்தியாலய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு – குமுழமுனை மகா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துகளில் 12 இலக்குகளை இழந்து 7 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துளசி 3 ஓட்டங்களையும் நிலுக்சி, டிசோபிகா, தணிகா, மேனுஜா ஆகியோர் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 22 பந்துகளில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரக்சிகா, சங்கவி, கஜனி மூவரும் தலா இரு ஓட்டங்களையும், காணுஜா, ஹரினி இருவரும் தலா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர். மூன்றாமிடத்தை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி தனதாக்கியது. (ம-422-23)

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரினை அண்டிய பகுதிகளில் தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு: 021 492 7456 (4/22165) (11.17)

வாடகைக்கு விடப்படும்
இலக்கம் 63 , பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ் றெஸ்ற் என்னும் விடுதியில் மேல்மாடியில் மூன்று அறைகள் நிரந்தரமாகவும் கீழ் உள்ள வீட்டின் அறைகள் தற்காலிகமாக வந்து செல்லும் விருந்தினருக்கும் வாடகைக்கு விடப்படும். மேற்படி அறைகள் தேவைப்படுவோர் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறைகளை முன்பதிவு செய்து கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம்
077 6621255

## ஏமாறினாராம் சாஸ்திரி

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவி கிடைக்காதமை குறித்து ஏமாற்றமடைந்துள்ளதாக ரவிசாஸ்திரி தெரிவித்தார்.

இந்திய அணியின் முகாமையாளராக கடந்த ஓகஸ்ட் 2014 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டுவந்த ரவிசாஸ்திரி, குறித்த காலத்தில் அணியின் பயிற்றுநர் பதவியையும் சேர்த்துக் கவனித்துக் கொண்டார். அண்மையில் நடைபெற்ற இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் தெரிவுக்காக சாஸ்திரியும் விண்ணப்பித்திருந்த நிலையில், அவரைப் புறக்கணித்து கும்ளேயைத் தெரிவுசெய்தது சச்சின், கங்குலி, லக்ஸ்மன் ஆகியோரைக் கொண்ட தெரிவுக் குழு. இந்த நிலையில், புறக்கணிப்பால் தான் ஏமாற்றமடைந்துள்ளதாக சாஸ்திரி வெளிப்படுத்தியுள்ளார்.

இந்திய இளம் அணியை பலமான அணியாக மாற்ற அதிகம் உழைத்தேன். தரவரிசையில் பெரிய முன்னேற்றங்களைக் காணச் செய்தேன். இந்தியாவில் மட்டுமன்றி அன்னிய மண்ணிலும் வெற்றிகளைக் குவிக்கக் கூடிய வகையில் அணியைக் கட்டமைத்தேன். எனவே எனக்கான இந்தப் புறக்கணிப்பு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது என அவர்மேலும் தெரிவித்தார். (ம)

வடிவமைப்பாளர்கள் தேவை
வடமாகாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்துக்கு வேகமும், படைப்பாற்றலும் உடைய கணினி வடிவமைப்பாளர்கள் பகல், இரவு முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ வேலைசெய்யக் கூடிய இருபாலாரும் உடன் தேவை.
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- Adobe Photoshop
- Adobe PageMaker
- CorelDRAW
தெரிந்தவர்கள், பக்க வடிவமைப்பாளரர்கள் தங்கள் சுயவிவரக்கோவையுடன்.
இன்று (28.06.2016) செவ்வாய்க்கிழமை, நாளை (29.06.2016) புதன்கிழமை
காரியாலய நேரத்தில் கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

ES Printers
021 492 7471 / 021 492 7472
357, Kasthuriyar Road, Jaffna.
esprintersjaffna@gmail.com

லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்
பிரதான வீதி, சங்கானை
பதவி வெற்றிடம்
- கிராபிக்ஸ் டிசைனர் (Adobe Photoshop)
- உதவியாளர்கள்
அனுபவமுள்ளவர்கள் / பழக விரும்புபவர்கள்
நேரில் சமுகம் தரவும்.
(ஆண் பெண் இருபாலாரும்)
தொடர்பு: 075 6993331

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 516
சீட்டிழுப்பு திகதி 2016.06.27
வெற்றி இலக்கங்கள்
09 14 16 39 G
ரூ. 61,280,380/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
1274
2016.06.27
வெற்றி இலக்கங்கள்
06 20 35 44 Q
ரூ. 18,189,480/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
016
2016.06.27
வெற்றி இலக்கங்கள்
41 47 48
38361
054
11,058,880/=

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.